# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

இரண்டாம் பதிப்பு
விலை: 30
பக்கங்கள்: 28

சுடர் 33 கதிர் 236 · ஆடி 04ஆம் நாள் வெள்ளிக்கிழமை 20 ஜூலை 2018 வள்ளுவர் ஆண்டு 2049


# திருட்டு வழியில் புதிய அரசமைப்பு

## கூட்டு எதிரணி நேற்று நாடாளுமன்றில் போர்க்கொடி
## சபாநாயகர் தலையிட வேண்டும் எனவும் கோரிக்கை

கொழும்பு, ஜூலை 20

புதிய அரசமைப்பை திருட்டுவழியில் இயற்றுவதற்குரிய முயற்சியில் சுமந்திரன், ஜயம்பதி விக்கிரமரட்ன போன்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஈடுபட்டு வருகின்றனர். நிபுணர்கள் குழுவுக்குக்கூட அழுத்தம் பிரயோகிக்கப்படுகின்றது. இந்த விடயம் தொடர்பில் சபாநாயகர் உடனடியாகக் கவனம் செலுத்தி உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும்.

இவ்வாறு கூட்டு எதிரணி நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேற்று நாடாளு மன்றில் குற்றஞ்சாட்டினர்.

நாடாளுமன்றம் நேற்று முற்பகல் 10 மணிக்கு சபாநாயகர் கரு ஜயசூரிய தலைமையில் கூடியது. சபாநாயகர் அறிவிப்பு, பொது மனுத் >> 06

## நாட்டுக்குத் தீமை தரும் அரசமைப்பு உருவாகாது
### ஐ.தே.க. கூறுகின்றது

கொழும்பு, ஜூலை 20

நாட்டுக்குப் பாதிப்பு ஏற்படும் வகையில் புதிய அரசமைப்பை உருவாக்குவதற்கு இடமளிக்கமாட்டோம் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளரான அமைச்சர் கபீர் ஹாசீம் தெரிவித்தார்.

அரசலமைப்பு நிர்ணய சபையின் வழிநடத்தும் குழுக் கூட்டத்தில் நேற்றுமுன்தினம் நிபுணர்குழுவால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர சபையில் நேற்று கேள்வியெ >> 06

## வழிநடத்தும் குழுவால் அறிக்கை நிராகரிப்பு

கொழும்பு, ஜூலை 20

பொது இணக்கப்பாடின்றி நிபுணர்கள் குழுவால் முன்வைக்கப்பட்ட அறிக்கை அரசமைப்பு நிர்ணய சபையின் வழிநடத்தும்குழுவால்நிராகரிக்கப்பட்டுள்ளது என்று குழுவின் உறுப்பினரான அநுர குமார திஸாநாயக்க தெரிவித் >> 25

## புதிய அம்புலன்ஸ் சேவை வடக்கில் ஞாயிறு ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூலை 20

வடக்கில் இந்திய அரசின் உதவியுடன் ஆரம்பிக்கப்படும் நோயாளர் காவு வண்டிச் சேவை நாளைமறுதினம் ஆரம்பிக்கப்படவுள்ளது.

ஆரம்ப நிகழ்வு மாலை 3.30 மணிக்கு யாழ்ப்பாணம் மாநகர சபை மைதானத்தில் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வில் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க, தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகாரங்கள் அமைச்சர் ஹர்ச டி சில்வா, வடக்கு மாகாண >> 06

## போர் வானூர்திகள் எவையும் மத்தளவில் இறங்க முடியாது
### டில்லிக்கான நிபந்தனைகளில் கொழும்பு அரசு உடும்புப்பிடி

கொழும்பு, ஜூலை 20

போர் நடவடிக்கைகளுக்காக வானூர்தித் தளத்தைப் பயன்படுத்தமுடியாது என்பது உட்பட மேலும் சில முக்கிய முன்நிபந்தனைகளின் அடிப்படையிலேயே மத்தள வானூர்தித் தளத்தின் முகாமைத்துவம் இந்தியாவுக்கு வழங்கப்ப >> 06

## விஜயகலா சர்ச்சைக்கு ஓரிரு நாள்களில் முடிவு
### ஐக்கிய தேசியக் கட்சி தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 20

விடுதலைப்புலிகள் தொடர்பில் சர்ச்சைக்குரிய கருத்தை வெளியிட்டிருந்த முன்னாள் இராஜாங்க >> 25

## த.தே.கூட்டமைப்பு உயர்மட்ட குழுவை கூட்டக் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 20

வடக்கு கிழக்கு மாகாண சபைத் தேர்தல் உள்ளிட்ட விடயங்களை ஆராய்வதற்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உயர்மட்டக் குழுக் கூட்டத்தை கூட்ட வேண்டும் >> 06

## 1990

யாழ்ப்பாணம், ஜூலை 20

தற்போது புதிதாக 1990 நோயாளர் காவு வண்டிச் சேவைகள் அறிமுகப்படுத்தப்படவுள்ளதால் இதுவரை நடைமுறைப்படுத்தப்பட்ட 0212224444, 0212225555 என்ற அழைப்பு எண்களுடன் கூடிய >> 06

## நள்ளிரவில் வீடு புகுந்து மிரட்டி எழுதுமட்டுவாழில் கொள்ளை!

தென்மராட்சி, ஜூலை 20

வர்த்தகரின் வீட்டுக்குள் நள்ளிரவுவேளை புகுந்த நால்வர் வீட்டிலிருந்தவர்களை வாள்களைக் காட்டி அச்சுறுத்தி நகைகள், பணம் என்பவற்றைக் கொள்ளையடித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் நள்ளிரவு 12.30 மணியளவில் எழுதுமட்டுவாழ் கிழக்கில் நடந்துள்ளது.

அந்தப் பகுதியில் வீட்டுடன் சேர்ந்த வியாபார நிலையத்தை நடத்தும் சோ.நிமலன் என்பவரது வீட்டிலேயே இந்தக் கொள்ளைச் சம்பவம் நடந் >> 06

## பொன்னாலை மடத்தை விடுவித்தது கடற்படை

யாழ்ப்பாணம், ஜூலை 20

பொன்னாலை வரதராஜப் பெருமாள் ஆலயத்துக்கு அண்மையில் ஆலய அன்னதான மடத்தில் தங்கி >> 24

## பாலியல் குற்றம் சாட்டப்பட்ட ஆசிரியருக்கு மன்று பிணை
### நிர்வாகப் பழிவாங்கல் என்று சட்டத்தரணி சுட்டிக்காட்டு

>> 24

## நெடுங்கேணியில் புதையல் தோண்டிய 5 பேர் சிக்கினர்!

யாழ்ப்பாணம், ஜூலை 20

நெடுங்கேணி, பட்டிக்குடியிருப்பில் புதையல் தோண்டினர் என்ற குற்றச்சாட்டில் >> 25

## அரசியல் கைதிகள் விடுதலையை வலியுறுத்திக் கொழும்பில் கூட்டம்

கொழும்பு, ஜூலை 20

தமிழ் அரசியல் கைதிகளை விடுவிக்க வலியுறுத்தி நாளை சனிக்கிழமை விசேட கூட்டமொன்று கொழும்பில் நடைபெறவுள்ளது.

அரசியல் கைதிகளை விடுதலைசெய்வதற் >> 06

## தொழில் சந்தை நாளை .

யாழ்ப்பாணம், ஜூலை 20

யாழ்ப்பாண மாவட்டச் செயலக மனிதவலு வேலை வாய்ப்புத் திணைக்களத்தின் தொழிற்சந்தை நாளை சனிக் கிழமை இடம்பெறவுள்ளது. அதில் 42 நிறுவனங்க >> 06

### இளஞ்செழியன் பாதுகாவலர் மீது சூடு:
## எதிரிகளின் விளக்கமறியலை ஓராண்டு நீடிக்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 20

நீதிபதி இளஞ்செழியனின் பொலிஸ் பாதுகாப்புப் பணியாளர் துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்ட வழக்கில், எதிரிகளின் விளக்கமறியலை மேலும் ஒரு வருடத்துக்கு நீடிக்குமாறு சட்டமா அதிபர் திணைக்களம் நீதிமன்றில் கோரியுள்ளது.

யாழ்ப்பாண மேல்நீதிமன்றில் நீதிபதி அ.பிரேமசங்கர் முன்னிலையில், அரச சட்டவாதி நாகரட்ணம் நிஷாந் >> 25

## அனுமதியின்றி மருதங்கேணியில் கடலட்டை பிடிப்போர் கைதாவர்
### நீரியல் வளத்துறைத்துறை அமைச்சர் சொய்சா எச்சரிக்கை

கொழும்பு, ஜூலை 20

வடக்கு தெற்கில் வாழும் மீனவர்களுக்கிடையில் பிரிவினை ஏற்படுத்த வேண்டாம். இரு பகுதியினரும் ஒத்துழைப்புடன் மீன்பிடியில் ஈடுப்படுவதற்கு அரசியல்வாதிகள் ஆதரவு வழங்க வேண்டும். வடமராட்சி கிழக்கு மருதங்கேணியில் >> 06




இது தான்
சரியான நேரம்
DFCC லீசிங்
வாழ்க்கையில் சரியான நேரத்தில் சரியான பயணத்திற்கு கார் ஒன்றை எடுத்துச் செல்லுங்கள்.

நாடு முழுவதும் பரந்துள்ள கிளை வலையமைப்பு மற்றும் நெகிழ்ச்சித் தன்மையுள்ள சேவைகள் பலவற்றை தருகிறது DFCC லீசிங்.
கார் ஒன்றை வாங்க சிறந்த லீசிங்.

அழையுங்கள் 0112 350000

DFCC லீசிங்

24 மணிநேர அழைப்பு மையம்: 0112 350000
www.dfcc.lk

DFCC வங்கி

# இலங்கைக்கு கடத்தவிருந்த 304 கிலோ கஞ்சா சிக்கியது!

## தமிழகப் பொலிஸாரின் திடீர்ச் சோதனையில்

**சென்னை, ஜூலை 20**
**இலங்கைக்குக் கடத்தப்படவிருந்த 304 கிலோ கஞ்சா தமிழகத்தில் கைப்பற்றப்பட்டுள்ளது என்று தமிழகப் பொலிஸார் தெரிவித்தனர்.**





அங்குள்ள உச்சிப்புளி என்னும் இடத்தில் சீனியப்பாதர்ஹா கடற்கரையிலேயே கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது. பொலிஸார் மேற்கொண்ட சோதனை நடவடிக்கையில் கஞ்சா கைப்பற்றது என்றும், சந்தேகநபர்கள் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் அந்த நாட்டு அதிகாரிகள் தெரிவித்தனர்.
பொலிஸாருக்குக் கிடைத்த தகவலை அடுத்தேகஞ்சாகைப்பற்றப்பட்டுள்ளது. கஞ்சா 152 மூட்டைகளில் பொதியிடப்பட்டிருந்துள்ளது. கைது செய்யப்பட்டவர்கள் மண்டபம் பொலிஸ் நிலையத்துக்குக் கொண்டு செல்லப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.
கைப்பற்றப்பட்ட கஞ்சாவின் பெறுமதி இந்திய ரூபாபடி சுமார் 50 இலட்சம் ரூபா என்று அந்த நாட்டு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (ரி4)

## இனந்தெரியா நபர்கள் பெண் மீது தாக்குதல்

தென்மராட்சி, ஜூலை 20
முகத்தை மறைத்தவாறு வளவுக்குள் அத்துமீறி நுழைந்த இனந்தெரியா நால்வர் அங்கிருந்த குடும்பப் பெண்ணொருவரைத் தாக்கியுள்ளனர்.
இந்தச் சம்பவம் சாவகச்சேரி அல்லாரை தெற்கில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.
தாக்குதலுக்கு இலக்காகிய பெண் கை முறிந்த நிலையில் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார்.
தாக்குதல் சம்பவம் தொடர்பான விசாரணைகளை சாவகச்சேரிப் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ரி4,9)

## பிரதேச செயலருக்கு 5 ஆண்டு சிறை

கொழும்பு, ஜூலை 20
இலஞ்சம் பெற்றார் என்ற குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட அக்குரனைப் பிரதேச செயலருக்கு 5 ஆண்டுசிறைத்தண்டணைவிதிக்கப்பட்டது.
கொழும்புமேல்நீதிமன்றில்சந்தேகநபர் நேற்று முற்படுத்தப்பட்டார் இதன்போதே இந்த உத்தரவுபிறப்பிக்கப்பட்டது. கடந்த 2013 ஆம் ஆண்டு 50 ஆயிரம் ரூபா இலஞ்சமாகப் பெற்றுக்கொண்டார் என்ற குற்றச்சாட்டில் சந்தேகநபர் கைது செய்யப்பட்டார். (ரி4)

## வவுனியாவில் கெரொயின் வைத்திருந்த இருவர் கைது

வவுனியா, ஜூலை 20
வவுனியாவில் கெரொயின் வைத்திருந்த குற்றச்சாட்டில் இருவர் கைதுசெய்யபட்டனர்.
இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் நடைபெற்றது என்று பொலிஸார் தெரிவித்தனர். வன்னிப் பிரதிப்பொலிஸ்மா அதிபரின் கீழ் செயற்படும் சிறப்புப் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டனர்.
வவுனியா சுற்றுவட்ட வீதியில் அமைந்துள்ள வங்கிக்கு அருகில் ஒருவர் கைதுசெய்யபட்டார்.
அவரிடமிருந்து 40 மில்லிகிராம் கெரொயின் கைப்பற்றப்பட்டது.
மருக்காரம்பளை மதுபான நிலையத்துக்கு அருகில் மற்றொருவர் கைதுசெய்யபட்டார். அவரிடமிருந்து 70 மில்லிகிராம் கெரொயின் கைப்பற்றப்பட்டது. கைது செய்யப்பட்டவர்கள் கோவில்குளம், மற்றும் தேக்கவத்தைப் பகுதிகளைச் சேர்ந்தவர்கள். சந்தேகநபர்களை நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளைப் பொலிஸார் மேற்கொண்டனர். (ரி4,110)

## தென்மராட்சியில் தொடரும் கருங்குளவித் தாக்குதல்கள்

### தாக்குதலுக்கு இலக்காகிய இளைஞன் மருத்துவமனையில்

தென்மராட்சி ஜூலை 20
கருங்குளவிகளின் தாக்குதலுக்கு இலக்காகிய இளைஞன் ஒருவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.
இந்தச்சம்பவம்மிருசுவில்வடக்கில்நேற்றுமுன்தினம்நடைபெற்றது.
பனை மரங்கள் அதிகம் காணப்படும் நடைபாதையூடாகச் சென்ற இளைஞனை பனை ஓலைகளுக்குள் இருந்து வெளிவந்தகருங்குளவிகள்மெய்த்துக்கொட்டினஎனக்கூறப்பட்டது.
இதே போன்று கடந்த வாரம் 70 வயதுடைய மூதாட்டி ஒருவரையும் குளவிகள் கொட்டியுள்ளன.
தென்மராட்சிப் பிரதேசத்தில் காற்றின் வேகம் அதிகரித்துள்ளது.
இதனால்பனைமரங்களிலிருந்துவிழும்ஓலைககளுக்குள்ளிருந்துவெளிவரும்கருங்குளவிகளின்தாக்குதல்கள்அதிகரித்துள்ளன.
கடந்தஇருமாதங்களில்கருங்குளவிக்கொட்டுக்குஇலக்கான 50க்குமேற்பட்டோர் மருத்துவமனையில்சிகிச்சைபெற்றுள்ளனர். (ரி4,9)

## பேருந்தில்வந்தபெண்ணின் பணத்தைபறித்தஇளைஞர்

### விரட்டிப் பிடித்தபோதும் அச்சுறுத்தி தப்பியோட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 20
யாழ்ப்பாணம் ஐந்து சந்தியில் பேருந்தில் இருந்து இறங்கிய இளம்பெண்ணின் பணப்பையை இளைஞர் ஒருவர் பறித்துக் கொண்டு தப்பிச் சென்றுள்ளார். அந்த இளைஞரை கஸ்தூரியார் வீதிவரை இளம்பெண் துரத்திச் சென்றபோதும்வேறுஎவரும்ஒத்துழைக்காததால் இளைஞரைப் பிடிக்க முடியவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.
இந்தச் சம்பவம் நேற்றுக்காலை 8 மணியளவில்நடந்துள்ளது. மானிப்பாயில் இருந்து பேருந்தில் பயணித்த யுவதி ஐந்து சந்தியில் இறங்கியுள்ளாார். அந்தப்பகுதியில்நின்றிருந்தஇளைஞர்இளம்பெண்ணின் கைப்பையைப் பறித்துள்ளார். அதிலிருந்த பணத்தை எடுத்துக் கொண்டு கைப்பையை எறிந்து விட்டு தப்பியோடியுள்ளார். இளம்பெண் மோட்டார்சைக்கிளில் வந்தஒருவரின்உதவியுடன்இளைஞரைத் துரத்திச் சென்றுள்ளார். இளைஞன் ஸ்ரான்லி வீதியூடாக கஸ்தூரியார் வீதியை அடைந்தபோதுஇளைஞரைமடக்கியுள்ளார். வீதியால் சென்றவர்களிடம் இளைஞரைப் பிடிக்க உதவி கோரியுள்ளார். அங்கிருந்த ஒருவர் இளைஞனைப் பிடிக்க முயன்றுள் ளார். நெருங்கினால் கத்தியால் குத்துவேன் என்று அச்சுறுத்திய இளைஞர் அங்கிருந்து தப்பியோடினார் என்றுதெரிவிக்கப்பட்டது. (ரி4,105)

## யானைத் தந்தம் வைத்திருந்த மூவர் கைது

கண்டி, ஜூலை 20
கண்டி,பொல்கொல்லவில்யானைத் தந்தம் வைத்திருந்தனர் என்ற குற்றச்சாட்டில்மூன்றுபோர்கைதுசெய்யப்பட்டனர். சந்தேகநபர்கள் நேற்றுக் கைதுசெய்யப்பட்டனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர். கண்டி வலயப் பொலிஸ் சட்ட அமுலாக்க பிரிவு அதிகாரிகளால் நடத்தப்பட்ட சுற்றிவளைப்பின் போதே சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டனர்.
50 ஆயிரத்து 30 மில்லி கிராம் நிறையுடைய யானைத்தந்தம் சந்தேகநபர்களிடமிருந்து கைப்பற்றப்பட்டது.
சந்தேகநபர்களைகண்டிநீதவான் நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளைப் கண்டி பொலிஸார் மேற்கொண்டனர். (ரி4)



## ஆடுகளைக் கடத்த முற்பட்ட இருவர் கைது

கிளிநொச்சி, ஜூலை 20
கிளிநொச்சி இரணைமடுவிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு அனுமதிப்பத்திரமின்றி ஆடுகளை ஏற்றி வருவதற்கு முயற்சித்தனர் என்ற குற்றச்சாட்டில் இருவர் கைதுசெய்யப்பட்டனர் என்று கிளிநொச்சிமாவட்டப்போதைப்பொருள்மற்றும் துர்நடத்தைத் தடுப்புப் பிரிவின் பொறுப்பதிகாரி சதுரங்கதெரிவித்தார்.
இந்தச்சம்பவம் இரணைமடுவில் நேற்று இடம்பெற்றது. கிளிநொச்சி மாவட்ட மூத்த பொலிஸ் அத்தியட்சகர் பாலித்த ஆர் சிறீவர்த்தனவின் கண்காணிப்பின் கீழ் இயங்கி வரும் கிளிநொச்சி மாவட்டப் போதைப்பொருள் மற்றும் துர்நடத்தைத் தடுப்பு பிரிவின் பொறுப்பதிகாரி சதுரங்கவுக்குக் கிடைத்த தகவலையடுத்து சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டனர்.
இதன்போதே4ஆடுகள், வாகனம்என்பனகைப்பற்றப்பட்டதுடன்இருவர்கைதுசெய்யப்பட்டனர்.
சந்தேகநபர்களை நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளைப் பொலிஸார் மேற்கொண்டனர். (ரி4,6)

## புலிகளின் பசிலன் ஆட்டிலறிகள் மீட்பு

முல்லைத்தீவு, ஜூலை 20
முல்லைத்தீவு சுதந்திரபுரம் பகுதியில் அபாயகரமான வெடிபொருள்கள் சில நேற்றுமுன்தினம் மீட்கப்பட்டுள்ளன என்று புதுக்குடியிருப்புப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.
காணி ஒன்றில் சீரற்றுக் காணப்பட்ட கிணற்றைச் சுத்தம் செய்யும் போது கிணற்றிலிருந்து அபயகரமான வெடிபொருள்கள் கண்டெடுக்கப்பட்டன.
காணி உரிமையாளரால் பொலிஸாருக்கு வழங்கப்பட்ட தகவலையடுத்து சுதந்திரபுரம் சிறப்பு இராணுவத்தினர் அகழ்வுப் பணியில் ஈடுபட்டனர். விடுதலைப் புலிகளின் தயாரிப்பில் உருவாகிய பசீலன் 2 ஆயிரம் ஆட்லறி செல் இரண்டு உள்ளிட்ட இராணுவ வெடிபொருள்கள் சில மீட்கப்பட்டுள்ளன. அகழ்வுப் பணி நேற்றுமுன்தினம் பிற்பகல் தற்காலிகமாக இடை நிறுத்தப்பட்டது. நீதிமன்றத்தின் அனுமதியுடன் அகழ்வுப் பணி நேற்று ஆரம்பமானது. சம்பவ இடத்துக்கு நீதிமன்றப் பதிவாளர் உள்ளிட்ட அதிகாரிகள் சென்றிருந்தனர். (ரி4,21)





# கைத்தொழில் முயற்சியாளரை ஊக்குவிப்பதற்குக் கண்காட்சி

## 28ஆம், 29ஆம் திகதிகளில் யாழ். வேம்படியில் ஆரம்பம்

**யாழ்ப்பாணம், ஜூலை 20**

**கைத்தறி மற்றும் கைவினைப் பொருள்களின் உற்பத்தியை வடக்கில் ஊக்குவிக்கும் வகையில் வடக்கு மாகாண தொழிற்றுறைத் திணைக்களம் கண்காட்சி ஒன்றை ஏற்பாடு செய்துள்ளது. இந்தக் கண்காட்சி எதிர்வரும் 28ஆம், 29 ஆம் திகதிகளில் யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் நடைபெறவுள்ளது.**

வடக்கு மாகாண சபை இயங்க ஆரம்பித்தது முதல் இந்தக் கண்காட்சி வருடா வருடம் நடத்தப்படுகின்றது. இந்த முறை மத்திய வங்கி, தேசிய் அருங்கலைகள் பேரவை, புடைவைக் கைத்தொழில் திணைக்களம் என்பவும் இணைந்து கண்காட்சியை நடத்துகின்றன. இந்தக் கண்காட்சியில் வடக்கு மாகாணத்தின் அனைத்து மாவட்டங்களைச் சேர்ந்த உற்பத்தியாளர்கள் பங்குகொள்கின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது.

கைத்தெறி நெசவு உற்பத்திகள், களிமண்உற்பத்திகள், தும்பு ஓலை புல் சார்ந்த உற்பத்திகள், பிரம்பு முங்கில் குழாய் சார்ந்த உற்பத்திகள், உலோகக் கைப் பணிப்பொருள்கள், ஆபரணங்கள், சங்கீத உபகரணங்கள், துணி களிலான கைப்பணிப் பொருள்கள், சிரட்டையிலான கைப்பணிப்பொருள்கள் , சிப்பியிலான கைப்பணிப் பொருள்கள், மர உற்பத்திப் பொருள்கள், தோற் பொருள்கள், கல்லாலான கைப் பணிப்பொருள்கள், பாரம்பரியக் கலை வரைபுகளும்சிற்பங்களும், தென்னை பனை கித்துள் சார்ந்த உற்பத்திகள், நானாவித கைப்பணிப் பொருள்கள், நினைவுச் சின்னங்கள் போன்ற பலவகையான உற்பத்திப் பொருள்கள் இந்தக் கண்காட்சியில் காட்சிப்படுத்தப்படவுள்ளன. கைத்தொழிலில் ஈடுபடும் உற்பத்தியாளர்களை வெளிக்கொணர்ந்து அவர்களுடைய திறன்விருத்தியை அடையாளப்படுத்துவதுடன், அவர்களுக்கான சந்தை வாய்ப்பை ஊக்குவிக்கும் முகமாக கண்காட்சி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. 65 விற்பனை மற்றும் செய்முறைக் கூடங்கள் கண்காட்சியில் அமைத்துக்கொடுக்கப்படவுள்ளன.

வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டு கண்காட்சியை ஆரம்பித்து வைக்கவுள்ளார். கடந்த ஆண்டு நடத்தப்பட்ட கண்காட்சியில் 318 வகையான பொருள்கள் காட்சிப்படுத்தப்பட்டன. உற்பத்தியாளர்கள் 229 பேருக்கு பரிசில்கள் வழங்கப்பட்டன. இந்த முறை கண்காட்சியில் தெரிவு செய்யப்படும் 3 ஆக்கங்களுக்கு தேசிய ரீதியில் நடைபெறவுள்ள "சில்ப அபிமானி" அரசதலைவர் கைப்பணிகள் போட்டி மற்றும் கண்காட்சிக்கும் , தேசிய கைத்தறி கைத்தொழில் கண்காட்சிக்கும் அனுப்பபடவுள்ளன. அத்துடன் கண்காட்சியில் தெரிவு செய்யப்படும் ஆக்கங்களுக்கு கண்காட்சியின் போது விருதுகள் வழங்கப்படும் என்று வடக்கு மாகாண தொழிற்றுறைத் திணைக் களம் தெரிவித்தது. (ரி4,114)

# இராணுவ முகாம் அகற்றுவது தொடர்பான கலந்துரையாடல்

திருகோணமலை,ஜூலை 20

தோப்பூர் கல்லம்பத்தை கிராமத்தில் அமைந்திருக்கும் பத்து வீட்டுத்திட்ட இராணுவ முகாமை அகற்றுவது தொடர்பான கலந்துரையாடல் கொழும்பில் நேற்று இடம்பெற்றது.

இராணுவத்தளபதி லெப்டினன்ட் ஜெனரல் மஹேஸ் சேனநாயக்க மற்றும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.தௌபீக் ஆகியோர் இந்தக் கலந்துரையாடலில் ஈடுபட்டனர்.

மிக விரைவில் கல்லம்பத்தை கிராம மக்களிடம் அவர்களுக்குச் சொந்தமான காணியும் வீடுகளும் கையளிக்கப்பட்டும் என்றும் முகாம் அமைப்பதற்கான நிதியைப் பெற்றுக்கொள்வதற்கான முயற்சியில் ஈடுபட்டுள்ளோம் என்று நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.தௌபீக்கு இராணுவத் தளபதி தெரிவித்தார். (ரி4,40)

# மண் அகழ்வில் ஈடுபட்ட நால்வர் கைது

கிளிநொச்சி, ஜூலை 20

அனுமதியின்றி சுண்டிக்குளம் வனப்பகுதியில் மண் அகழ்வில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் நான்கு பேர் கைதுசெய்யப்பட்டதுடன் உழவியந்திரங்களும் கைப்பற்றப்பட்டன. இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றது என்று கிளிநொச்சி மாவட்ட போதைப்பொருள் மற்றும் துர்நடத்தைத் தடுப்புப் பிரிவின் பொறுப்பதிகாரி சதுரங்க தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட்ட மூத்த பொலிஸ் அத்தியட்சகர் பாலித்த ஆர் சிறீவர்த்தனவின் கண்காணிப்பின் கீழ் இயங்கி வரும் கிளிநொச்சி மாவட்ட போதைப்பொருள் மற்றும் துர்நடத்தைத் தடுப்பு பிரிவின் பொறுப்பதிகாரி சதுரங்கவுக்குக் கிடைத்த தவலையடுத்து சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டனர்.

தொடர்ச்சியான மணல் கொள்ளை இடம்பெறுவதால் சுண்டிக்குளம் வனப்பகுதி பள்ளமாகக் காட்சி அழிப்பதாக பொறுப்பதிகாரி சதுரங்க தெரிவித்தார்.

கைது செய்யப்பட்ட உழவியந்திர சாரதிகள் தருமபுரம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன. உழவியந்திரங்களும் பாரப்படுத்தப்பட்டன.

மேலதிக விசாரணைகளை தருமபுரம் பொலிஸார் மேற்கொண்டனர். (ரி4,6)



# மன்னார் சதொச வளாகத்தில் விரிவாக்கப்படும் அகழ்வுகள்

## தோண்டப்படும் இடங்களில் எலும்புகள் தென்படுவதால்

மன்னார், ஜூலை 20

மன்னார் சதொச வளாகத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் அகழ்வுப் பணிகள் விரிவு படுத்தப்படவுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது. அகழ்வு மேற்கொள்ளப்படும் இடங்களில் மனித எலும்பு எச்சங்கள் கண்டுபிடிக்கப்படுவதை அடுத்தே இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படுகின்றது.

நேற்று ஏற்கனவே கண்டுபிடிக்கப்பட்ட எலும்பு எச்சங்கள், மண்டையோடுகளைத் துப்புரவாக்கும் நடவடிக்கைகளும், அகழ்வை விரிவு படுத்துவதற்காக மணல் அகழ்வும் மேற்கொள்ளப்பட்டன. இந்தப் பணிகள் மன்னார் மாவட்ட நீதிவான் ரி.ஜே.பிரபாகரனின் மேற்பார்வையில் சிறப்பு சட்ட மருத்துவ அதிகாரி டபிள்யூ. ஆர்.ஏ.எஸ்.ராஜபக்ச தலைமையில் அகழ்வுகள் நடைபெறுகின்றன.

மன்னார் நகர நுழைவாயிலில் அமைந்திருந்த லங்கா சதொச கட்டடம் உடைக்கப்பட்டு புதிய கட்டடம் அமைக்கும் பணிகள் நடைபெற்றன. அந்தக் காணியில் அகழப்படும் மண் விற்பனை செய்யப்படுகின்றது. அங்கு கொள்வனவு செய்யப்பட்டு மன்னார், எமில் நகரில் வீடொன்றில் கொட்டப்பட்ட மண்ணில் மனித எலும்பு எச்சங்கள் காணப்படுகின்றன என்று வீட்டு உரிமையாளரால் முறைப்பாடு செய்யப்பட்டது.

பொலிஸார் அங்கு சென்று மண்ணை ஆராய்ந்ததுடன், மன்னார் நீதிமன்றின் கவனத்துக்கும் கொண்டு வந்திருந்தனர். மார்ச் 27ஆம் திகதி முதல் தொடர்ச்சியாக 3 நாள்கள் மன்னார் நீதிவான் ஏ.ஜீ.அலெக்ஸ்ராஜா மற்றும் சட்ட மருத்துவ அதிகாரி ஆகியோர் முன்னிலையில் மண் குவியலில் இருந்தும், வீட்டு வளாகத்துக்குள் பரப்பப்பட்ட மண்ணிலிருந்தும் சந்தேகத்துக்கிடமான எலும்புத் துண்டுகள் மீட்கப்பட்டன. அதையடுத்து லங்கா சதொச கட்டட அமைப்புப் பணிகள் இடைநிறுத்தப்பட்டன.

அதைத் தொடர்ந்த அகழ்வுப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. (ரி4,60)



நேர்மையான முறையில் FRANCE/ ITALY நாட்டினை சென்றடைய விரும்பும் 30 வயதுக்குட்பட்ட இருபாலருக்கும் அரிய வாய்ப்பு!

- எங்குமில்லாத மிகக் குறைந்த கட்டணம்
- 1 - 3 மாத கால விசா
- குடும்பமாகவும் செல்லலாம்
- 100 % விசா உத்தரவாதம்
- 40 வேலை நாள்களுக்குள் பயணமாகலாம்

முதலில் வரும் 10 பேருக்கு மாத்திரமே இவ் அரிய வாய்ப்பு!

உங்கள் கனவு நாட்டினை நேர்மையாக சென்றடைய 5 வருட கால தமிழ் மக்களின் நம்பிக்கையை வென்ற WINSTAR உடன் இணையுங்கள்.

WINSTAR CONSULTANTS PVT LTD
45, VEMBADI STREET, JAFFNA.
021 300 4641/ 070 236 3676
www. winstarjaffna.com

# நல்ல தண்ணீர்க் கிணறுகள் உவர் நீராக மாறுகின்றன

## தண்ணீரைச் சிக்கனமாகப் பயன்படுத்துமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 20

யாழ்ப்பாணம் வேலணைப் பிரதேச சபைக்கு உட்பட்ட நல்ல தண்ணீர் கிணறுகள் உவர் நீராக மாறிவருவதால் தண்ணீரை சிக்கனமாக பயன்படுத்துமாறு வேலணைப் பிரதேச சபைத் தவிசாளர் ந.கருணாகரகுருமூர்த்தி தெரிவித்தார்.

வேலணைப் பிரதேச சபை, நீ வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் ஊடாக மக்களுக்கு குடிதண்ணீர் வழங்கப்பட்டுவருகின்றது. ஒரு நாளைக்கு 3 இலட்சம் லீற்றர் தண்ணீர்த் தாங்கி மற்றும் குழாய் மூலமாக வழங்கப்படுகின்றது.

இது தவிர ஆலயத்திருவிழாக்கள் மற்றும் சுப காரியங்களுக்கும் தேவையான அளவு மேலதிகத் தண்ணீரும் வழங்கப்படுகின்றது. சாட்டிப் பிரதேசத்தில் உள்ள 11 கிணறுகளில் இருந்து இந்த நல்ல தண்ணீர் பெறப்படுகின்றது. இந்தக் கிணறுகளில் இருந்து மேலதிகமாக தண்ணீர் எடுக்கபடுவதால், உவர் நீர்ப் பிரதேச நீர் நிலைகள் அண்மையில் உள்ளமையால் மூன்று நல்ல தண்ணீர்க் கிணறுகள் உவர் நீராக மாறியுள்ளது.

ஏனைய கிணறுகளும் எதிர்காலத்தில் உவர் நீராக மாற்றமடையும் அபாய நிலை காணப்படுகின்றது. இதனால் அமைப்புகள் மற்றும் தனியார், பவுசர்களில் தண்ணீர் எடுத்து விற்பனை செய்வோரின் சேவைகளை மட்டுப்படுத்தியுள்ளோம். மக்களுக்கு வழங்கப்படும் தண்ணீர் உணவு சமைத்தல், குடித்தல் தேவைகளுக்கு மட்டும் பயன்படுத்துவதன் மூலம் தண்ணீரைச் சிக்கனமாகப் பயன்படுத்த முடியும். தற்போது தண்ணீர் எடுக்கப்படும் நல்ல தண்ணீர்க் கிணறுகளின் சுவையும் மாற்றம் அடைவதாக மக்கள் கூறி வருகின்றனர். ஆகவே எம்மிடம் இருக்கும் நல்ல தண்ணீர்க் கிணறுகளை நாம் பாதுகாக்க வேண்டும். மக்கள் தண்ணீரைச் சிக்கனமாகப் பயன்படுத்த வேண்டும் - என்றார். (7)



யாழ்ப்பாணம், அல்வாய் திக்கத்தைச் சேர்ந்த மறைந்த இந்திராணி சண்முகநாதனின் 31 ஆம் நாள் நினைவை முன்னிட்டு அன்னாரின் குடும்பத்தினரால் வறுமைக் கோட்டுக்கு உட்பட்ட 8 மாணவர்களுக்கும் ஒரு தொழிலாளிக்குமாக 9 ஈருருளிகள் அண்மையில் அன்னாரின் இல்லத்தில் வைத்து வழங்கப்பட்டன. (173)

### சுந்தரமூர்த்தி சுவாமிகள் குருபூசை

சைவ பரிபாலனசபை நடத்தும் சுந்தரமூர்த்தி சுவாமிகள் குருபூசை நாள் நிகழ்வுகள் சைவ பரிபலானசபை நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் (நீராவியடி) நாளை சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு தலைவர் இ.வசந்தசேனன் தலைமையில் இடம்பெறும்.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்ப்பாண வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் தங்கவேலு பாலராஜ், சிறப்பு விருந்தினராக யாழ்ப்பாணம் அத்தியார் இந்துக்கல்லூரியின் அதிபர் கு.ரவிச்சந்திரன், யாழ்ப்பாணம் கைதடி நுணாவில் அ.த.க.பாடசாலை அதிபர் ஆறுமுகம் தங்கவேலு ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

### 'மாறிய நாள்களும் மாறாத சூரியனும்' நூல் அறிமுக நிகழ்வு

யாழ்ப்பாணம், ஜூலை 20

தேசிய கலை, இலக்கியப் பேரவையின் ஏற்பாட்டில் ஈழத்தின் புகழ்பூத்த இசையமைப்பாளரும், பாடகரும், திரைப்பட இயக்குநரும், எழுத்தாளரும் தற்போது கனடாவில் வசித்துவருகின்ற திவ்யராஜனின் "மாறிய நாள்களும் மாறாத சூரியனும்" என்ற நூல் அறிமுக நிகழ்வு நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்குப் பேரவையின் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

சட்டத்தரணியும் எழுத்தாளருமான சோ.தேவராஜா தலைமையில் இடம்பெறும் நிகழ்வில் வரவேற்புரையினைக் காரைநகர்ப் பிரதேச கலாசார உத்தியோகத்தர் ச.தனுஜனும், பிரதான உரைகளை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர். கலாநிதி. என்.சண்முகலிங்கன், எழுத்தாளர் சிறிலேக்கா பேரின்பகுமார், இளம் கலைஞர் வ. றொபின்சன் ஆகியோர் ஆற்றவுள்ளனர்.

### சிறுகதைத் தொகுப்பு வெளியீடு

சட்டநாதன் எழுதிய "தஞ்சம்" சிறுகதைத் தொகுப்பின் வெளியீட்டு நிகழ்வு நாளை சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு ஆரியகுளம் முன்பாகப் புதிய உயர் கல்லூரி மண்டபத்தில் பேராசிரியர் இரா. சிவச்சந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் வரவேற்புரையை சி.ரமேஷ்சும், வெளியீட்டுரையை தி.செல்வமனோகரனும், மதிப்பீட்டுரைகளை த.அஜந்தகுமார், ந.குகபரன் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர்.

### காந்தியுடன் புகைப்படம் எடுத்திருந்தால் தொடர்பு கொள்ளவும்

யாழ்ப்பாணம், ஜூலை 20

மகாத்மா காந்தியினுடைய நினைவுதினத்தை முன்னிட்டு யாழ்ப்பாண மாவட்டத் தேசோதய அமைப்பால் மகாத்மா காந்தி இலங்கைக்கு பயணம்செய்த பொழுது அவருடன்கூடிஉறவாடிப் பழகியவர்கள் அல்லது அவருடன் இணைந்து புகைப்படம் எடுத்தவர்கள் யாரேனும் இருந்தால் மாவட்டத்தேசோதய தலைவருடன் தொடர்புகொள்ளுமாறு அந்த அமைப்பு அறிவித்தது.

### டெங்கை கட்டுப்படுத்த துப்பரவுப் பணி

கொடிகாமம், ஜூலை 20

டெங்கு நோயிலிருந்து மக்களைப்பாதுகாக்கும் நோக்கில் கொடிகாமம் சமுர்த்தி வங்கிச் சுற்றாடல் துப்புரவு செய்யும் நிகழ்வு எதிர்வரும் 25 ஆம்திகதிபுதன்கிழமை இடம்பெறவுள்ளது.

கொடிகாமம் சமுர்த்தி வங்கிச் சங்க நிர்வாக சபையிலுள்ள உறுப்பினர்கள் இந்தத்துப்பரவுப் பணியைமேற்கொள்ளவுள்ளதாகச் சமுர்த்தி வங்கி முகாமையாளர் ம.விஜயநந்தி தெரிவித்துள்ளார். (159)

### வாசகர் வட்டத்தின் கலந்துரையாடல்

யாழ்ப்பாணப் பொதுசன நூலக வாசகர் வட்டத்தின் மாதாந்த உரை நிகழ்வு நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு, நூலக குவிமாடக் கேட்போர் கூடத்தில் நடைபெறும்.

'உலகக் கிண்ணக் காற்பந்தாட்டம் - 2018' என்ற தலைப்பில், ப. தர்மகுமாரன், சி. விமலன் ஆகியோர் உரையாற்றவுள்ளனர். தொடர்ந்து, கலந்துரையாடல் இடம்பெறும். என ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.

### யாழ். பல்கலையில் நாடக விழா ஆரம்பம்

யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தில் நேற்று நாடக விழா ஆரம்பமானது. நாடக விழாவின் ஆரம்ப நாளான நேற்று காத்தவராஜன் கூத்து நாடகம் இடம்பெற்றது. இரு தினங்கள் இடம்பெறவுள்ள இந்த விழாவிலே மரபு வழி நாடகம், சமகால நாடகம், சிறுவர் நாடகம், சமூக நாடகம் ஆகியன இடம் பெறவுள்ளன.



நுண்கலைத் துறை மற்றும் நாடகமும் அரங்கக் கலை மாணவர்களின் வெறுவெளி அரங்க குழுவால் இந்த விழா ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

நேற்றைய ஆரம்ப நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக யாழ்ப்பாண பல்கலைக்கழக துணைவேந்தர் இ.விக்னேஸ்வரன் கலந்துகொண்டார். நிகழ்வில் முன்னாள் துணைவேந்தர்கள், பேராசிரியர்கள், பல்கலை மாணவர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ற-8)

### சிவசிதம்பரத்தின் பிறந்த தின நிகழ்வு

நல்லூர் மற்றும் உடுப்பிட்டி முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மு.சிவசிதம்பரத்தின் 95ஆவது பிறந்த தின நிகழ்வுகள் இன்று காலை நெல்லியடி பேருந்துத் தரிப்பிடத்தில் நடைபெறவுள்ளன.

கரவெட்டி அபிவிருத்தி ஒன்றியத்தால் இந்த நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. அவற்றில் மாகாண சபை உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்துகொள்ளவுள்ளனர். மு.சிவசிதம்பரம் 16 வருடங்கள் நாடாளுமன்ற உறுப்பினராகப் பதவி வகித்துள்ளார். (ற-26)

### சைவப்புலவர் சங்கத்தின் செயற்குழுக் கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 20

அகில இலங்கை சைவப்புலவர் சங்கத்தின் சிறப்புச் செயற்குழுக் கூட்டம் நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்ப்பாணம், வண்ணை நாவலர் மகாவித்தியாலயத்தில் சங்கத்த தலைவர் சைவப்புலவர் மு.திருஞான சம்பந்தபிள்ளை தலைமையில் இடம்பெறும்.

2018 ஆம் ஆண்டுக்கான இளஞ்சைவப்புலவர் மற்றும் சைவப்புலவர் பரீட்சை பெறுபேறு பட்டமளிப்பு நிகழ்வு, சைவநாதம் நூல் வெளியீடு போன்ற விடயங்கள் தொடர்பாகக் கலந்துரையாடப்படவுள்ளமையால் அனைத்துச் செயற்குழு உறுப்பினர்களையும் கலந்து கொள்ளுமாறு சங்க செயலர் சைவப்புலவர் எஸ்.ரி.குமரன் அறிவித்துள்ளார்.

### திண்மக்கழிவகற்றல் பற்றி சிறார்களுக்குக் கருத்தரங்கு

சாவகச்சேரி நகரசபை முன்னெடுப்பு



சாவகச்சேரி, ஜூலை 20

திண்மக்கழிவகற்றல் நடவடிக்கைகளை முன்பள்ளிச் சிறார்களூடாக மேற்கொள்வதற்கான சிறப்புக் கருத்தரங்குகளை சாவகச்சேரி நகரசபையின் சாவகச்சேரிப் பொது நூலகத்தினர் ஆரம்பித்துள்ளனர்.

திட்டத்தின் முதற்கட்டமாக நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணம் சாவகச்சேரி நகரிலுள்ள தென்னிந்தியத் திருச்சபை முன்பள்ளிச் சிறார்கள், மற்றும் அவர்கள் பெற்றோருக்கான திண்மக்கழிவகற்றல் தொடர்பான கருத்தரங்கு நூலக மண்டபத்தில் நடைபெற்றது.

நகரசபைத் தவிசாளர் சிவமங்கை இராமநாதன் தலைமையில் நடைபெற்ற கருத்தரங்கில் நூலக உதவியாளர் இ.சதானந்தராசா கற்றலுடன் கூடிய செயற்பாடாகத் திண்மக்கழிவகற்றல் தொடர்பான விழிப்புணர்வைச் சிறார்களுக்கு வழங்கினார். (எ - 9)

### கற்கைநெறிகளுக்கு விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம், ஜூலை 20

தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபையால் தகவல் தொடர்பாடல் தொழில் நுட்பக் கற்கை நெறி மற்றும் கணினி வன்பொருள் பயிற்சிநெறி ஆகியவற்றிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பப்படிவத்தை எதிர்வரும் ஓகஸ்ட் 10 ஆம் திகதிக்கு முன்னர் இல 44, சோமசுந்தரம் வீதி, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு யாழ்ப்பாணம் மாவட்ட அலுவலர் கி.கிருஷ்ணபாலன் தெரிவித்துள்ளார்.

### முன்பள்ளியின் செயற்பட்டு மகிழ்வோம்

மானிப்பாய், ஜூலை 20

யாழ்ப்பாணம், மானிப்பாய் கட்டுடை கோபாலன் முன்பள்ளியின் 'செயற்பட்டு மகிழ்வோம்' நிகழ்வு முன்பள்ளி மைதானத்தில் நாளை சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு தலைவர் த.சிவசுப்பிரமணியம் தலைமையில் இடம்பெறும்.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைப் பொது மருத்துவ நிபுணர் மருத்துவர் சி.சிவன்சுதன் கலந்துகொள்ளவுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.



## ஆரம்பப் பிரிவு மாணவர்களின் கல்விச் சுற்றுலா

கொடிகாமம், ஜூலை 20

கொடிகாமம், திருநாவுக்கரசு ஆரம்ப வித்தியாலய தரம் 2 மாணவர்களின் ஒரு நாள் கல்விச் சுற்றுலா பாடசாலை அதிபர் பு.மங்களேஸ்வரன் தலைமையில் மேற்கொண்டனர்.



கடந்த 14 ஆம் திகதி சனிக்கிழமை காலை 7 மணிக்கு ஆரம்பித்த பயணம் இரவு 7 மணியளவில் முடிவடைந்தது. மயிலிட்டி கடற்கரை, நிலாவரை, கீரிமலை, யம்புகோளப் பட்டணம், கோட்டை, நல்லூர், பழைய பூங்கா, துரையப்பா விளையாட்டரங்கு, மாவிட்டபுரம் கந்தசாமி கோவில், தல்சவினா கடற்கரை, சங்குப்பிட்டிப் பாலம், ஆகிய இடங்களைப் பார்வை இட்டனர். (159)

# அமைச்சரவையை மாற்றும் கோரிக்கை சபையை மேலும் பலவீனமாக்குகிறது

## உறுப்பினர் ஐங்கரநேசன் கூறுகிறார்

யாழ்ப்பாணம், ஜூலை 20

வடக்கு மாகாண சபை ஏற்கனவே மந்த கதியில் இருக்கும் நிலையில், அதன் அமைச்சரவையைப் புதிதாக மாற்றியமைக்க வேண்டும் என்று சிலர் ஒற்றைக்காலில் நிற்கிறார்கள். இது சபையை மேலும் பலவீனப்படுத்துகிறது என்று வடக்கு மாகாண முன்னாள் விவசாய அமைச்சரும் தற்போதைய உறுப்பினருமான பொ.ஐங்கரநேசன் தெரிவித்துள்ளார்.



தனக்கென ஒதுக்கப்பட்ட பிரமாண அடிப்படையிலான நன்கொடை நிதியில் இருந்து வாழ்வாதார உதவிகளை வழங்கி வைக்கும் நிகழ்வு திருநெல்வேலி இந்து வாலிபர் சங்க மண்டபத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே இவ்வாறு தெரிவித்துள்ளார் என பொ.ஐங்கரநேசனின் ஊடகப்பிரிவு அனுப்பிவைத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டது.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடக்கு மாகாணசபையின் உறுப்பினர்களாக நாங்கள் தெரிவாகியபோது மாகாணசபைக்குரிய அதிகாரங்களை வைத்துப் பெரிதாக எதையும் சாதிக்க இயலாமற்போனாலும் சிலவற்றையாவது செய்துமுடிப்போம் என்ற நம்பிக்கையுடன்தான் வந்தோம். ஆனால் மாகாணசபை உறுப்பினர்களுக்கிடையே இருக்கக்கூடிய சாதாரண முரண்பாடுகளைப் பூதாகரமாக்கி உள்ளேநுழைந்த தீயசக்திகள் மாகாணசபையின் ஒற்றுமையைச் சீர்குலைத்ததால் எதனையுமே முழுமையாகச் செய்யமுடியாத சூழ்நிலை உருவாகியுள்ளது.

இன்று முதலமைச்சரே நீதிமன்றப்படி ஏறும் நிலை தோன்றியுள்ளது. இந்தக் குளறுபடிகளின் பின்னால் உள்ள சூத்திரதாரிகள் யார் என்பது மக்களுக்குத் தெரியும். இவர்களுக்கான தீர்ப்பை மக்களே நாளை எழுதுவார்கள் என்று மாகாணசபையில் இன்று இடம்பெற்றுவருகின்ற குழப்பங்கள் எல்லாவற்றுக்கும் பின்னால் முதலமைச்சரைப் பலவீனமாக்க வேண்டும் என்ற நோக்கமே உள்ளது. மாகாணசபையில் உள்ள அத்தனை உறுப்பினர்களுக்கும் முதலமைச்சருடன் தோளோடு தோள்நின்று மக்களுக்கான வேலைத்திட்டங்களை முன்னெடுக்க வேண்டிய பொறுப்பு உள்ளது. ஆனால் ஆளும் கட்சியில் உள்ளவர்களே வேண்டாப் பெண்டாட்டி கைபட்டால் குற்றம் கால் பட்டால் குற்றம் என்பதுபோல முதலமைச்சரின் சகல செயற்பாடுகளையும் உள்நோக்கத்தோடு விமர்சித்து வருகிறார்கள். இதனால் மக்களுக்கான செயற்பாடுகளை மாகாணசபையால் வினைத்திறனுடன் முன்னெடுக்க முடியாமல் உள்ளது.

மாகாணசபையின் ஆயுள் முடிவடைவதற்கு இன்னும் மூன்று மாதங்களே உள்ளன. அதற்குள் தங்களது பெயரையும் புகழையும் காப்பாற்றுவதற்காக அரசியல்வாதி ஒருவர் நீதிமன்றப்படி ஏறும்போது இந்த நடவடிக்கைகளால் பொதுமக்களின் நலன் எந்தளவுக்குப் பாதிக்கப்படும் என்பதை அவர் சிந்தித்துத்தே செயற்படவேண்டும். ஏனெனில் மக்கள் பணிகளையே முதன்மை நோக்கமாகக்கொண்டு பதவிக்கு வருபவர்கள், தாம் பாதிக்கப்படுகின்ற சந்தர்ப்பங்களில்கூட மக்களின் நலனுககே முன்னுரிமை கொடுப்பவராக இருக்கவேண்டும். அவரே உண்மையான மக்கள் நலப்பணியாளர் - என்றார்.

### டெங்குக் கட்டுப்பாட்டுப் பரிசோதனை

சாவகச்சேரி, ஜூலை 20

சாவகச்சேரி, சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுக்குட்பட்ட நான்கு கிராம அலுவலர் பிரிவுகளில் கடந்தவாரம் நடத்தப்பட்ட டெங்குக் கட்டுப்பாட்டுப் பரிசோதனையில் 866 இடங்களில் தரிசிப்புகள் மேற்கொள்ளப்பட்டு 7 இடங்களில் டெங்குக் குடம்பிகள் கண்டுபிடிக்கப்பட்டன.

நடுவண் சுகாதார அமைச்சின் டெங்குக் கட்டுப்பாட்டு அலகினரின் பணிப்பின் பேரில் கடந்த 12, 13 ஆம் திகதிகளில் நாடளாவிய ரீதியில் டெங்குப் பரிசோதனைகள் இடம்பெற்றன.

சாவகச்சேரி சுகாதாரத் திணைக்களத்தினரால் எழுதுமட்டுவாழ் பொதுச் சுகாதார பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட உசன் மிருசுவில் தெற்கு ஆகிய பிரிவுகளில் நடத்தப்பட்ட டெங்குப் பரிசோதனையில் 429 இடங்களில் தரிசிப்புகளை மேற்கொண்டனர்.

டெங்கு நுளம்பு உற்பத்தியாகக் கூடியதாகக் கருதப்பட்ட 23 குடியிருப்பாளர்களுக்கு அவற்றைத் துப்பரவு செய்யக் காலக்கெடு வழங்கி சிவப்பு அறிவித்தல் வழங்கப்பட்டன. 4 இடங்களில் நீர்நிலைகளில் டெங்குக் குடம்பிகள் காணப்பட்டன.

கொடிகாமம் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட கச்சாய், அல்லாரை தெற்கு ஆகிய பிரிவுகளில் 437 இடங்களில் தரிசிப்புகள் மேற்கொள்ளப்பட்டு 21 பேருக்கு சிவப்பு அறிவித்தல் வழங்கப்பட்டதெனவும் இந்தப் பிரிவுகளில் 3 குடியிருப்புகளில் காணப்பட்ட நீர்நிலைகளில் டெங்குக் குடம்பிகள் காணப்பட்டன எனச் சுகாதாரப் பகுதியினரால் தெரிவிக்கப்பட்டது. (9)



யாழ்ப்பாணம், சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலகத்தின் பதிவாளர் நாயகம் பிரிவால் 18 வயதுக்குட்பட்டவர்களுக்கான காலம் கடந்த பிறப்பு, இறப்புக்கான பதிவுகள் தொடர்பான நடமாடும் சேவை பிரதேச செயலகத்தில் கடந்த 17 ஆம் திகதி இடம்பெற்றது. (162)

### சாவகச்சேரிப் பொலிஸில் வருடாந்தப் பரிசோதனை

கொடிகாமம், ஜூலை 20

சாவகச்சேரிப் பொலிஸ் நிலையத்தில் வருடாந்தப் பொலிஸ் நிலையப் பரிசோதனை நேற்றுமுன்தினம்காலை 7 மணிக்கு நடைபெற்றது. அதன்போது பொலிஸாரின் அணிவகுப்பு மரியாதையை யாழ்ப்பாண மாவட்டப் பிரதிப் பொலிஸ்மா அதிபர் பாலித பெனாண்டோ, யாழ்ப்பாணப் பிராந்திய மூத்த பொலிஸ் அத்தியட்சகர் வர்ணஜெயசுந்தர, சாவகச்சேரி உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் லால்கமகே ஆகியோர் ஏற்றுக்கொண்டனர்.

பொலிஸாரின் வாகனங்கள், கட்டடங்கள், பதிவுப் புத்தகங்கள் ஆகியவற்றைப் பரிசோதனைக்கு உட்படுத்தினர். அனைத்துப் பொலிஸ் நிலையங்களிலும் வருடாந்தம் இத்தகைய பரிசோதனை நடத்தப்படுவது வழமை. (159)



### நல்லூர் உற்சவகால பஜனை

நல்லூர்க் கந்தசுவாமி ஆலயப் பெருந்திருவிழா காலத்தில் யாழ்ப்பாண சின்மயாமிஷன் பாடசாலை மாணவர்கள் மற்றும் அறநெறி மாணவர்களை இணைத்து காலை, மாலை இரு நேரமும் சுவாமி வீதி உலா வரும் போது பஜனை பாட ஏற்பாடு செய்யப்பட்டது.

இது தொடர்பான கூட்டம் இன்று வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணி தொடக்கம் பிற்பகல் 2 மணி வரை இல 9, சின்மயா மிஷன், செட்டித்தெரு ஒழுங்கை, நல்லூரில் நடைபெற உள்ளது.

யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள பாடசாலைகளின் சங்கீத அல்லது சமயபாட ஆசிரியர்களை கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

### விழிப்புணர்வுக் கருத்தமர்வு

தெல்லிப்பழை சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனைக்கு உட்பட்ட உணவுகையாளும் நிலையங்களின் உரிமையாளர்களுக்கான விழிப்புணர்வுக் கருத்தமர்வும் தொற்றா நோய்கள் சம்பந்தமான பரிசோதனைகளும் நாளைசனிக்கிழமைகாலை 9 மணிக்குப் பணிமனையின் மாநாட்டுமண்டபத்தில் இடம்பெறும்.

உணவு கையாளும் நிலையங்களிற்கான புதிய தர நிர்ணய சான்றிதழ்களும் பரிசோதிக்கப்பட்டு வழங்கப்படவுள்ளன.

மீள் குடியேற்ற பகுதிகளில் புதிதாக விற்பனை நிலையங்களை நிறுவியவர்கள் மற்றும் நிறுவ இருப்பவர்கள் என அனைவரையும் கலந்து கொள்ளுமாறு சுகாதார மருத்துவ அதிகாரி பரா. நந்தகுமார் தெரிவித்துள்ளார். (114)





அனலைதீவு நயினாக்குளம் ஐயனார் கோவில் பெருந் திருவிழா நேற்று முன்தினம் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறும் திருவிழாவில் எதிர்வரும் 26ஆம் திகதி வியாழக்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-9)

## குடும்ப உறுப்பினர்கள் மீது இளைஞன் கடும் தாக்குதல்

### மனநோய்ச் சிகிச்சைக்கு உட்படுத்த மன்று உத்தரவு

சாவகச்சேரி, ஜூலை 20

வீட்டிலிருந்தோரைத் தாக்கியும் உடைமைகளை அடித்து நொருக்கிச் சேதம் விளைவித்தார் என்ற குற்றச்சாட்டில் இளைஞர் ஒருவரைத் தெல்லிப்பழை மனநோய் சிகிச்சைப் பிரிவில் சேர்க்குமாறு சாவகச்சேரி நீதிமன்றில் நேற்று உத்தரவிடப்பட்டது.

கொடிகாமம் பகுதியைச் சேர்ந்த 25 வயது மதிக்கத்தக்க இளைஞனுக்கு திடீரென பித்துப் பிடித்தவர் போல் வீட்டில் இருந்தோரைக் கண்மூடித்தனமாகத் தாக்கியுள்ளார். இவரைப் பிடித்துக் கட்டிவைத்த பெற்றோர் கொடிகாமம் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர். பொலிஸார் இந்த இளைஞனை நேற்று நீதிமன்றில் முற்படுத்தினர். இந்த இளைஞர் பித்துப் பிடித்தவர் போல காணப்பட்டமையால் ஒகஸ்ட் முதலாம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்ட நீதிவான் இவரைத் தெல்லிப்பழை மனநோய்ச் சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை வழங்க ஏற்பாடுகள் மேற்கொள்ளுமாறும் பொலிஸாருக்கு உத்தரவிட்டார். (9)



### நூலகத்துக்கு பல்லூடக எறிகருவி

சாவகச்சேரி, ஜூலை 20

சாவகச்சேரிப் பொது நூலகத்துக்கு பல்லூடக எறிகருவி (புறொஜக்டர்) புலம்பெயர் நாட்டிலிருந்து வருகை தந்துள்ள நுணாவிலைச் சேர்ந்த நலன்விரும்பியால் நகரசபைத் தவிசாளரிடம் நேற்று வழங்கி வைக்கப்பட்டது. நகரசபைத் தவிசாளர் சிவமங்கை இராமநாதன் அதனை நூலகரிடம் கையளித்தார். (எ - 9)

சாவகச்சேரியில்

## உக்காத பொருள்களை சேகரித்தல் ஆரம்பம்

சாவகச்சேரி, ஜூலை 20

யாழ்ப்பாணம், சாவகச்சேரிச் சுகாதாரத் திணைக்களத்தினர் தென்மராட்சிப் பிரதேசத்தில் டெங்கு நுளம்பின் தாக்கத்தைக் குறைக்கும்பொருட்டு, குடியிருப்புக்களில் காணப்படும் உக்காத பொருள்களைச் சேகரிக்கும் பணிகளை ஆரம்பித்துள்ளனர்.

பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவு ரீதியாகத் திண்மக்கழிவகற்றல் பணிகளை முடுக்கிவிடும் வகையில் திணைக்கள வாகன ஒலிபெருக்கி மூலம் அந்தந்தப் பிரிவுகளில் பரப்புரை செய்யப்பட்டு கழிவுகள் சேகரிக்கப்படுகின்றன.

பரப்புரை இடம்பெறும் வேளையில் மக்கள் தமது குடியிருப்புக்களில் காணப்படும் உக்காத பொருள்களை, திண்மக்கழிவுகள் அகற்றும் வாகனங்கள் வரும் சாலைகளில் வைக்க வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் மந்துவில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவில் மேற்கொள்ளப்பட்ட போது பெருமளவு மக்கள் தமது குடியிருப்டகளில் காணப்பட்ட பாவனைக்குதவாத பழைய பிளாஸ்ரிக் பொருள்கள் இரும்புப் பொருள்கள் பழைய ரயர்கள் உள்ளிட்ட உக்காத பொருள்களை ஒப்படைத்தனர் எனவும் தெரிவித்தனர். (எ-9)

## திருட்டு...

தாக்கல் உட்பட தினப் பணிகள் முடிந்த பின்னர் ஒழுங்குப் பிரச்சினையொன்றை நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர எழுப்பினார்.

புதிய அரசமைப்புத் தொடர்பான கலந்துரையாடலை அடுத்த கட்டத்துக்குக் கொண்டுசெல்வதற்குரிய அடிப்படை ஆவணத்தைத் தயாரிப்பதற்காக நியமிக்கப்பட்ட நிபுணர்கள் குழுவில் 10 பேர் அங்கம் வகிக்கின்றனர். ஜயம்பதியால் நேற்றுமுன்தினம் (18 ஆம் திகதி) சமர்ப்பிக்கப்பட்டுள்ள அறிக்கையில் ஆறு பேர் மாத்திரமே கையொப்பமிட்டுள்ளனர். நால்வர் கையொப்பமிடவில்லை.'

சுமந்திரன், ஜயம்பதி, சுரேன் பெர்னாண்டோ ஆகிய மூவரும் இணைந்தே வரைபு நகலைத் தயாரித்துள்ளனர். நிபுணர்கள் குழுவின் கருத்து உள்வாங்கப்படவில்லை. அதுமட்டுமல்ல, தலைமை அமைச்சர், சபாநாயகர், எதிர்க்கட்சித் தலைவர் ஆகிய மூவரும் இணைந்து அரச தலைவரை நீக்கமுடியும் என்ற சரத்தையும் உட்புகுத்தியுள்ளனர்.

மூன்று பேரால் எவ்வாறு புதிய அரசமைப்பை உருவாக்கமுடியும்?. நாட்டுக்கும், பெரும்பாலான மக்கள் விரும்பும் வகையிலுமே அரசமைப்பு உருவாக்கப்படவேண்டும். அதற்குப் புறம்பாக நடவடிக்கை இடம்பெறுமாயின் அதற்கு ஒத்துழைப்பு வழங்கமுடியாது என்று அவர் கூறினார்.

அதையடுத்து நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்தானந்த அளுத்கமகே கருத்துத் தெரிவித்தார். நிபுணர்கள் குழுவில் கையொப்பமிட்டுள்ள நபரொருவர் ஆறு மாதங்களாக இலங்கை வரவே இல்லை. அவரின் ஒப்பமானது திருட்டுத்தனமாகப் போடப்பட்டுள்ளது. சுமந்திரனும் மற்றைய நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவருமே 'இதைச் செய்தனர் என்று நிபுணர்கள் குழுவின் உறுப்பினரொருவர் கூறினார். இது தவறான செயலாகும் என்று அவர்தெரிவித்தார்.

அதன்பின்னர் நாடாளுமன்ற உறுப்பினர் தினேஷ் குணவர்தன கருத்துத் தெரிவித்தார். இதை சாதாரண விடயமாகக் கருதிவிடமுடியாது. பாரதூரமான பிரச்சினையாகும். இது விடயத்தில் மௌனமாக இருந்துவிடமுடியாது. அரசமைப்பு தொடர்பான சட்டமூலம் ஜூலை 18இல் சமர்ப்பிக்கப்படும் என ஜயம்பதி கூறியிருந்தார். இதன்படி நேற்று(நேற்றுமுன்தினம்) நடைபெற்ற கூட்டத்தில் அது சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. சுமந்திரன், ஜயம்பதி, சட்டத்தரணி சுரேன் பெர்னாண்டோ ஆகிய மூவரும் இணைந்தே சட்டமூலத்தை தயாரித்துள்ளனர் என நிபுணர்கள் குழு உறுப்பினர்கள் கூட்டத்தில் தெரிவித்துள்ளனர்.

நிபுணர்கள் குழுக்களிடையே கருத்து முரண்பாடு இருந்துள்ளது. அனைவரையும் கையொப்பமிடுமாறு இவ்விரு நாடாளுமன்ற உறுப்பினர்களே அறிவுறுத்தியுள்ளனர். திருட்டு வழியில் அரசமைப்பைத் தயாரிக்கும் முயற்சியாகவே இது அமைந்துள்ளது. நிபுணர்கள் குழுவும் புறந்தள்ளப்பட்டுள்ளது. இருவர் குறுக்கு வழியில் பயணிக்கின்றனர் என்பது அம்பலமாகியுள்ளது என்று அவர் கூறினார். (ற)

## புதிய...

முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், மாகாண உயர் அதிகாரிகள் கலந்துகொள்ளவுள்ளனர். இந்தியத் தலைமை அமைச்சர் நரேந்திர மோடி இணையம் மூலம் நிகழ்வில் உரையாற்றுவார் என்று கூறப்படுகின்றது.

இந்தச் சேவை தொடர்பில் வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ஜி.குணசீலன் தெரிவித்தாவது:

மக்களுக்கு ஏற்படும் திடீர் நோய் நிலைமைகள் மற்றும் விபத்து போன்றவற்றில் பலர் இறக்கின்றனர். முதலுதவி குறித்த நேரத்தில் வழங்கப்படாமை, மருத்துவ மனைக்கு உரிய நேரத்தில் நோயாளர்கள் கொண்டு சேர்க்காமை என்பன காரணங்களாக அமைகின்றன. இவற்றைக் கருத்தில் கொண்டு அவசர நோயாளர் காவு வண்டி சேவைகள் மருத்துவ மனைகளில் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

அவற்றை விரிவாக்கும் நோக்கில் இந்திய அரசால் 20 நோயாளர்கள் காவு வண்டிகள் சேவையில் ஈடுபடவுள்ளன. கொழும்பில் இருந்து அவை நேற்று யாழ்ப்பாணம் மாநகர சபை மைதானத்துக்கு கொண்டு வரப்பட்டன. யாழ்ப்பாணம் 7 நோயாளர் வண்டிகள், கிளிநொச்சி 4 நோயாளர் வண்டிகள், முல்லைத்தீவு ,வவுனியா ,மன்னார் ஆகியவற்றுக்கு தலா 3 நோயாளர் வண்டிகள் வீதம் வடக்கு மாகாணத்தில் 20 வண்டிகள் சேவையிலீடுபடவுள்ளன.

பாதுகாப்பு மற்றும் இட வசதிகளை கருத்து கொண்டு இந்த வண்டிகள் மாவட்டத்தில் உள்ள பொலிஸ் நிலையத்தில் தரித்து வைக்கப்படும். ஒவ்வொரு பொலிஸ் நிலையத்திலும் சேவையில்ஈடுபடும் வண்டிகளுக்கு அழைப்பை ஏற்படுத்தக் கூடிய தொலைபேசி இலக்கங்கள் தனித்தனியாக வழங்கப்படும். நோயாளர்களை வேகமாக மருத்துவ மனைக்கு எடுத்துச் செல்லுதல், முதலுதவி வழங்குதல் என்பன இவற்றின் பிரதான சேவையாக இருக்கும்.

வண்டியில் அனைத்து முதலுதவி பயிற்சிகளையும் பெற்ற இரண்டு உத்தியோகத்தர்கள் மூலம் நோயாளருக்கு முதலுதவி வழங்கப்படும். இவர்களுக்கான ஊதியத்தை இந்திய அரசே வழங்கும்- என்றார். (ற-7,105)

## போர்...

டவுள்ளது. எந்தவொரு சந்தர்ப்பத்திலும் மேற்படி நிபந்தனைகள் தளர்த்தப்பட மாட்டாது என்று சிவில் வானூர்திச் சேவைகள் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நிலையியற் கட்டளையின் 232இன்கீழ் ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்கவால் மத்தல வானூர்தி நிலையம் தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விகளுக்குப் பதிலளிக்கும் போதே அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

இந்திய விமான நிலைய அதிகாரசபையுடன் ஒப்பந்தம் கைச்சாத்திடப்படுவதற்கு முன்னர் அது நாடாளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்படும் கடன்சுமைக்குள் சிக்கியுள்ள மத்தல வானூர்த் நிலையத்தை செயற்றிறன்மிக்க விமான நிலையமாக மாற்றியமைத்து, நாட்டின் பொருளாதாரத்துக்கும், சுற்றுலாத்துறைக்கும் பங்களிப்புசெய்து இலாபமீட்கும் துறையாக மாற்றியமைப்பதே அமைச்சின் நோக்கமாக இருக்கின்றது.

உள்நாட்டு, வெளிநாட்டு முதலீட்டாளர்களிடமிருந்து விலைமனு கோரப்பட்டது. எந்தவொரு தரப்பும் பெரிதாக ஆர்வம் காட்டவில்லை. கிடைக்கப்பெற்ற 6 விண்ணப்பங்களிலும் விமான நிலையத்தின் ஒட்டுமொத்த நிர்வாகக் கட்டமைப்பையும் பொறுப்பேற்கத் தயாராக இருக்கவில்லை. தலைமை அமைச்சருடன் சீனா சென்றிருந்த போதும் அந்த நாட்டு முதலீட்டாளர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. எவரும் முன்வரவில்லை.

இந்தநிலையிலேயே இந்தியாவிடமிருந்து அழைப்பு கிடைக்கப்பெற்றது. அந்த யோசனையை நான் அமைச்சரவையில் முன்வைத்தேன். 70 வீதமான பங்குகளை வாங்குவதற்கு இணக்கம் வெளியிடப்பட்டிருந்தது. அதனடிப்படையில்தான் மத்தள வானூர்தித் தளத்தை இலங்கை இந்திய கூட்டு முயற்சியாக தனியான நிறுவனமொன்றை உருவாக்கி விமான நிலையத்தின் முகாமைத்துவத்தை முன்னெடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டது. 70 வீதமான பங்குகளை வழங்குவதன்மூலம் கிடைக்கும் நிதியைக்கொண்டுகடன்களை மீள செலுத்துவதே எமது நோக்கமாக இருக்கின்றது.

தேசிய பாதுகாப்பு, விமான நிலையத்தில் பணியாற்றுபவர்களின் தொழில் உரிமை ஆகியன தொடர்பில் ஆழமாகச் சிந்தித்த பின்னர், இந்த விவகாரத்தை கையாள்வதற்கு இரண்டு குழுக்கள் அமைக்கப்பட்டன. இலங்கையால் விதிக்கப்படும் முன்நிபந்தனைகளை எந்தவொரு சந்தர்ப்பத்திலும் தளர்த்திக்கொள்ளமாட்டோம் என்பதையும் திட்டவட்டமாகக் கூறியுள்ளோம். அரச விலை மதிப்பீட்டாளர்களால் மதிப்பிடப்படும் தொகையில் 70 வீதத்தை இந்திய நிறுவனம் கட்டாயம் வழங்கவேண்டும். அந்தத் தொகையை ஒருசத வீதத்திலேனும் குறைக்க மாட்டோம். இது ஒரு வர்த்தகக் கொடுக்கல் வாங்கல் மாத்திரமே. போர்விமானங்கள், போர்நடவடிக்கைகள் ஆகியவற்றுக்கு விமான நிலையத்தை பயன்படுத்த இடமளிக்கமாட்டோம். விமானங்களின் பயணங்களையும், வான் பரப்பைப் பயன்படுத்துவதுவதையும் இலங்கையே கட்டுப்படுத்தும். விமான நிலையத்தின் பாதுகாப்பு நடவடிக்கையில்கூட உள்நாட்டவர்களே ஈடுபடுத்தப்படவேண்டும். ஊழியர்களின் தொழில்சார் உரிமைகள் உறுதிப்படுத்தப்படவேண்டும் போன்ற நிபந்தனைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. இவற்றை எந்தவொரு சந்தர்ப்பத்திலும் நாம் தளர்த்திக்கொள்ளமாட்டோம்.

அதேபோல் ஐந்து வருடங்களுக்குள் வினைத்திறன்மிக்க விமானநிலையமாக இது கூட்டுமுயற்சியின் ஊடாக ஆக்கப்படவேண்டும் எனவும் கூறியுள்ளோம். இதற்கான வணிகத் திட்டம் முன்வைக்கப்படவேண்டும். இந்திய நிறுவனத்திடமிருந்து அதற்கான யோசனை கோரப்பட்டுள்ளது.

தேசிய பாதுகாப்பு, பொருளாதாரம், தொழில் உள்ளிட்ட அனைத்து விடயங்களையும் கருதி தற்போது பேச்சுகள் நடத்தப்பட்டுவருகின்றன. வெறுமனே ஒப்பந்தத்தில் கைச்சாத்திடமாட்டோம். இலங்கையிலுள்ள சிவில் விமான சேவைகள் சட்டத்தின்பிரகாரம், பெருமளவு பங்குகளை வெளிநாட்டுக் கம்பனிக்கு வழங்குவதற்கு சட்டரீதியாக இடமில்லை. எனவே, சட்டத்தில் திருத்தம் செய்யப்படவேண்டும். அதற்கான யோசனை நாடாளுமன்றத்துக்கு வரும். சபை அங்கீகாரமளித்தால் தொடர்ந்தும் முன்னெடுக்கலாம். அவ்வாறில்லையேல் அத்துடன் நடவடிக்கை நிறைவடைந்துவிடும்.

நாம் அனைத்து நடவடிக்கைகளையும் சட்டரீதியாகவே செய்கின்றோம். திருட்டுத்தனமாக எதையும் செய்யவில்லை. எம்மால் தயாரிக்கப்படும் ஒப்பந்தம் அமைச்சரவை, சட்டமா அதிபர் ஆகிய தரப்புகளுக்கு வழங்கப்பட்டு, கைச்சாத்திடப்படுவதற்கு முன்னர் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்- என்றார். (ற)

## தொழில்...

ளில் உள்ள 2 ஆயிரத்து 300 வெற்றிடங்கள் நிரப்பப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் கல்லூரியில் நாளை காலை 8.30 மணியிலிருந்து 3 மணி வரை தொழிற் சந்தை இடம்பெறவுள்ளது. இதில் 42 நிறுவனங்கள் மற்றும் 11 தொழிற் பயிற்சி நிறுவனங்களின் கண்காட்சிக் கூடம் அமைக்கப்பட்டுள்ளது. 2 ஆயிரத்து 300 வெற்றிடங்களுக்குரிய ஆள்களை தொழிற்சந்தையில் 42 நிறுவனங்களும் தேடுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-5)

## 1990...

நோயாளர் காவு வண்டிச் சேவைகள் எதிர்வரும் 21ஆம் திகதி முதல் முடிவுறுத்தப்படுகின்றது என்று வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை அறிவித்துள்ளது.

21ஆம் திகதி இரவு முதல் வடக்கு மாகாணத்தில் விபத்துக்களின்போதும், அவசர மருத்துவ நிலைகளின்போதும் பொதுமக்கள் 1990 என்ற அவசர அழைப்பு எண்ணுடன் தொடர்பு கொண்டு நோயாளர் காவு வண்டிச் சேவையைப் பெற முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ற)

## த.தே.கூட்டமைப்பு...

என்று ரெலோ அமைப்பினர், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை.சோ.சேனாதிராசாவிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

ரெலோ அமைப்பினருக்கும், இலங்கைத்தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை.சோ.சேனாதிராசாவுக்கும் இடையில் கொழும்பில் நேற்றுச் சந்திப்பு இடம்பெற்றது. இந்தச் சந்திப்பிலேயே இந்தக் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது. (ற-5,26)

## அனுமதியின்றி...

அனுமதி வழங்கப்பட்டவர்கள் மாத்திரமே கடலட்டை பிடியில் ஈடுபட முடியும். அனுமதி பெறாது கடலட்டை பிடியில் ஈடுபட்டால் உடனடியாக கைது செய்யப்படுவார்கள்.

இவ்வாறு கடற்தொழில் மற்றும் நீரியல் வளத்துறை அமைச்சர் விஜித் விஜயமுனி சொய்சா சபையில் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று எழுப்பப்பட்டகேள்விக்கு பதிலளித்து உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

வடமராட்சி கிழக்கு மருதங்கேணி பகுதியில் கடலட்டை பிடியில் ஈடுபட வெளிமாவட்டத்தில் உள்ளவர்களும் வருகின்றனர். அதற்கு சட்டரீதியாக அனுமதி வழங்கப்பட்டுள்ளதா?. அனுமதி பெறாது கடலட்டை பிடியில் ஈடுபடுவோருக்கு எதிராக எடுக்கப்படும் நடவடிக்கை என்ன? என்று கேள்வி எழுப்பப்பட்டது.

அதற்கு அமைச்சர் விஜித் விஜயமுனி சொய்சா பதிலளித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

வடமராட்சி கிழக்கு மருதங்கேணியில் கடலட்டை பிடித்தல் பருவங்களுக்கேற்ப மேற்கொள்ளப்படுகின்றது. வெளிமாவட்டத்தவர்கள் ஒரு சிலருக்கு பருவ காலத்தில் வடக்கு, கிழக்கில் வந்து கடலட்டை பிடியில் ஈடுபடுவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மருதங்கேணிப் பகுதியில் அனுமதி வழங்கப்படாதவர்கள் எவராவது வந்து கடலட்டை பிடித்தால் அவர்கள் கைது செய்யப்படுவார்கள். அனுமதி பத்திரம் பெற்றவர்கள் வந்தால் அது தவறில்லை.

வடக்கு தெற்கில் வாழும் மீனவர்களுக்கிடையில் பிரிவினை ஏற்படுத்த வேண்டாம். இரு பகுதியினரும் ஒத்துழைப்புடன் மீன்பிடியில் ஈடுபடுவதற்கு அரசியல்வாதிகள் ஆதரவு வழங்க வேண்டும். இந்திய மீனவர்களை விடுதலை செய்தது போன்று இந்திய படகுகளை விடுவிக்கவும் தீர்மானித்துள்ளோம்-என்றார். (ற-61)

## நாட்டுக்குத்...

முப்பப்பட்டது.

அதற்குப் பதிலளிக்கும்போதே கபீர் ஹாசீம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்தாவதுபொது இணக்கப்பாடின்றி ஒருசிலரால் தயாரிக்கப்பட்ட நிபுணர்கள் குழுவின் அறிக்கை நிராகரிக்கப்பட்டுள்ளது என வழிநடத்தும் குழுவின் உறுப்பினரான அநுரகுமார திஸாநாயக்க தெளிவாகக் குறிப்பிட்டார்.

பொது இணக்கப்பாட்டின் அடிப்படையில் மீண்டுமொரு அறிக்கையை முன்வைக்க வேண்டும் என்று கோரப்பட்டுள்ளது.

நிபுணர்கள் குழுவால் புதிய அரசமைப்புக்கான சட்டமூலம் தயாரிக்கப்படவில்லை. அது வரைபு நகல் மாத்திரமே. நாட்டுக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் அரசமைப்புக்கு நாம் ஒருபோதும் இடமளிக்கமாட்டோம்.

புதிய அரசமைப்பு தொடர்பில் சகல கட்சிகளுடன் பேச்சு நடத்தப்பட்டு, பரந்துபட்ட கலந்துரையாடலின் பின்னரே உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

அதேவேளை, இது விடயம் தொடர்பில்தலைமை அமைச்சருடன் பேச்சு நடத்தப்படும் என்று சபாநாயகர் கரு ஜயசூரியவும் தெரிவித்தார். · (ற)

## நள்ளிரவில்...

துள்ளது. வீட்டுக்குள் புகுந்த நால்வர் வீட்டிலிருந்தவர்களை வாள்களைக் காட்டி அச்சுறுத்தியுள்ளனர். அவர்களை ஓரிடத்தில் அமரச் செய்துவிட்டு வீடு முழுவதையும் சல்லடையிட்டுத் தேடியுள்ளனர். அதில் ஒன்றும் அகப்படாததால் பெண்கள் அணிந்திருந்த தங்கச் சங்கிலி, காப்பு, தோடு என்பவற்றை அபகரித்துச்சென்றுள்ளனர். வியாபாரநிலையத்துக்குள் இருந்த பணத்தை எடுத்துக் கொண்டு மோட்டார் சைக்கிள்களில் தப்பிச் சென்றனர் என்று தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பில் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது. அவர்கள் சம்பவ இடத்துக்கு வந்து விசாரணைகளை மேற்கொண்டனர்.

கடந்த மாதம் கோயிலுக்குச் சென்று திரும்பிய பெண் ஒருவரிடம் மோட்டார் சைக்கிளில் வந்தவர்கள் இந்தப் பகுதியில் சங்கிலி அறுக்க முயன்றுள்ளனர். பெண் சுதாரித்துக் கொண்டபால் அவர்களின் முயற்சி பயனளிக்கவில்லை. மக்கள் அண்மையில் குடியமர்ந்த எழுதுமட்டுவாழில் மின்சார வசதிகள் வழங்கப்பட்டபோதும் வீதி விளக்குகள் பொருத்தப்படவில்லை. அதைத் திருடர்களும், கொள்ளையர்களும் பயன்படுத்திக் கொள்கின்றனர் என்று மக்கள் கூறுகின்றனர்.

அதேவேளை, தென்மராட்சில் கடந்த 13ஆம் திகதியும் கொள்ளை முயற்சி நடந்திருந்தது. கொள்ளை முயற்சி கைகூடா நிலையில் வீட்டின் முன் படுத்திருந்த குடும்பத்தலைவருக்கு வாளால் வெட்டி கைத்தொலைபேசியை அபகரித்துச் சென்றிருந்தனர்.

கடந்த 7ஆம் திகதி மீசாலையில் வாள்களுடன் வீடொன்றுக்குள் புகுந்த கொள்ளையர்கள் வீட்டில் இருந்தவர்களை அச்சுறுத்தி 15 லட்சம் ரூபா பெறுமதியான நகைகளைக் கொள்ளையடித்திருந்தனர்.

வடக்கில் அதிகரிக்கும் வன்முறைகளைக் கட்டுப்படுத்துவது தொடர்பில் ஆராய்வதற்காக சட்டம், ஒழுங்கு அமைச்சர், பிரதி அமைச்சர், பொலிஸ் மா அதிபர் ஆகியோர் வந்து கலந்துரையாடிய ஒரு வாரத்துக்கு இந்தச் சம்பவம் நடந்திருந்தது. (ற-9)

## அரசியல்...

கான தேசிய அமைப்பால் ஏற்பாடுசெய்யப்பட்டுள்ள இந்தக் கூட்டம் மருதானை, சி.எஸ்.ஆர். மண்டபத்தில் நடைபெறவுள்ளது என்று கூட்டத்தின் ஒருங்கிணைப்பாளர் அருட்தந்தை சக்திவேல் தெரிவித்தார்.

இந்தக் கூட்டத்தில் அமைப்பின் உறுப்பினர்கள், அமைச்சரின் ஆலோசகரான சட்டத்தரணி ஸ்ரீநாத் பெரேரா, சமூக ஆர்வலர்கள், அரசியல் கைதிகளின் உறவினர்கள் எனப் பலரும் கலந்துகொள்ளவுள்ளனர்.

பயங்கரவாதத்தடைச்சட்டத்தை நீக்கவேண்டும், அரசியல் கைதிகள் அனைவரையும் ஒரே தவணையில் விடுதலை செய்யவேண்டும், இவர்களின் விடுதலையானது குறுகிய காலத்திற்குள் அமைதல் வேண்டும் உள்ளிட்ட மூன்று பிரதான கோரிக்கைகளை முன்வைத்து இந்த அமைப்பு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடமும் மனுவொன்றைக் கையளித்துள்ள நிலையிலேயே நாளை இந்தக் கூட்டம் நடைபெறவுள்ளது. (ற)



## அமெரிக்க – இலங்கைக் கடற்படை திருகோணமலையில் கூட்டுப் பயிற்சி

கொழும்பு, ஜூலை 20
அமெரிக்கக்கடற்படையின்சிறப்புப்போர்ப்படைப்பிரிவைச் சேர்ந்த படையினர், இலங்கைக் கடற்படையினருடன் இணைந்து கூட்டுப்பயிற்சியில் ஈடுபட்டுவருகின்றனர்.
கூட்டு ஒருங்கிணைந்த பரிமாற்ற பயிற்சி ஒத்திகை என்ற பெயரில், திருகோணமலையில் இந்தக் கூட்டுப் பயிற்சி இடம்பெற்று வருகிறது.
அமெரிக்கக்கடற்படையின்சிறப்புபோர்ப்படையினருடன், இலங்கைக் கடற்படையின் 4 ஆவது அதிவேக தாக்குதல் படகுஅணிமற்றும்,சிறப்புபடகுப்படையணிஆகியவற்றைச் சேர்ந்த படையினர் கூட்டுப் பயிற்சியில் ஈடுபட்டுள்ளனர்.
இதன் ஆரம்ப நிகழ்வு நேற்று முன்தினம் இடம்பெற்றது.
இரண்டு நாடுகளுக்கும் இடையிலான பயிற்சி மற்றும் தேவைப்பாடுகள் குறித்த பரஸ்பர புரிந்துணர்வு மற்றும் உடன்பாடுகளுக்குக்கூட்டுப்பயிற்சித்திட்டம்மேற்கொள்ளப் படுகிறது.
நிபுணத்துவ திறன்விருத்தி மற்றும் இரு நாட்டுக் கடற்படையினருக்கும் இடையிலான ஆற்றலைப் பரிமாறிக் கொள்ளும்நோக்கிலான இந்தக் கூட்டுப்பயிற்சிநான்குவாரங்கள் இடம்பெறும் என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (4)

# அபிவிருத்திக்கென ரூ. 8 ஆயிரம் கோடி அமெரிக்கா இலங்கைக்கு நன்கொடை

### இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு

**கொழும்பு, ஜூலை 20**
**இலங்கையின் அபிவிருத்திச்செயற்பாடுகளுக்காக 80 பில்லியன் ரூபாவை (8000 கோடி ரூபா) கொடையாக வழங்க அமெரிக்கா திட்டமிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.**

இலங்கையின் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகாரங்களுக்கான இராஜாங்க அமைச்சர் நிரோஷன்பெரேராஇந்தத்தகவலைத் தெரிவித்தார்.
காணி, போக்குவரத்து, விவசாயம், உயர்கல்வி, மின்சக்தித் துறைகளில் அபிவிருத்திகளைமேற்கொள்வதற்கு இந்தக் கொடையைப் பயன்படுத்த முன்மொழியப்பட்டுள்ளது.
அமைச்சரவையின் அனுமதி பெறப்பட்டபின்னர்முன்மொழியப்பட்டுள்ள அபிவிருத்தித்திட்டங்கள் தொடர்பான அமெரிக்காவின் கூட்டுத் திட்டப் பணியகத்துடன்இலங்கையின்தலைமை அமைச்சர் செயலகம், இறுதிக்கட்டப் பேச்சுநடத்தும்என்றும்அவர்மேலும் தெரிவித்தார். (4)

## திருடச் சென்றவருக்கு இப்படியொரு சம்பவம்

குருணாகலில்வீடொன்றில்திருடச்சென்றார்என்றுகுற்றஞ் சாட்டப்படும்நபருக்குஏற்பட்டபரிதாபநிலைகுறித்துச்சிங்கள ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது. பொல்பித்திகம பிரதேசத்திலுள்ளவீடொன்றில்திருடச்சென்றார்என்றுகூறப் படும் அவர், கீழே வீழ்ந்து காயமடைந்துள்ளார். இதனால் வீட்டுஉரிமையாளர்அந்தநபரைப்பிடித்துப்பொலிஸாரிடம் ஒப்படைத்தார். அந்தப்பகுதியிலுள்ள வீடுகளிலுள்ளமரங்களில்ஏறிவீடுகளின்கூரைகள் ஊடாகத்தாவிச்சென்று அவர் திருடுபவர் என்று அவர் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.
சில நாள்களுக்கு முன்னர் அவர் அவ்வாறு செயற்படும் போது நாய் குரைத்ததால், வீடுகளில் இருந்தவர்கள் வெளியே வந்துள்ளனர். அதனால் சந்தேகநபர் பதற்றமடைந்து மாமரத்தின் உதவியுடன் கீழே இறங்கித் தப்பிச் செல்ல முயற்சித்துள்ளார்.
மரக் கிளை உடைந்ததால்அவர் கீழே வீழ்ந்தார். அவரைப் பிடித்த பிரதேச மக்கள், 119 என்ற அவசர இலக்கத்துக்கு அழைப்பு விடுத்து முறையிட்டுள்ளனர். பொலிஸார் அவரைக்கைதுசெய்து மருத்துவமனையில்சேர்த்தனர். அவர் மேலதிக சிகிச்சைக்காக குருணாகல் மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது. (4)

## புதுவகை முச்சக்கரவண்டிகளை இலங்கைக்கு இறக்கத் திட்டம்

கொழும்பு, ஜூலை 20
இலங்கையில் புதிய வகை முச்சக்கர வண்டி அறிமுகம்செய்யப்படவுள்ளதுஎன்றுஅறிவிக்கப்பட்டுள்ளது.
மீன், பால் மற்றும் மரக்கறி உட்பட இயற்கையான தயாரிப்புகளைக் கொண்டு செல்வதற்குக்குளிர்சாதனவசதியைகொண்டமுச்சக்கர வண்டியே இவ்வாறு அறிமுகம் செய்யப்படவுள்ளது.
இயற்கைஉற்பத்திகளுக்குப்பாதிப்புஏற்படுவதனை குறைத்துக் கொள்வதற்காக இந்த முச்சக்கர வண்டி தயாரிக்கப்பட்டுள்ளது.
அதில் பொருத்தப்பட்டுள்ள குளர்சாதனப் பெட்டி சூரிய சக்தியில் இயங்கவுள்ளது.
இதனை மலேசிய நிறுவனம் ஒன்று தயாரித்துள்ளது. இந்தத் தயாரிப்பின் மூலமாக மின்சாரத்துக்குச்செலவிடப்படும்பெருந்தொகைப் பணத்தை மீதப்படுத்த முடியும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
இதற்கு மேலதிகமாக இந்த முச்சக்கர வண்டியில் ஒரே முறையில் 1000 லீற்றர் பால், 300 கிலோ இறைச்சி வகைகளைக் கொண்டு செல்லமுடியும். சீரற்றகாலநிலைகாரணமாக சூரிய சக்தியை பெற்றுக் கொள்ள முடியாத சந்தர்ப்பங்களில் சார்ஜ் செய்து கொள்ளக் கூடிய வகையில் மின்கலங்கள் பொருத்தப்பட்டுள்ளன. சூழலுக்கு நெருக்கமான இந்த முச்சக்கரவண்டிகள் மணிக்கு 60 கிலோமீற்றர் வேகத்தில் பயணிக்கும் என்று தெரிவிக்கப்படுகின்றது. (4)

### வசீம் தாஜுதீன் கொலை வழக்கில்

# 20 கேள்விகளுக்கான பதிலை செப்ரெம்பருக்குள் வழங்கவும்

### சி.ஐ.டிக்கு நீதிமன்று உத்தரவு

கொழும்பு, ஜூலை 20
பிரபலறக்பிவீரர்வசீம்தாஜுதீன் சடமாக மீட்கப்பட்ட இடத்தை அண்மித்த வீடுகளில் பொருத்தப்பட்டிருந்த சி.சி.ரி.வி. காணொளிகளை உள்ளடக்கிய, இருஇறுவெட்டுகள்தொடர்பிலான பகுப்பாய்வு அறிக்கையை நீதிமன்றுக்குவழங்குமாறு குற்றப் புலனாய்வுப் பிரிவுக்கு கொழும்பு நீதிவான் மன்று உத்தரவிட்டுள்ளது.
கொழும்பு மேலதிக நீதிவான் இசுரு நெத்திகுமாரகே, கணினி அவசர உதவிப் பிரிவின் தலைமை நிறைவேற்று அதிகாரி லால் டயசிக்கு இவ்வாறு உத்தரவு பிறப்பித்துள்ளார்.
தாஜுதீன் காருக்குள் இருந்து சடலமாக மீட்கப்பட்டபோது அந்தக் கார் இருந்த இடத்துக்கு அருகில் இருந்த வீடுகளில் இருந்து பெறப்பட்டதாகக் கூறப்படும்காணொளிகளே இரண்டு இறுவட்டுகளில்பகுப்பாய்வுக்கு அனுப்பப்பட்டிருந்தன.
குற்றப் புலனாய்வுப் பிரிவு மன்றுக்கு வழங்கிய இரு இறுவெட்டுகளையும் பகுப்பாய்வு அறிக்கையைப் பெற்றுக்கொள்வதற்காக அனுப்பிவைக்கப்பட்டிருந்தது. குறித்த காணொளியில் நபர் ஒருவரும் வாகனம் ஒன்றும் காணப்படுகிறது.
அவரின் பெருப்பிக்கப்பட்ட புகைப்படத்தைப் பெற்றுக் கொள்ள முடியுமா? வாகனத்தின் இலக்கத்தைப் பெற்றுக் கொள்ள முடியுமா? என்று குற்றப் புலனாய்வுப்பிரிவு கணினி அவசர உதவிப்பிரிவிடம்கோரியுள்ளது.
இதற்கான உத்தரவை இடையீட்டு மனுஒன்றூடாகக் குற்றப் புலனாய்வுப் பிரிவு பெற்றுக் கொண்டுள்ளது. அந்த இடையீட்டுப் பத்திர மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களுக்கு அமைவாக,
2012 மே 17 ஆம் திகதி வசீம் தாஜுதீனின் சடலம் அவரது காருக்குள்இருந்துமீட்கப்பட்டது.
காணொளிதொடர்பிலான பகுப்பாய்வு அறிக்கையைச் சமர்ப்பிக்க பண்டாரநாயக்க பன்னாட்டு மாநாட்டு மண்டபத்தில் அமைந்துள்ள கணினி அவசர உதவிப் பிரிவின் தலைமை நிறைவேற்று அதிகாரி லால் டயசிக்கு உத்தரவிடுமாறு குற்றப் புலனாய்வுப் பிரிவினர் நீதிமன்றிடம் கோரிக்கை விடுத்திருந்தனர்.
அந்தக் கோரிக்கையுடன், தமக்குப் பதில் தெரிய வேண்டிய 20 கேள்விகள் அடங்கிய கேள்விக்கொத்தொன்றையும்குற்றப் புலனாய்வுப் பிரிவின், இந்தக் கொலை விவகாரம் தொடர்பில் விசாரணை செய்யும் விசாரணை அதிகாரி சார்ஜன் ரத்னப்பிரிய மன்றில் முன்வைத்தார்.
குறித்த சி.சி.ரி.வி. காணொளிகளில் உள்ள நபர் அணிந்திருக்கும் ரீசேட்டின் பின் பக்கமாக உள்ள இலக்கம், ஆங்கில எழுத்துக்களை அடையாளம் கூற முடியுமா?, காணொளியில் உள்ள வாகனத்தின் இலக்கத்தை அடையாளம்காண முடியுமா?, காணொளியில் காட்டப்படும் நபரின் பெருப்பிக்கப்பட்ட உருவப்படம் ஒன்றைப் பெற முடியுமா?, இரு காணொளிகளிலும் உள்ள நபர்கள் ஒருவரா அல்லது வெவ்வேறான இருவரா? என்பது உள்ளிட்ட 20 கேள்விகளுக்கான பதிலே குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் முன்வைக்கப்பட்டுள்ள கேள்விக் கொத்தில்குறிப்பிடப்பட்டுள்ளன.
இதற்கான பதிலை எதிர்வரும் செப்ரெம்பர் 20 ஆம் திகதிக்கு முன்னர் நீதிமன்றுக்கு வழங்க கொழும்பு மேலதிக நீதிவான் கணினி அவசர உதவிப் பிரிவுக்கு உத்தரவிட்டுள்ளார்.
2012 ஆம் ஆண்டு மே மாதம் 17 ஆம் திகதி நாரகேன்பிட்டி பொலிஸ் பிரிவின் சாலிகா மைதானத்தின் அருகே எரிந்து கொண்டிருந்த காருக்குள் இருந்து வசீம் தாஜுதீன் சடலமாக மீட்கப்பட்டிருந்தார். முதலில் இது விபத்து என்று கூறப்பட்ட போதும், இரண்டாவது தடவை நடத்தப்பட்ட உடற்கூற்றுப் பரிசோதனைகளைத் தொடர்ந்து இது கொலை என்று நீதிமன்றம் தீர்ப்பளித்திருந்தது.
இந்தநிலையிலேயே இது குறித்த விசாரணைகள் குற்றப் புலனாய்வுப் பிரிவின் மனிதப் படுகொலைகள் தொடர்பிலான விசாரணைப் பிரிவூடாகத் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (4,71)

## கொழும்பில் விபச்சாரம் நடத்துவதாக விடுதிகள் மீது பாய்ச்சல்

கொழும்பு, ஜூலை 20
கொழும்பின்பல்வேறுபகுதிகளில், விபச்சாரம்இடம்பெறுவதாகக் கூறப்படும் பல விடுதிகள் பொலிஸார் முற்றுகையிட்டனர். ராஜகிரிய நாவல வீதியில் ஆயுர்வேத மசாஜ் நிலையம் என்ற பெயரில் நடத்திச் செல்லப்பட்ட விடுதிகள் நேற்றுமுன்தினம் இரவு சுற்றிவளைக்கப்பட்டுள்ளன. அங்கு வைத்தியராகச் செயற்பட்டார் என்று கூறப்படும் நபரும், விபச்சாரப் பணியில் ஈடுபட்டிருந்தனர் என்றகுற்றச்சாட்டில் 4 பெண்களும்கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
கைதுசெய்யப்பட்டவர்கள்வெல்ல, நீர்கொழும்பு, பொலனறுவைமற்றும்பதலங்கலபிரதேசத்தைச்சேர்ந்தவர்கள் என்று பொலிஸார் தெரிவித்தனர். சந்தேகநபர்கள் புதுக்கடை நீதிமன்றில் முற்படுத்தப்படவுள்ளனர். வெலிக்கடைப் பொலிஸார் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.
இதேவேளை, தெகிவளை, கவ்டான வீதியில் ஒரு விடுதியில் விபச்சாரம் நடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டு அங்கும் பொலிஸார் சோதனை நடத்தினர். அங்கு 4 பெண்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் அநுராதபுரம், மாத்தளை மற்றும் களுத்துறைப் பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள். கைது செய்யப்பட்டவர்கள் கல்கிசைநீதிமன்றில்முற்படுத்தப்படுவர்என்றுபொலிஸார் மேலும் தெரிவித்தனர். (4)



இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சியின் கடைய நல்லூர் சட்டமன்ற உறுப்பினர் கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர் தலைமையிலான குழுவினர், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அமைச்சர் ரவூப் ஹக்கீமுடன் இலங்கை நாடாளுமன்றுக்குச் சென்றுள்ளார். அங்கு பார்வையாளர் களரியில் அமர்ந்து சபைநிகழ்வுகளைபார்வையிட்டார். அங்குவந்திருந்த சிறிலங்காமுஸ்லிம்காங்கிரஸின்நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாணசபைமற்றும்உள்ளூராட்சிமன்ற உறுப்பினர்களுடனும்கலந்துரையாடினார்.

### அரசதலைவர் தேர்தலில்

# கூட்டு எதிரணியின் வேட்பாளர்களில் ராஜபக்ச குடும்பம் தவிர்ந்த பிறரும்!

### பசில் ராஜபக்ச இப்படிக் கூறுகிறார்



**கொழும்பு, ஜூலை 20**
**அரசதலைவர்தேர்தலில்கூட்டுஎதிரணியின்தரப்பில் ராஜபக்ச குடும்பத்துக்கு வெளியே உள்ளவர்களை வேட்பாளராக நிறுத்துவது குறித்தும் பரிசீலிக்கப்படுகிறது. எந்தமுடிவாகஇருந்தாலும்மகிந்தவேஎடுப்பார்என்று முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.**

கொழும்பு ஆங்கில நாளிதழ் ஒன்றுக்கு அளித்துள்ள செவ்வியில், அரசதலைவர் தேர்தலில் எதிரணியின் வேட்பாளர் தொடர்பான கேள்விகளுக்குப் பதிலளிக்கையில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

“அரசதலைவர் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர் தொடர்பாக முன்னாள் அரசதலைவர் மகிந்த ராஜபக்ச அவசரப்பட்டு முடிவெடுப்பார் என்று நான் நினைக்கவில்லை. தேர்தலுக்கு இன்னும் 450 நாள்கள்வரை உள்ளன.

இந்தளவுக்கு முன்கூட்டியே வேட்பாளர் பற்றி நாம் முடிவுசெய்ய வேண்டியஅவசியமில்லைஎன்று நினைக்கிறேன்.

முன்னர், பொதுமக்கள் மற்றும் அமைப்புகளுடன் அதிகம் கலந்துரையாடியே முடிவு எடுக்கப்பட்டது.

அரசதலைவர் வேட்பாளர் தொடர்பாக, முடிவெடுக்கப் பல கட்சிகள், அமைப்புகளுடன் கலந்துரையாடும் முறையான நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டியுள்ளது. நடைமுறைகளின்படி, மகிந்த ராஜபக்சஇதனைச்சரியானநேரத்தில்செய்வார்.

கேள்வி - வேட்பாளராக உங்களின் பெயர், கோத்தபாய ராஜபக்ச மற்றும்சமல் ராஜபக்சவின் பெயர்களும் அடிபடுகின்றனவே. உங்களுக்கு அரசதலைவர் வேட்பாளர் கனவு இருக்கிறதா?

பதில் - என்னிடம் அத்தகைய கனவு இல்லை. பலரும் பல்வேறு கருத்துகளைவெளியிடுகிறார்கள். அது அவர்களின் சுதந்திரம். தகுதியான பலர் இருக்கிறார்கள் என்பதையும் இது காட்டுகிறது.

நீங்கள் குறிப்பிட்ட பெயர்களைத் தவிரவேறுபலபெயர்களும்உலாவுகின்றன. அவர்களில் ராஜபக்ச குடும்பத்தைச் சேராதவர்களும் உள்ளனர்.

கேள்வி - ராஜபக்ச குடும்பத்துக்கு வெளியில் உள்ளவர்கள் யார்?


பதில் - அதனைநான்வெளிப்படையாகக்கூறவிரும்பவில்லை. வேட்பாளர்கள் குறித்துப் பேசுவதை நிறுத்திக் கொள்கிறேன்.

அதுபற்றி மகிந்த ராஜபக்சவே முடிவு செய்வார். அனைவருடனும் கலந்துரையாடி இறுதியான முடிவை எடுக்கும் உரிமை அவருக்கு வழங்கப்பட்டுள்ளது.

கேள்வி - அதிபர் வேட்பாளருக்கானதகைமைகள் குறித்து உங்களின் கருத்து என்ன?

பதில் - மீண்டும் சொல்கிறேன், அதனை மகிந்த ராஜபக்ச கவனித்துக்கொள்வார். (4)

## கேலிச்சித்திரம்



நன்றி: டெய்லிமிரர்

## காதலனின் இதயத்தை மட்டுமன்றி பொருள்களையும் திருடினாள் காதலி

கொழும்பு, ஜூலை 20
காதலிப்பதாகக்கூறி பல மாதங்களாகஆணுடன்பழகி வந்த பெண் , விடுதியில் ஆண் குளியலறைக்குள் சென்றதும் குளியலறையைப் பூட்டிவிட்டு அவரது பணம், அலைபேசி உள்ளிட்டபெறுமதியானபொருள்களைத் திருடிச் சென்றுள்ளார். இந்த விசித்திரச் சம்பவம் கொழும்பில் சில நாள்களுக்குமுன்னர்இடம்பெற்றிருக்கிறது. குறித்த பெண் காதலிப்பதாகக்கூறிப் பல மாதங்களாகஆண்ஒருவருடன் தொடர்பில் இருந்துள்ளார். இருவரும் உல்லாசமாக இருக்கவென்று விடுதி ஒன்றுக்குச்சென்றுள்ளனர். அங்கு ஆண் குளியலறைக்குள் சென்றுள்ளார்.

இதுதான் சந்தர்ப்பம் என்று எதிர்பார்த்திருந்ததுபோல ஆண் குளியலறைக்குள் நிற்கும்போது வெளிப்புறமாகக்கதவைப் பூட்டிவிட்டார்.

பின்னர் காதலனுடைய பணம், அலைபேசி மற்றும் பெறுமதியான பொருள்களைத்திருடிவிடுதியிலிருந்து வெளியேறிதனதுமற்றொரு நண்பருடன் அந்தப் பெண் சென்றுவிட்டார்.

இத்தகைய சூழ்ச்சிகளை அறிந்திராதகாதலன், குளியலறை யிலிருந்து வெளியே வரமுற்பட்டபோதுகதவைத் திறக்கமுடியாதவாறுவெளிப்புறமாகக் கதவு பூட்டப்பட்டுள்ளதைப் புரிந்து கொண்டார். எவ்வளவோகூப்பிட்டுப் பார்த்தும்அவரதுகாதலியிடமிருந்து எந்தவொருபதிலும் கிடைக்கவில்லை. கதவைத் தட்டியும் உரக்கச் சத்தமிட்டும்அவர்பிறரதுஉதவியை எதிர்பார்த்திருந்தபோது எதேச்சையாக விடுதியின் பணியாளர்ஒருவரதுகாதில் அந்தச்சத்தம் கேட்டுள்ளது.

அவர் அறையின் உள்ளே சென்றபோதுகுளியலறைக்குள்இருந்துஒருவரதுசத்தம் வருவதைப்புரிந்துகொண்டார்.

கதவைத் திறந்தபோது காதலன் வெளியே வந்து காதலியைத் தேடியுள்ளார், காணவில்லை. அலைபேசியில் அவருக்கு அழைப்பு ஏற்படுத்த முற்பட்டபோதே தனது அலைபேசி மட்டுமன்றி பணம் உள்ளிட்ட பொருள்களும் திருடப்பட்டுள்ள என்பதைக்கண்டார்.

அது தொடர்பில் காதலன் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடுசெய்தார்.

காதலியும்காதலிக்குஉதவியவரும் கைது செய்யப்பட்டனர். அவர்கள் விசாரணையின் பின்னர் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர். இருவரும் தலா 45 ஆயிரம் ரூபா பிணையில்விடுவிக்கப்பட்டனர். அவர்கள் மீதான வழக்கு ஒத்திவைக்கப்பட்டது. (4)

### இந்திய அரசின் 300 மில்லியனில்

# 3, 400 மலசலகூடங்கள் மட்டக்களப்பில் அமையும்

கொழும்பு, ஜூலை 20
மட்டக்களப்புமாவட்டத்தில் 3 ஆயிரத்து 400 மலசல கூடங்கள்அமைக்கப்படவுள்ளன. இந்தியாவின் 300 மில்லியன் ரூபாநிதி உதவியில் இவற்றை அமைப்பதற்கான ஒப்பந்தம் கொழும்பில் நேற்றுக் கைச்சாத்திடப்பட்டது.

இலங்கைக்கான இந்தியத்தூதர் தரன்ஜிற் சிங்சந்து, இலங்கையின் கடற்றொழில், கிராமப் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் செயலர் றேனுகா ஏக்கநாயக்க ஆகியோர் ஒப்பந்தத்தில்கைச்சாத்திட்டனர். அதன்போது அமைச்சின்பிரதி அமைச்சர் அமர்அலி பங்குகொண்டிருந்தார்.

மட்டக்களப்பில் பொதுமக்களின் பொதுச்சுகாதாரம் மற்றும் சுகாதாரத்தை அதிகரிக்கும் நோக்கில் இவை அமைத்துக் கொடுக்கப்படவுள்ளன என்று இந்தியத் தூதரக ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது. (4)





## இப்படியும் ஒரு விபத்து பெண் பரிதாப இறப்பு

கொழும்பு, ஜூலை 20
வாகன விபத்துகள் பல விதங்களில் ஏற்படுகின்றன. நாங்கள் பயணிக்கும் வாகனம் விபத் துக்குள்ளாகலாம், நடந்து போகும்போது வாகனங்களால் மோதுண்டு விபத்து இடம்பெறலாம், நாமே ஒரு வாகனத்தைச் செலுத்தும் போது விபத்துக்குள்ளாகலாம், உயிரிழப்பும் ஏற்படலாம்.

ஆனால் அம்பாறையில் சில நாள்களுக்கு முன்னர்நடந்திருப்பதுஇப்படிவகையானவிபத்தல்ல. அப்பாவியானஒருபெண் அம்பாறைநகரமண்டபத்தில் நடந்த விழாவில் கலந்துகொண்டபின்னர்தனது உந்துருளியில்வீடுதிரும்பிக்கொண்டிருந்தார்.

அவருக்கு எதிர்த் திசையிலிருந்து இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பேருந்து வந்தது. திடீரென்று அதன் முன் சில் கழன்றுபெண்பயணித்துக்கொண்டிருந்த உந்துருளியுடன்மோதியது. உந்துருளியில்பயணித்தவர் வீதியில் வீழ்ந்து படுகாயமடைந்து உயிரிழந்தார். அதே மாவட்டத்தைச் சேர்ந்த பிரிய தரிசினி ஹேமமாலி (வயது - 40) என்பவரே உயிரிழந்தார். அவருடன் உந்துருளியில் பயனித்த மற்றொரு பெண் காயமடைந்து அம்பாறை மருத்துவமனையில் சிகிச்சை பெறுகிறார். பொலிஸார் விசாரணை நடத்துகின்றனர். (4)

இலங்கை ஆசிரிய கல்வியாளர் சேவைத் தரம் 111க்கு ஆள்சேர்த்தவர்களை இடைநிலைப்படுத்தல் கடிதம் கல்வி அமைச்சின் கேட்போர் கூடத்தில் நேற்று வழங்கப்பட்டது. தமிழ் மொழி மூலமாக 104 பேருக்கும், சிங்கள மொழி மூலமாக 210 பேருக்குமான கடிதங்கள் கையளிக்கப்பட்டன. கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம், கல்வி இராஜாங்க அமைச்சர் வே. இராதாகிருஸ்ணன் ஆகியோர் இணைந்து இந்தக் கடிதங்களை வழங்கி வைத்தனர். (4)

## மன்னார் மனிதப் புதைகுழி பற்றி தகவல்களை வெளிப்படுத்துங்கள்

கூட்டு எதிரணி வலியுறுத்துகிறது

கொழும்பு, ஜீலை 20
மன்னார் மனிதப் புதைகுழி தொடர்பான மர்மத்தை நாட்டு மக்களுக்கு அரசு விரைவில் பகிரங்கப்படுத்தவேண்டும் என்று கூட்டு எதிரணியின் நாடாளுமன்ற உறுப்பினர் பத்ம உதயசாந்த குணசேகர வலியுறுத்தினார்.

நாடாளுமன்றத்தில்நேற்று நடைபெற்ற வாய்மூல விடைக்கான கேள்விநேரத்தின்போது இடையீட்டுக் கேள்வியொன்றை எழுப்பிய அவர்,

மன்னார் மனிதப் புதைகுழி அடையாளம் காணப்பட்ட இடம் பாதுகாப்பு இடமாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. நீதிமன்றில் இது தொடர்பான நடவடிக்கை இடம்பெற்று வருகின்றது.

புலிகள் அமைப்பாலோ அல்லது திட்டமிட்ட அடிப்படையில் கொல்லப்பட்டவர்கள் புதைக்கப்பட்ட இடமாகவேஅதுவிளங்குகின்றது. எனவே, இதன் பின்னணி தொடர்பில் நாட்டு மக்களுக்கு விரைவில் அரசு தெளிவுபடுத்தவேண்டும் - என்றார். (4)

## பூங்காவில் பற்றிய தீ கட்டுக்குள் வரவில்லை

கொழும்பு, ஜீலை 20
பொலனறுவைசோமாவதி தேசிய பூங்காவில் நேற்று முன்தினம் பிற்பகல் பரவிய தீ இதுவரை கட்டுப்பாட்டுக்குள் வரவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

இதனால் சுமார் 2 ஏக்கர் தீக்கிரையாகியுள்ளது. காற்றுப் பலமாக வீசுவதால் தீயைக்கட்டுப்படுத்துவதில் சிரமப்படுவதாகத்தெரிவிக்கப்படுகிறது. (4)

மூதாட்டியை அடுத்து

# அலுக்கோஸ் பதவிக்கு மேலும் ஐவர் விண்ணப்பம்

**கொழும்பு, ஜூலை 20**
**இலங்கையில்மீண்டும்தூக்குத்தண்டனை நடைமுறைப்படுத்தப்படவுள்ள நிலையில், அதனை நிறைவேற்றும் பதவிக்கு மேலும் ஐவர் விண்ணப்பித்துள்ளனர்.**



தமது பகுதியில் உள்ள பிள்ளைகள் ஹெரோயின் மற்றும் போதைப்பொருள்களுக்கு அடிமையாவது மற்றும் உயிரிழப்பதைத் தடுப்பதற்காக 5 இளைஞர்கள் இந்தப் பதவிக்கு விண்ணப்பித்துள்ளனர்.

தாம்தன்னார்வமாகஇந்தப்பதவியை ஏற்றுக் கொள்வதாக மஹவிலச்சிய கிராமத்தைச் சேர்ந்த ஐவரும் தெரிவித்துள்ளனர்.

அநுராதபுர மாவட்டத்தின் வறுமையான கிராமத்தில் வசிக்கும் ருவன் ஹேமந்த, ஹேரத்பண்டா, சனிரத்ன பண்டார, நிஹால் ரூப்பசிங்க மற்றும் சமிந்த பிரேமதிலக்க எனும் 30 தொடக்கம்40வரையானவயதுகளையுடைய இளைஞர்களே இந்தப் பதவியை ஏற்றுகொள்ள விண்ணப்பித்துள்ளனர். நாட்டு மக்களுக்குப் பிரச்சினையை ஏற்படுத்தும் போதைப்பொருள் வர்த்தகத்தைத் தடுப்பதற்காகத் தாம்தன்னார்வமாகஇந்தப்பதவியை ஏற்றுக்கொள்வதாக அந்த இளைஞர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இந்தப்பதவியைஏற்றுகொள்ளயாரும் இல்லைஎன்றால்நாம்வருகின்றோம். நாம் பிரபலமடைய இதைக் கேட்கவில்லை. பயிற்சி பெற்று இதனைச் செய்ய நாம் தயார் என அவர்கள் கூறியுள்ளனர். இதேவேளைகலாவத்தை, ஆராச்சிக்கட்டுவபிரதேசத்தைச்சேர்ந்த 71 வயதுடைய எல். பி. கருணாவதி, யாரும் இல்லை என்றால் தான் தயார் என்று அண்மையில் அலுக்கோஸ் பதவிக்கு விண்ணப்பம் செய்திருந்தார். நாட்டில், குற்றச்செயல்கள் அதிகரித்துக்கொண்டேசெல்கின்றன. அவற்றைத்தடுக்கவேண்டுமென்றால்அரசு தூக்குத்தண்டனையைநிறைவேற்ற வேண்டும். எல்லாவற்றுக்கும்மேலாக இந்த வேலையைத் தான் சேவையாகவே செய்வார் என்றும் அதற்காகத் தனக்கு எவ்வித சம்பளமும் தேவையில்லைஎனவும்அம்மூதாட்டிதெரிவித்திருந்தமைகுறிப்பிடத்தக்கது. (ரி2)

## மக்களுக்காய் வீதியை சுத்தப்படுத்திய பெண்

கொழும்பு, ஜீலை 20
வீதியில் இறங்கி அதனைச் சுத்தப்படுத்தியபிரதேசசபைப்பெண்உறுப்பினர் ஒருவரின் செயல் அனைவரையும் மெய் சிலிர்க்க வைத்துள்ளது.

ஹொரனை, திக்ஹேன்புர வீதியில் நேற்றுமுன்தினம்காலை இவர் தனியாகவீதியைச்சுத்தப்படுத்தியுள்ளார். இதனைப் பலரும் கண்டுள்ளனர்.

வீதியைச் சுத்தப்படுத்துவதற்கான காரணத்தைக்கேட்டபோது, வித்தியாசமான பதிலைக் கூறியுள்ளார். பிரதேசசபைநியமிக்கப்பட்டநாள்முதல் வீதியைச் சுத்தப்படுத்துமாறு நான் கேட்டுக் கொண்டேன். வீதியின் இரண்டு பக்கங்களும் காடுகள் போன்று காணப்படுகின்றன. அதனையும்சுத்தப்படுத்தித்தரவில்லை. ஏன் கண்டுகொள்ளவில்லை என்று கேட்டால் சபையில் பணியாளர்கள் இல்லை எனக் கூறுகின்றார்கள். தேடிப்பார்த்தால்தேவையானஅளவு பணியாளர்கள் உள்ளனர்.

அவர்கள்இந்தவேலைகளைச்செய்ய வருவதில்லை. அலுவலக வேலைகளைத் தான் செய்கின்றார்கள்.

வாக்களித்த மக்களின் முகத்தை எப்படிப் பார்ப்பது. அதனால் நானே அனைத்து வேலைகளையும் செய்கின்றேன். என்று கூறியதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ரி2)



## எதிர்க்கட்சியின் தலைவர் பதவியை எமக்கு தாருங்கள்

மகிந்த அணி கோரிக்கை

கொழும்பு, ஜீலை 20
நாடாளுமன்ற எதிர்க்கட்சிப் பதவியை தமக்குத் தரக்கோரி மகிந்தஅணிநாடாளுமன்றஉறுப்பினர்கள்சபாநாயகர்கரு ஜெயசூரியவிடம்மீண்டும்கோரிக்கைமுன்வைத்துள்ளனர். மகிந்த அணியின் கோரிக்கையை எழுத்து மூலம் தமக்கு அறிவிக்குமாறும், அதன் பின்னர் எதிர்க்கட்சியுடன் கலந்துரையாடிப் பரிசீலனை செய்து அடுத்த நாடாளுமன்ற அமர்வில்முடிவை அறிவிப்பதாகச்சபாநாயகர் தெரிவித்துள்ளார். சிறிலங்காசுதந்திரக்கட்சியின்சுயாதீனஅணியினர்மகிந்த அணியுடன் இணைந்த பின்னர் தம்மைச் சுயாதீன அணியாக அறிவிக்கக்கோரியும் அதே நிலையில் நாடாளுமன்றின் பிரதான எதிர்க்கட்சிப் பதவியைத் தமக்குத் தரக்கோரியும் மகிந்த அணியினர் தொடர்ச்சியாகக் கோரிக்கை முன்வைத்து வருகின்றனர்.

இந்த நிலையில் நேற்று முன்தினம் மகிந்த அணியின் முதன்மை உறுப்பினர்களான தினேஷ் குணவர்தன, பந்துலகுணவர்தன, விமல்வீரவன்சஉள்ளிட்டவர்கள்சபாநாயகர் கரு ஜெயசூரியவைச் சந்தித்து எதிர்க்கட்சித் தலைவர் பதவியைப்பெற்றுக்கொள்ளும்கோரிக்கையைமுன்வைத்துள்ளனர்.

எதிர்கட்சித் தலைவர் பதவி தமது அணிக்கு வழங்கப்படவேண்டியதன்முக்கியத்துவம்மற்றும்நியாயாதிக்கத்தையும் எடுத்துரைத்துள்ள கூட்டு எதிரணி , 70 உறுப்பினர்களைக் கொண்ட தமது அணிக்கே எதிர்க்கட்சித் தலைவர் பதவி வழங்கப்பட வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

எனினும் மகிந்தஅணியினர்முன்வைத்தகோரிக்கையை எழுத்து மூலமாகத் தருமாறு வலியுறுத்திய சபாநாயகர் கரு ஜெயசூரிய அவ்வாறு அறிவிக்கும் நிலையில் எதிர்க்கட்சித் தலைவர்சம்பந்தன் மற்றும் உரிய தரப்புடன் இந்த விவகாரம்தொடர்பில்பேச்சுநடத்திஒருமுடிவைஎட்டமுடியும்எனக் கூறியுள்ளார்.

நேற்று முன்தினம் எதிர்க்கட்சித் தலைவர் இரா. சம்பந்தன் சபாநாயகர் கரு ஜெயசூரியவை தனிப்பட்ட முறையில் சந்தித்துஎதிர்க்கட்சிப்பதவிநிலவரம்குறித்து கலந்துரையாடியிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ரி2, 61)

இலங்கை அரசின் பணத்தில்

## இலங்கைக்குச் சுற்றுப் பயணம் இயனின் பதவி இடைநிறுத்தம்

கொழும்பு, ஜீலை 20
இலங்கைஅரசின்அனுசரணையில் இலங்கைக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டதாகக்குற்றம்சுமத்தப்படும் பிரிட்டன் நாடாளுமன்ற உறுப்பினர் இயன்பெஸ்லிஜீனியர், நாடாளுமன்ற உறுப்பினர் பதவியில் இருந்து தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளார்.



ஒருமாதகாலத்துக்குஅவர்பதவியில் இருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளார். பிரித்தானியநாடாளுமன்றின் அனுமதியின்றித்தனதுகுடும்பத்தினருடன் கடந்த 2013 ஆம் ஆண்டு, இயன் பெஸ்லி இலங்கைக்குப் பயணம் செய்துள்ளதாகக்குற்றம்சுமத்தப்படுகிறது.

இவருக்காக இலங்கை அரசு ஒரு இலட்சம்பவுண்களைசெலவிட்டிருந்ததாகத் தெரியவந்துள்ளது.

இது குறித்து பிரித்தானிய நாடாளுமன்றத்தின் குழு ஒன்று விசாரணை நடத்தியதுடன் இந்த விசா ரணைகளுக்கு அமைய செப்ரெம்பர் 4 ஆம் திகதி முதல் ஒரு மாத காலத்துக்கு இயன் பெஸ்லியைப் பதவியில் இருந்து இடைநிறுத்துவது எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இலங்கைக்குஎதிராகஐக்கியநாடுகள் மனித உரிமை சபையில் கொண்டுவரப்பட்ட யோசனைக்கு எதிராகச் செயல்படுமாறுகோரிஇயன்பெஸ்லி, கடந்த2014ஆம்ஆண்டு, அன்றைய பிரித்தானிய தலைமை அமைச்சர் டேவிட் கமரூனுக்குக் கடிதம் அனுப்பியிருந்தார்.

இலங்கைஅரசின்அனுசரணையில் இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டிருந்த இயன் பெஸ்லி, மகிந்தராஜபக்சஅரசின்உயர்மட்டப் பிரதிநிதிகளைச்சந்தித்துக்கலந்துரையாடிஇருந்ததாகப்பிரிட்டன் ஊடகங்கள்தகவல் வெளியிட்டிருந்தன.

இயன் பெஸ்லியின்நாடாளுமன்றப் பதவிஒருமாதத்துக்குஇடைநிறுத்தப்பட்டுள்ளதால், பிரித்தானியதலைமை அமைச்சர் தெரேசா மே நெருக்கடியைஎதிர்நோக்கியுள்ளதாகக்கூறப்படுகிறது.

தலைமை அமைச்சர் தெரேசாமேயின் கூட்டணி கட்சியில் அங்கம் வகிக்கும் இயன் பெஸ்லியின் தேர்தல் தொகுதிக்கு இடைத் தேர்தலை நடத்துமாறு தொகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளதே இந்த நெருக்கடிக்குக் காரணம்.

எதிர்வரும் நவம்பர் மாதம் பிரித்தானியா, ஐரோப்பியஒன்றியத்தில் இருந்து விலகியமை தொடர்பில் வாக்கெடுப்பு நடத்தப்படவுள்ளது. இயன் பெஸ்லிக்கு எதிராக நாடாளுமன்றக் குழு எடுத்துள்ள தீர்மானம் தேர்தல் முடிவுகளில் பாதிப்பை ஏற்படுத்தலாம் என்றும் கருதப்படுகிறது. (ரி2)

## வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்குச் செயலமர்வு

யாழ்ப்பாணம், ஜீலை 20
நாட்டில் உள்ள அனைத்து வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கும் கல்வி தொடர்பிலான செயலமர்வு நேற்று இடம்பெற்றது

செயலமர்வு நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் நடைபெற்றது.

இதன்போது, பிள்ளைகள் அபிவிருத்தி தொடர்பாக விரிவுரையாளர் சமிந்த வீரஸ்ரீவர்த்தனவும், கல்வியின் வெற்றிக்கான வழிகள் தொடர்பில், வை. எம். எம். எஸ் யாப்பா வாலாலும் விளக்கவுரை நடத்தப்பட்டது. ஒவ்வொரு வருடமும் நாடாளுமன்றக் கல்விப் பிரிவால் பயனுள்ள செயலமர்வுகள் தொடர்ச்சியாக நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ரி2,7)

Congratulations Congratulations

# மு/ பாண்டியன்குளம் மகா வித்தியாலய

## அதிபர் உயர்திரு. தனுக்கோடி அருமைநாயகம் அவர்களின்

# 60 ஆவது அகவை நிறைவும் சேவை நயப்பும்

## 21.07.2018 சனிக்கிழமை



பெயர் :- திரு.தனுக்கோடி அருமைநாயகம் -(SLPS-I)

பாடசாலை :- மு/பாண்டியன்குளம் மகா வித்தியாலயம்

முகவரி :- இல.03, 2ஆம் பகுதி,
அணிஞ்சியன்குளம், யோகபுரம்.

பிறந்த திகதி :- 21.07.1958

முதல் நியமனம் :- 15.03.1990

### கல்விச் சேவை விவரம்:

| ஆண்டு | பாடசாலை | பதவி |
|---|---|---|
| 15.03.1990 - 17.06.1996 | மு/தென்னியன்குளம் G.T.M.S | ஆசிரியர் |
| 18.06.1996 - 01.09.2002 | மு/தென்னியன்குளம் G.T.M.S | அதிபர் |
| 02.09.2002 - 05.07.2011 | மு/திருநகர் தமிழ் வித்தியாலயம் | அதிபர் |
| 06.07.2011 - 21.07.2018 | மு/பாண்டியன் குளம் ம.வி | அதிபர் (SLPS-I) |

சமயப்பணி :- மல்லாவி சிவன் ஆலய பரிபாலன சபை உறுப்பினர்.

### ஆசிச் செய்தி



முல்லைத்தீவு பாண்டியன்குளம் எனும் பசுமை ஊரின் மத்தியிலே எல்லோருக்கும் நல்லறிவினையும் ஒழுக்கத்தையும் ஊட்டுகின்ற பாடசாலை பாண்டியன்குளம் மகா வித்தியாலயம். அப்பாடசாலையுடைய அதிபர் பெருமதிப்பிற்குரிய அருமையான திரு.த.அருமைநாயகம் அவர்கள் ஓய்வு பெறுகின்றார். அவர் ஓய்வு பெறுவது அவரிற்கு மனமகிழ்வைக் கொடுத்தாலும் நமக்கெல்லாம் வேதனையாய் இருக்கின்றது. ஏனெனில் இப்படியான ஒரு கடமை கண்ணியம் கட்டுப்பாடுடைய அதிபர் நமக்கு கிடைக்குமா? அவருடைய வயது போகலாம் ஆனால் அவருடைய கல்வியை எல்லோரிற்கும் விதையாக விதைத்திருக்கின்றார். எனவே அவை மனித குலம் வாழும்வரை ஒருபோதும் அழியாது..... என்று கூறி அவருடைய ஓய்வுக் காலம் சிறப்புற தீர்க்க ஆயுளுடன் இருக்க வேண்டும் என்று சிவபுரநாதர் கமலங்களைப் பணிந்து எனது ஆசியும் உரித்தாகட்டும்.

**சிவஸ்ரீ செ. விமலராஜக் குருக்கள்**
**சிவாலய பிரதம குருக்கள்**
**சீதளாம்பிகை சமேத சிவபுரநாதர் - பெருங்கோவில்.**

### வாழ்த்துச் செய்தி



"நன்று. நம்பிக்கைக்குரிய நல்ல பணியாளரே. சிறிய பொறுப்புக்களில் நம்பிக்கைக்கு உரியவராய் இருந்தீர். எனவே பெரிய பொறுப்புக்களில் உம்மை அமர்த்துவேன். உம் தலைவனாகிய என் மகிழ்ச்சியில் நீரும் வந்து பங்குகொள்ளும் (தி.வி.மத்.25:21)

கல்விப் பணியில் தன்னை அர்ப்பணித்து சேவையாற்றி இன்று மணிவிழாக் காணும் அதிபர் திரு. தனுக்கோடி அருமைநாயகம் அவர்களை வாழ்த்துவதில் பெரும் மகிழ்ச்சியடைகின்றேன். சேவைக் காலத்தில் ஆசிரியராக, அத்தோடு மூன்று பாடசாலைகளில் அதிபராக இருந்து பணியாற்றி பல மாணவர்களை உருவாக்கி அந்தந்த பிரதேசங்களை வளர்த்த பெருமை இவரையே சாரும். அண்மையில், இவர் பணியாற்றிக் கொண்டிருந்த வித்தியாலயத்தின் மிகவும் பிரமாண்டமாக நடைபெற்ற பொன் விழா நிகழ்விற்குச் சென்றேன். பாடசாலை மட்டில் அவருக்கிருக்கின்ற ஆழ்ந்த ஈடுபாடு, கடும் உழைப்பு மற்றும் அவருடைய திறமைக்குப் பெருமை சேர்க்கும் புகழ் மாலையாக அந்த விழாவை நான் உணர்ந்து கொண்டேன். பணியிலிருந்து ஓய்வு பெற்றாலும், ஆளுமை மிக்க இவருடைய சேவைகள் கல்விச் சமூகத்துக்கு கிடைக்க இறைவன் நல்ல உடல் சுகத்தையும், ஆசியையும் இவருக்கு வழங்க வேண்டுமென்று பிரார்த்தித்து வாழ்த்துகின்றேன்.

**அருட்தந்தை ஆ.எஸ்கரன்ராஜ்**
**பங்குத்தந்தை**
**புனித செபஸ்ரியார் ஆலயம், மல்லாவி.**

### வாழ்த்துச் செய்தி



துணுக்காய் கல்வி வலயத்தின் சிறப்பு மிகு பாடசாலைகளில் ஒன்றான பாண்டியன்குளம் மகா வித்தியாலயத்தின் அதிபரான திரு.தனுக்கோடி அருமைநாயகம் அவர்கள் அகவை 60 ஆனதால் ஓய்வுபெறுகின்றார். இவர் அதிபர் தரம் 1 ஐ சேர்ந்த சேவையாளன்.

இவரது கல்விப் பணி 1990 இல் தென்னியன்குளம் அ.த.க.பாடசாலையில் ஆசிரியராக ஆரம்பமாகி தொடர்ந்து அதிபராகவும் 28 ஆண்டுகள் நல்ல பணியைச் செய்து ஓய்வுபெறும் இவரை வாழ்த்துவதில் பெரு மகிழ்வடைகின்றேன்.

நற்குணத்தின் முதலாவது அடித்தளக்கல் நம்பகத்தன்மை. அதிபர் நம்பகத்தன்மை மிக்க செயலவீரன். தாம் ஒப்புக்கொண்ட செயல்களையும் வாக்குறுதிகளையும் நிறைவேற்றி பலரது பாராட்டுக்களைப் பெற்ற ஒருவராக நான் அவரைப் பார்க்கின்றேன். இடர்கள் பலநேரிட்ட போதிலும் எதிர்கொண்டு சமாளித்து வெற்றிபெறும் சக்தி பெற்றவர். உண்மையை நிரந்தரமாக மறைத்து வைக்க முடியாது.

சத்தியம் தானாகவே வெளிப்பட்டுக் கொள்ளும் என்ற இயற்கையின் நியதிக்கமைய அருமைநாயகம் அவர்களின் உண்மையான பணிக்காக 2002 இல் "வித்தியா விஜயா ஸ்ரீ சமண" என்ற விருதும், 2015 இல் " பிரதீபா பிரபா " விருதும், 2017 இல் "நல்லாசிரியர்" என்ற விருதும் கிடைக்கப்பெற்றது. 22 ஆண்டுகள் அதிபர் பணியில் தேசியப் பரீட்சைகளில் மாணவர்கள் சிறந்த சித்திகளைப் பெற்று மகிழ்வடைந்தனர்.

பல மாணவர்கள் பல்கலைக்கழகம் சென்று கல்வி கற்றனர். பாடசாலையும் இவரது காலத்தில் தரமுயர்த்தப்பட்டது. இவரது செயற்பாடுகள் பாடசாலைச் சமூகத்தினரின் மதிப்பினைப் பெறுவதற்கு வழி வகுத்தது. இவரது காலத்தில் தேசிய, ஆசிய மட்டத்தில் விளையாட்டில் தங்கப்பதக்கமும் வெல்லப்பட்டிருந்தது யாவரும் அறிந்த ஒன்றே.

தனது செம்மையான பணியின் மூலம் அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், பெரியோர்களின் நன்மதிப்பைப் பெற்ற ஒருவராக விளங்கும் இவரது சேவை பாடசாலையில் நிறைவுபெற்று சமூகம் நோக்கி நகர வழியமைத்துக் கொடுத்துள்ள இத்தருணத்தில் இவரது குடும்பத்தினருடன் சகல சௌபாக்கியங்களும் பெற்று நீடூழிகாலம் வாழ்ந்து சமூகம் சிறக்க பணிபுரிந்திட வாழ்த்துகின்றேன்.

**திரு.பொ.ரவிச்சந்திரன்**
**வலயக்கல்விப் பணிப்பாளர்**
**வலயக்கல்வி அலுவலகம், துணுக்காய்.**

### வாழ்த்துச் செய்தி



மணிவிழாக்காணும் திரு.தனுக்கோடி அருமைநாயகம் (SLPS-I) அவர்களுக்கான வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்வடைகின்றேன். 1990 ஆம் ஆண்டில் இருந்து 2018 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் இவரது சேவை அளப்பெரியது. இவர் ஓர் ஆசிரியர், அதிபர் என்ற பதவிகள் மூலம் சேவை வழங்கியவர் என்பதற்கு அப்பால் தந்தை ஸ்தானத்தில் இருந்து பல கல்விமான்களை உருவாக்கிய பெருமைக்குரியவர்.

மு/ தென்னியன்குளம் அ.த.க. பாடசாலையில் 1990 ஆம் ஆண்டில் ஆசிரியராக ஆரம்பித்த இவரது சேவை அதே பாடசாலையில் அதிபராக தரம் உயர்ந்து பின்பு மு/திருநகர் தமிழ் வித்தியாலயத்தில் அதிபராகவும் சேவையாற்றி இலங்கை அதிபர் சேவை தரம் - I பதவி உயர்வு பெற்று இன்று மு/பாண்டியன்குளம் மகா வித்தியாலயத்தில் சேவையாற்றுகின்றார். பாடசாலைகள் பல சாதனைகளை நிலை நாட்டுவதற்கு அச்சாணியாக இருந்தார் என்பது வெள்ளிடைமலை.

மணிவிழாக்காணும் திரு.தனுக்கோடி அருமைநாயகம் அவர்கள் எல்லா வளங்களும் பெற்று மேன்மேலும் வாழ வேண்டும் என இறைவனை வேண்டி வாழ்த்துகின்றேன்.

**மக்கள் சேவையிலுள்ள**
**திருமதி சாந்தி ஸ்ரீஸ்கந்தராசா**
**பாராளுமன்ற உறுப்பினர், வன்னி மாவட்டம்.**

### ஓய்வு காலத்திலும் கல்விப் பணியை முன்னெடுக்க வேண்டும்



1990 ஆம் ஆண்டு மு/ தென்னியன்குளம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் தனது ஆசிரியப் பணியை ஆரம்பித்து 2011 ஆம் ஆண்டில் இருந்து மு/ பாண்டியன் குளம் மகா வித்தியாலயத்தில் அதிபராகக் கடமையாற்றி வயது அறுபதுடன் ஓய்வுபெற்றுச் செல்லும் திரு.த.அருமைநாயகம் அவர்கள் ஓய்வுக் காலத்திலும் தனது மக்களுக்கும் பிறந்த மண்ணுக்கும் தனது சேவையைத் தொடர்ந்தும் வழங்க வேண்டும்.

கல்விப் பணியில் அவர் ஆற்றிய சேவைக்காக வித்தியா ஸ்ரீ சமண விருது, பிரதீபா பிரபா விருது, நிறைவாக 2017 ஆம் ஆண்டில் நல்லாசிரியர் விருது ஆகியவற்றைப் பெற்று இளைய தலைமுறை ஆசிரியர்களுக்கெல்லாம் முன்னுதாரணமாக வாழ்கின்றார்.

முல்லைத் தீவில் மிகவும் கஸ்டமான காலப் பகுதியில் தனது கல்விச் சேவையை ஆற்றி மாணவர்கள் பெற்றோரின் மனதில் நீங்கா இடம் பிடித்த அதிபர் திரு.த.அருமைநாயகம் அவர்கள் தனது குடும்பத்தினருடன் நலமே நீடூழி வாழ்ந்து தனது கல்விச் சேவையைத் தொடரக்கூடிய வகையில் உடல் வலிமையையும், மனவலிமையையும் இறைவன் வழங்க வேண்டும் என்று ஆசி கூறுகின்றேன்.

**கலாநிதி கந்தையா சர்வேஸ்வரன்**
**கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு,**
**வடமாகாணம்.**

### செயலாளரின் வாழ்த்துச் செய்தி



மு/ பாண்டியன்குளம் மகா வித்தியாலய அதிபராகக் கடமையாற்றி 60 ஆவது அகவையைப் பூர்த்தி செய்து அரச சேவையிலிருந்து ஓய்வுபெறும் திரு.த.அருமைநாயகம் அவர்களின் கல்விச் சேவையைப் பாராட்டுவதுடன் சேவை நயப்பு சிறப்பு மலருக்கு செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

2011 ஆம் ஆண்டு இப் பாடசாலை அதிபராகக் கடமை ஏற்று இன்றுவரை அயராது பாடுபட்டுள்ளார். பிள்ளைகளுடன் அன்பாகவும் பண்பாகவும் பழகுவதுடன் கல்வியை சிறப்புற வழங்குவதிலும் நிர்வாக நடவடிக்கைகளிலும் சிறப்பான பங்களிப்பினை வழங்கியிருப்பது குறிப்பிடத்தக்கதாகும். வித்யா விஜயா ஸ்ரீ சமண, பிரதீபா பிரபா விருது, நல்லாசிரியர் விருது பெற்றுள்ளமையானது அவரின் சிறப்பான சேவைக்கும் மனித நேயத்துக்கும் கிடைத்த கௌரவமாகும். இதுவரை காலமாக மேற்கொண்ட அரச சேவையைப் பாராட்டுவதோடு இவர் தனது ஓய்வுக் காலத்தில் பல சமூக, சமய பணிகளை மேற்கொண்டு தனது குடும்பத்தினருடன் மகிழ்ச்சியாக வாழ எனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**சி.சத்தியசீலன்**
**செயலாளர்,**
**கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு,**
**வடமாகாணம்.**

### வாழ்த்துச் செய்தி



மு/ பாண்டியன்குளம் மகா வித்தியாலயத்தினது அதிபராகக் கடமையாற்றி ஓய்வுபெறும் அதிபர் திரு. த. அருமைநாயகம் அவர்களது சேவையினைப் பாராட்டி வாழ்த்துச்செய்தி வழங்குவதில் மகிழ்வடைகின்றேன்.

1990 ஆம் ஆண்டில் அதிபராகத் தனது கல்விப் பணியினை ஆரம்பித்து 1996 ஆம் ஆண்டு தொடக்கம் பல்வேறு பாடசாலைகளில் அதிபராகத் தனது கடமைகளை ஆற்றியுள்ளார். 2011 ஆம் ஆண்டு தொடக்கம் மு/ பாண்டியன்குளம் மகா வித்தியாலயத்தின் அதிபராகச் சிறப்புடன் கடமை ஆற்றியுள்ளார். இவருடைய சேவைக்காலத்தில் இப்பாடசாலை 1AB தரம் பாடசாலையாகத் தரமுயர்த்தப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

இப்பாடசாலையானது பரீட்சைப் பெறுபேறுகள், இணைபாடவிதான அடைவுகள் சிறப்பாக உள்ளமையை அவதானிக்க முடிகிறது.

விளையாட்டுத் துறையில் இப்பாடசாலை தேசிய, ஆசிய மட்டங்களில் தங்கப்பதக்கங்களை வென்று சாதனைகளை நிலைநாட்டியுள்ளமை பாராட்டத்தக்கது ஆகும்.

மேற்படி சாதனைகளுக்கு வழிகாட்டிய அதிபரது பணிகளைப் பாராட்டுவதுடன் அவர் தனது சேவைக் காலத்தில் ஆற்றிய பணிகளுக்கு நன்றி கூறுவதுடன் அவரது ஓய்வுக்காலம் சிறக்கவும் வாழ்த்துகின்றேன்.

**செ.உதயகுமார்**
**மாகாணக் கல்வி பணிப்பாளர்,**
**வடக்கு மாகாணம்.**

**வாழ்த்துவோர்: ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்கள், ஆசிரியர் நலன்புரிக்கழகம்**

## மு/பாண்டியன்குளம் ம.வி.


# மீன்பிடியில் 'விஞ்ச்' உபகரணம் பயன்படுத்தலாமா? இல்லையா?

## தெளிவான பதில் இல்லாததால் மீனவர்களிடையே குழப்பம்

**யாழ்ப்பாணம், ஜூலை 20**

**யாழ்ப்பாண மாவட்டத்தில் கரைவலை மீன் பிடியில் ஈடுபடுவோர் 'விஞ்ச்' உபகரணம் பயன்படுத்துவது தொடர்பில் கடற்றொழில் அமைச்சின் பணிப்பாளர் நாயகம் தெளிவான பதிலை கூறாமையால் இழுபறி நிலை காணப்படுவதாக மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.**





இது பற்றி மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:
கரை வலை மீன்பிடி என்பது ஒரு தொகுதி வலையைகடலில் வள்ளத்தில்சென்றுபடிப் படியாக பரவி விட்டு வலையின் இரண்டு முனைகளையும் சேர்த்து இழுப்பதாகும். இதனை இழுப்பதற்கு இரண்டு பிரிவுகளாக இருபதுக்கும் அதிகமான தொழிலாளர்கள் பயன்படுத்தப்படுகின்றனர். இந்த தொழில் மூலம் பலர் தொழில் வாய்ப்பைப் பெறுகின்றனர். தொழிலாளர்கள் இன்மையைக் காரணம் காட்டி 'விஞ்ச்' உபகரணத்தைச் சிலர் பயன்படுத்துகின்றனர். தொழிலாளர்களைப் பயன்படுத்தி வலையை இழுப்பதற்கு பதிலாக உழவு இயந்திர பெட்டியுடன் இணைக்கப்பட்டதான இந்த உபகரணத்தை பயன்படுத்தி வலை இழுக்கப்படுகின்றது. இதனையே 'விஞ்ச்' உபகரணப் பயன்பாடு என்பர். இதனால் கடல் வளம் பாதிக்கப்படுகின்றது. தொழில் வாய்ப்பு குறைகின்றது என்று ஒரு தொகுதியினர் குற்றஞ்சாட்டி வருகின்றனர். யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கட்டைக்காடு, சுண்டிக் குளப் பகுதியில் இந்த உபகரணம் தற்போதும் பயன்படுத்தப்படுகின்றது. ஆகவே இந்த நிலையில் உபகரணத்தை பயன்படுத்துவதா இல்லையா என்ற தெளிவு மீனவர்களிடம் இல்லை. கடந்த மார்ச் மாதம் நடைபெற்ற வடமராட்சி கிழக்குப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் இந்த உபகரணம் பயன்படுத்துவது தொடர்பில் விவாதிக்கப்பட்டது.
உபகரணத்தை பரீட்சார்த்தமாக பயன்படுத்தும் நோக்கில் மட்டுப்படுத்தப்பட்ட கடற்றொழில் அமைச்சின் பணிப்பாளர் நாயகம் தற்காலிக அனுமதி வழங்கியுள்ளார் என்று நீரியல் வள திணைக்கள அதிகாரிகளால் தெரிவிக்கப்பட்டது. எனினும், இது பயன்படுத்துவதால் கடல் வளம் அழிவடையும், பலருக்கு தொழில் வாய்ப்பு இல்லாமல் போகும் என்ற நோக்கில் 'விஞ்ச்' உபகரணம் பயன்படுத்த முடியாது என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இதனை பயன்படுத்துவோருக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கோ அல்லது நிரந்தமாக இதனைப் பயன்படுத்தலாம் என்பது தொடர்பில் ஆரய்வதற்கோ பணிப்பாளர் நாயக்கத்தால் உரிய பதில் வழங்கப்பட வேண்டும். ஆகவே தீர்மானம் தொடர்பில் பிரதேச செயலர், பணிப்பாளர் நாயகத்துக்கு அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டது. பிரதேச செயலரால் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. ஆனால் முடிவுகள் இன்னமும் அறிவிக்கப்படாமையால் 'விஞ்ச்' உபகரணம் பயன்படுத்துவது தொடர்பில் இழுபறி நிலை காணப்பட்டுவருகின்றது -என்றனர். (எ-7)

## உள்ளூராட்சிசபைகளின் நிதி முகாமைத்துவம் தொடர்பில் ஆராய்வு

யாழ்ப்பாணம், ஜூலை 20
வடக்கு மாகாணத்தில் உள்ள உள்ளூராட்சிச் சபைகளின் சிறப்பான நிதி முகாமைத்துவம் தொடர்பில் ஆராய்ந்து நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக மாகாண நிதிப் பிரிவு தெரிவித்துள்ளது.
இது பற்றி மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:
வடக்கு மாகாணத்தில் 34 உள்ளூராட்சி சபைகள் உள்ளன. இவை தற்போது சபை உறுப்பினர்களுடன் செயற்பட்டு வருகின்றன. இவர்களின் நிதிமுகாமைத்துவம் சரியாக இருந்தால் மாத்திரமே சேவைகளை வழங்க முடியும். இதனை கருத்தில் கொண்டு மாகாணத் திறைசேரி உள்ளூராட்சி மன்றத்தின் ஊடாக சகல சபைகளுக்கும் வினாப்பத்திரம் ஒன்றை அனுப்பியுள்ளது. 2017ஆம் ஆண்டுக்கான கணக்கு நடவடிக்கைகள் நிறைவடைந்த நிலையில் உரிய கணக்குகள் குறித்த காலத்தில் சமர்ப்பிக்கபட்டுள்ளனவா, கணக்காய்வுகள் சரியானதாக உள்ளனவா, நிதி மூலங்கள் முழுமையாக பயன்படுத்தப்பட்டுள்ளனவா உள்ளிட்டு பல்வேறு வினாக்களுக்கு அடையளாம் இட்டு அதனை உள்ளூராட்சி மன்றத்துக்கு சமர்ப்பிக்க வேண்டும். அந்த அறிக்கைகள் மதிப்பீடு செய்யப்பட்டு அதில் உள்ள குறை நிறைகள் ஆராயப்பட்டுப் பிழைகளை எவ்வாறு நிவர்த்தி செய்யலாம் போன்ற விடயங்கள் தெளிவுபடுத்தப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (எ-7)

## பாலியல் லஞ்சம் கோருகின்றனர் நுண்நிதிக் கடன் வசூலிப்பாளர்கள்

வலி.தென்மேற்கு, ஜூலை. 20
வலி.தேன்மேற்குப் பிரதேசத்தில் நுண்கடன்களைவசூலிப்பதற்காகவீடுகளுக்குச்செல்லும் நிறுவனங்களின்பிரதிநிதிகள், பாலியல்லஞ்சம் கோருகின்றார்கள். எனவே நுண்கடன்கள் வழங்கும் நிறுவனங்களை தடை செய்ய வேண்டுமென்று வலி.தென்மேற்கு பிரதேச சபை உறுப்பினர் அருமைநாயகம் திலீபன் பிரேரணை முன்வைத்தார்.
வலி.தென்மேற்குப்பிரதேசசபையின் மாதாந்தக் கூட்டம் நேற்று முன்தினம் புதன் கிழமை சபா மண்டபத்தில் தவிசாளர் அ.ஜெபநேசன் தலைமையில் நடைபெற்றது.
கூட்டத்தில், வலிதென்மேற்குபிரதேசத்தில்இலகுகடன் என்ற போர்வையில் கணவனை இழந்த பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் இலக்குவைத்து நுண்நிதிகடன்வழங்கும்நிறுவனங்களால் கடன்கள் வழங்கப்படுகின்றன. கஸ்டத்தின் மத்தியில் வாழும் குறித்த பாமர மக்கள் சில தேவைகளுக்காக கடன்களைப் பெற்று அவற்றைக் கட்ட முடியாது சொல்லொணாத் துன்பங்களை அனுபவித்து வருகின்றனர்.
இந்த நிலையில் கடன்களை வசூலிக்கவரும் நுண்நிதி நிறுவனப் பணியாளர்கள் கடன்களைச்செலுத்தாவிடில் கடனாளிகளைத் தரக்குறைவான வார்த்தைகளால் பேசுவதுடன் பணத்தைவசூலிக்கும்வரைவீடுகளில்மணிக்கணக்கில் காத்திருந்து பணத்தை அறவிடுகிறார்கள். தவறும் பட்சத்தில் பாலியல் லஞ்சம் கோருவதாக மக்கள் கவலைப்படுகிறார்கள்.
அண்மையில் மானிப்பாய்ப்பகுதியில்கடனைத் திரும்பச்செலுத்த முடியாதகுடும்பஸ்தர் ஒருவர் தற்கொலை முயற்சியில் ஈடுபட்டபோது பொது மக்களால் காப்பாற்றப்பட்டார்.
எனவேநுண்நிதிநிறுவனங்களைஎமதுஆளுகைக்குட்பட்டபிரதேசத்தில்தடைசெய்யவேண்டும் என்று உறுப்பினர் திலீபன் பிரேரணை முன்வைத்தார்.
பிரேரணைகூட்டத்தில்விரிவாகஆராயப்பட்டு, மேற்படிநிறுவனங்கள் எமது பிரதேசத்துக்குள் வருவதை தடைசெய்யலாமா என்பது குறித்து சம்பந்தப்பட்டவர்களுடன் கலந்துரையாடி நடவடிக்கை எடுக்கலாம் என்று தீர்மானம் எடுக்கப்பட்டது. (எ-115)

## வீட்டுக்குவந்து மிரட்டியதாகக்கூறி பெண் உறுப்பினர் வெளிநடப்பு

### வலி.தென். மேற்குப் பிரதேச சபையின் மாதாந்தக் கூட்டத்தில் சம்பவம்

யாழ்ப்பாணம், ஜூலை 20
அபிவிருத்திவேலைத்திட்டம்சம்பந்தமாகதனதுவீட்டுக்கு வந்து தன்னை தமிழ் அரசுக் கட்சி உறுப்பினர் ஒருவர் மிரட்டியதாகக்கூறிசபைக்கூட்டத்திலிருந்துவெளியேறிய மூன்று உறுப்பினர்களைத் தவிசாளரும் ஏனைய உறுப்பினர்களும் சமாதானப்படுத்தி 10 நிமிடங்களுக்குப் பின் சபைக்கு அழைத்து வந்தனர்.
வலி.தென்மேற்குப்பிரதேசசபையின் மாதாந்தக்கூட்டம் நேற்று முன்தினம் புதன்கிழமை காலை 9.30மணியளவில் தவிசாளர் அ.ஜெபநேசன் தலைமையில் சபை மண்டபத்தில் ஆரம்பமானது. இந்த நிலையில் கூட்டத்துக்குச் சமூகமளித்திருந்த தமிழ்தேசிய மக்கள் முன்னணியைச் சேர்ந்த உறுப்பினர் சவுந்தரநாயகம் றாயினி, 'தமிழ் அரசுக்கட்சியைச்சேர்ந்த பிரதேசசபை உறுப்பினரான விஸ்வநாதன் சுப்பிரமணியம் எனது வீட்டுக்கு வந்து என்னை அச்சுறுத்தும் தொனியில் நான் கூறிய கருத்துக்களைக் கண்டித்தார். இது அடிப்படை உரிமைமீறலாகும். எனவே சபையிலிருந்து ஒரு மணிநேரம் வெளிநடப்புச் செய்யப் போகின்றேன்' என்று தெரிவித்தார். இதுபற்றி பின்பு ஆராயலாமென்று தவிசாளர் தெரிவித்திருந்தபோதும் அதற்கு மறுப்புத் தெரிவித்து தனது கட்சியின் ஏனைய இரு உறுப்பினர்களுடன் சபையிலிருந்து வெளியேறினார்.
இந்தநிலையில்சபைக்கூட்டத்தைஒத்திவைத்ததவிசாளர் சபைஉறுப்பினர்களுடன்வெளியேசென்றுசம்பந்தப்பட்ட உறுப்பினரைச்சமாதானப்படுத்திமீண்டும்அவர்களைச் சபைக்கு அழைத்து வந்து பிரச்சினையை சுமூகமாகத் தீர்த்துவைத்தார். இனிமேல் இவ்வாறான பிரச்சினைகள் இடம்பெறமாட்டாது எனத் தவிசாளரால் தெரிவிக்கப்பட்டு பிரச்சினை தீர்க்கப்பட்டது.
உறுப்பினர் ராஜினி இது சம்பந்தமாக தவிசாளர், உறுப்பினர் ஆகியோருக்கு இது தொடர்பில் கண்டனக் கடிதமும் அனுப்பி வைத்துள்ளார்.
இது தொடர்பில் உறுப்பினர் சுப்பிரமணியத்துடன் உதயன் தொடர்புகொண்டான், குற்றச்சாட்டை முழுவதுமாக மறுத்த உறுப்பினர் தான் பிரதேச அபிவிருத்தி தொடர்பில் பேசுவதற்காகவே குறித்த பெண் உறுப்பினர் வீட்டுக்குச் சென்றதாகவும், அதன்போது அவர் தன்னுடன் முரண்பாடு எதுவுமின்றி சுமூகமாகவே பேசினார் என்றும் அதன் பின் வேறு உறுப்பினர்களிடையே ஏற்பட்ட தகராற்றால் தான் தன்மீது இவ்வாறான பழி சுமத்துகின்றார் எனவும் தெரிவித்தார்.
மாதகல் பிரதேசத்தில் வீதி விளக்குகள் பொருத்துதல் விடயத்தாலேயே குறித்த முரண்பாடு ஏற்பட்டுள்ளது. (எ-115)

## புதிதாக விண்ணப்பம் கோருவதற்கு மேல்நீதிமன்று இடைக்காலத்தடை

யாழ்ப்பாணம், ஜூலை 20
விரும்பிய ஒருவரை பதவியுயர்த்துவதற்காக நியமன ஒழுங்கு விதிகளில் மாற்றம் செய்துள்ளதாக, பொதுச்சேவை ஆணைக்குழுவினருக்கும் வடக்கு மாகாண ஆளுநருக்கும் எதிராக யாழ்ப்பாண மேல் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.
வழக்கை விசாரித்த மேல் நீதிமன்ற நீதிபதி அ.பிரேமசங்கர், புதிதாக விண்ணப்பம் கோரப்பட்டுள்ள செயன்முறைக்கு நேற்று இடைக்காலதடை விதித்தார்.
கடந்த 2016ஆம் ஆண்டு வட மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு, நேர்முகத் தேர்வு மூலம் சி.சதானந்தனை மாவட்ட விளையாட்டு துறை அதிகாரி எனும் பதவியில் இருந்து முதுநிலை மாவட்ட விளையாட்டு துறை அதிகாரி என்ற பதவிநிலைக்கு பதவியுயர்த்தியது. இந்த நியமனத்துக்கு எதிராக எஸ்.எம். ராஜா ரணசிங்க என்பவர் வட மாகாண ஆளுநருக்கு மேன்முறையீடு செய்தார்.
மாகாண பொதுச் சேவை தொடர்பிலான அதியுயர் அதிகாரம் ஆளுநரிடமே உள்ளது.
இந்தநிலையில் மாகாண அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானமும் ரணசிங்கவுக்குபரிந்துரைசெய்து ஆளுநருக்கு கடிதம் அனுப்பி வைத்தார்.
அதனைத் தொடர்ந்து முதுநிலை மாவட்டவிளையாட்டுத்துறைஅதிகாரிபதவிஉயர்வுதொடர்பில்வட மாகாண விளையாட்டு துறை சேவை பிரமாணக் குறிப்புக்கள் ரணசிங்கவுக்குசாதகமாகசிறப்பாகத் திருத்தப்பட்டன.
அதனடிப்படையில் கடந்த மாதம் (ஜூன் 2018) எந்த வித காரணங்களும் குறிப்பிடாமல் சதானந்தனின் பதவியுயர்வு வட மாகாண ஆளுநரின் பரிந்துரையின் பெயரில் மாகாணப் பொதுச் சேவை ஆணைக்குழுவால் தடை செய்யப்பட்டது.
அத்தோடு முதுநிலை மாவட்ட விளையாட்டுதுறைஅதிகாரிப் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரும் அறிவித்தலையும் பொதுச் சேவை ஆணைக்குழு விடுத்தது.
இதனையடுத்துகடந்த11ஆம்திகதி சதானந்தன் தனது சட்டத்தரணி கு.குருபரன் மூலமாக யாழ்ப்பாணம்மேல்நீதிமன்றில்மனுத்தாக்கல் செய்தார்.
மனுவில், "சதானந்தன் முறையாக நியமிக்கப்பட்ட பின்னர் வேறொருவரை அந்தப் பதவிக்கு நியமிக்கும் நோக்கில் சேவைப் பிரமாண குறிப்புக்களைத்திருத்தியது எதேச்சதிகாரமானது, தான் தோன்றித்தனமானது.
இது சட்டத்தின் ஆட்சியை கேள்விக்குட்படுத்துவதாக உள்ளது" என்று தெரிவிக்கப்பட்டது.
குறித்த வழக்கு நேற்று எடுத்துக் கொள்ளப்பட்டது. இதன்போது, முதுநிலை மாவட்ட விளையாட்டு அதிகாரியாக வேறொருவரைநியமிக்கும் செயன்முறையைத் தடுத்துநிறுத்தும்இடைக்காலக்கட்டளையை பிறப்பித்து மனுவின் மீதான முழு விளக்கத்துக்காக ஆகஸ்ட் மாதம் 2ஆம் திகதிக்கு வழக்கைஒத்திவைத்துதீர்ப்பளித்தார் நீதிபதி. (எ)

ஓட்டோ விபத்து

# ஆசிரியைகள் இருவர் காயம்

சாவகச்சேரி, ஜூலை 20
கோப்பாய்த் தேசிய கல்வியியல் கல்லூரிக்குச் சென்று திரும்பிய மாணவ ஆசிரியர்களை ஏற்றி வந்த ஓட்டோ முன்னால் சென்று கொண்டிருந்த இரு சக்கர உழவியந்திரத்தின் பெட்டியுடன் மோதியதில் ஓட்டோவில் பயணித்த இரு மாணவ ஆசிரியைகள் காயமடைந்தனர். இந்தச்சம்பவம் நேற்றுமுன்தினம் மாலையாழ்ப்பாணம் கைதடி கோப்பாய் சாலையில இடம் பெற்றது. தேசிய கல்வியியல் கல்லூரியில் மூன்றாம் ஆண்டுமாணவஆசிரியைகளான இருவரும்சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் உள்ளகப் பயிற்சிக்காக இணைந்து கற்பித்தல் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த நிலையில் கல்லூரிப் பாடவேளை முடிந்த பின்னர் தேசியகல்வியியல்கல்லூரிக்குச் சென்று விட்டு திரும்பிக் கொண்டிருந்த வேளையில் விபத்து இடம்பெற்றதெனத் தெரிவிக்கப்பட்டது.

கிளிநொச்சி விவேகானந்த நகரைச்சேர்ந்தஇருமாணவ ஆசிரியைகளும்சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (எ-9)

# தமிழர் ஆசிரியர் சங்கம் இருக்கிறதா? இல்லையா?

## கிளம்பியிருக்கும் புதிய சர்ச்சை

**யாழ்ப்பாணம், ஜூலை 20**

**இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம் செயலிழந்த ஒரு சங்கமாகும். கடந்த 2006,2007க்கு பின்னர் அதன் செயற்பாடுகள் தொடர்பில் எந்தவித ஆவணங்களும் தொழிற்சங்கத்துக்கு அனுப்பி வைக்கப்படாததால் அதனை செயலிழந்த சங்கமாக அறிவித்துள்ளோம் என்று இலங்கை தொழிற்சங்க ஆணையாளர் கோ.பி.மனோஜ் பிரியந்த தெரிவித்துள்ளார்.**

கிழக்கு மாகாணம் பட்டிருப்பு -களவாஞ்சிக்குடியைச்சேர்ந்த ஒருவரால்இலங்கைத்தமிழர் ஆசிரியர் சங்கத்தின் தொழிற்சங்க உறுப்பினர் தொடர்பான விவரத்தினை வழங்குமாறு, தகவல் அறியும் சட்டத்தின் மூலம்கேட்கப்பட்டகேள்விக்கு, 7 ஆம் மாடி, கொழும்பு 5 என்னும்முகவரியில்அமைந்துள்ள தொழில் திணைக்களத் தால் பதில் வழங்கப்பட்டுள்ளது. அந்தப் பதிலிலேயே ஆணையாளர்இவ்வாறுதெரிவித்துள்ளார்.

குறித்த பதிலில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

மேற்படிசங்கத்தால்இறுதியாக வருடாந்தஅறிக்கைகள்கடந்த 2006 மற்றும் 2007 காலப்பகுதிக்கானவையே சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. இது குறித்து சங்கத்துக்குஅறிவித்தபோதும் அதற்குப் பின்னர் எந்தவித ஆவணங்களும்சமர்பிக்கப்படவில்லை எனவே சங்கமானது செயற்பாடற்ற சங்கமாகவே கருதப்படுகிறது.

இதனால் தொழிற்திணைக்கள சட்டமூலத்துக்கு அமைய வருடாந்த அறிக்கைகள்சமர்ப்பிக்கப்படாததால், இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் தொழிற்சங்கப்பதிவு நிறுத்தப்பட்டுள்ளதாக 2018.05.25 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் செயலாளருக்கு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது - என்றுள்ளது.

தற்போது இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் தொடர்பில் பலதரப்பினர்களாலும்பலகுற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றது. தொடர்ச்சியாக சங்கத்தின் நிர்வாகத்தில் ஒருவர்நீண்டகாலமாகஅதிகாரம் செலுத்தி வருகின்றார் எனவும், ஜனநாயக முறைப்படி புதிய நிர்வாகத் தெரிவுகள் எவையும் மேற்கொள்ளப்படவில்லைஎன்றும்குற்றம்சுமத்தப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பாக இலங்கை ஆசிரியர் சங்கச் செயலாளர் சராபுவனேஸ்வரனிடம்தொடர்புகொண்டுகேட்டபோது,

"தமிழர் ஆசிரியர் சங்கம் உத்தியோகப்பூர்வமாகச்செயற்படவில்லைஎனதொழிற்றிணைக்களத்தால் உத்தியோக பூர்வமாக அறிவிக்கப்படவில்லை. எமது சங்கத்தை தடை செய்தது என அறிவித்தால் எங்களிடம் உள்ள சான்றிதழ்களைப் மீளப் பெற வேண்டும். அவ்வாறுசான்றிதழ்கள்எவையும் மீளப்பெறப்பட வில்லை.

கடந்தமேமாதம்25ஆம்திகதி தொழிற்சங்கத்தால் எம்மிடம் விவரக்கூற்றுகேட்டு கடிதம் அனுப்பப்பட்டிருந்தது. அதில் விவரங்களைஅனுப்பாவிடில் சங்கம்தள்ளுபடிசெய்யப்படும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. ஆனால்நாங்கள் அதற்கு பதில் அனுப்பிவிட்டோம்

எங்களுடைய சங்கம் ஜனநாயக முறைப்படிதான் நடைபெறுகின்றது. நிர்வாகத் தெரிவு கூடகடந்தயூன்மாதம்22ஆம் திகதி திருகோணமலை உவர்மலை விவேகானந்தாக கல்லூரியில்நடைபெற்றது"-என்று தெரிவித்தார். (எ-113,214)

# இந்திரகுமாரின் மறியல் நீடிப்பு

யாழ்ப்பாணம் ஜூலை 20
புங்குடுதீவுமாணவி கொலைவழக்கில் முதலாவது சந்தேகநபராக இருந்து ரயலட்பார் நீதிமன்றால் நிரபராதி என விடுவிக்கப்பட்ட பூபாலசிங்கம் இந்திரகுமாரின் விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம், ஊர்காவற்துறை நீதிவான் மன்றில் நீதிவான் அ.ஜூட்சன் முன்னிலையில் நேற்றுமுன்தினம் குறித்த வழக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

அதன் போதே சந்தேகநபரை எதிர்வரும் முதலாம் திகதி வரையில் விளக்கமறியலில் தடுத்து வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

குறித்தநபர், மாணவிபடுகொலைவழக்கில் சந்தேக நபராக தடுத்து வைக்கப்பட்டிருந்த காலப் பகுதியில், பொலிஸ் பணியாளர் ஒருவரின் பெயரைக் குறிப்பிட்டு கொலை மிரட்டல் விடுத்தார் எனப் பொலிஸாரால் தாக்கல் வழக்கிலேயேகுறித்தநபர்விளக்கமறியலில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

சாட்சியங்களை அச்சுறுத்தியமை தொடர்பிலான வழக்கில் சந்தேக நபரைப் பிணையில் விடுவிப்பதற்கான நியாயாதிக்கம் நீதிவான் மன்றுக்கு இல்லாமையால், அது தொடர்பில் பிணை கோரி மேன்முறையீட்டு நீதி மன்றிலே விண்ணப்பம் செய்ய வேண்டும்.

அதற்கான நடவடிக்கைகள் இல்லாத காரணத்தால் குறித்த நபர் தொடர்ந்து விளக்கமறியலில் தடுத்து வைக்கபட்டு உள்ளார்.

அது தொடர்பில் முன்னர் ஊர்காவற்றுறை நீதிமன்ற நீதிவானாக இருந்த ஏ.எம்.எம். றியாழ் குறித்த நபர் தொடர்பில் உரிய நடவடிக்கைஎடுக்கக்கோரிசட்டமாஅதிபர்திணைகளத்துக்கு கடிதம் அனுப்பி இருந்ததுடன் பின்னர் நினைவூட்டல் கடிதமும் அனுப்பி இருந்தார்என்பதுகுறிப்பிடத்தக்கது. (எ-37)

தங்கப்பதக்கத்துக்கான

# மாட்டுவண்டி சவாரிப் போட்டி

யாழ்ப்பாணம், ஜூலை 20
இளவாலைவருத்தப்படாத வாலிபர் சங்கத்தின்5ஆம் ஆண்டுநிறைவுவிழாவை முன்னிட்டு சங்கத்தினர் முன்னெடுக்கும் தங்கப் பதக்கத்துக்கான தமிழர் வீரவிளையாட்டானமாபெரும் மாட்டுவண்டிச் சவாரிப் போட்டி இம்முறையும் கோலாகலமாக இடம்பெறவுள்ளது. சவாரிப்போட்டி வடக்கு மாகாண ரீதியில் நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.30மணிக்கு யாழ்ப்பாணம்நீர்வேலிசவாரிவிடந்தையில் இடம்பெறவுள்ளது. இதில்ஏ.பி.சி.டீஆகிய நான்கு பிரிவுகளில் முதலிடங்களைப்பெறும்காளைகளின் உரிமையாளருக்குத் தங்கப் பதக்கமும், 2ஆம், 3ஆம் 4ஆம் இடங்களைப் பெறும் வெற்றியாளர்களுக்கு பெறுமதி மிகுந்த பரிசில்களும் வழங்கப்படவுள்ளன. சவாரிப்பிரியர்கள், பார்வையாளர்கள் அனைவரையும் அழைத்துள்ளது சங்க நிர்வாகம். (எ-21)





# ஊற்று அதிகரித்தபோதும் கள்விற்பனையில்வீழ்ச்சி

யாழ்ப்பாணம், ஜூலை 20
யாழ்ப்பாணத்தில், தற்போது கள் உற்பத்தி அதிகரித்துள்ள போதிலும்அதன்விற்பனையில்ஏற்பட்டபெரும்வீழ்ச்சியால் அங்கத்தவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டிருப்பதாக யாழ்ப்பாண மாவட்டபனை, தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் வலிகாமம் கொத்தணியின் தலைவர் எஸ். செல்வராசா தெரிவித்தார்.

தற்போதைய பருவப் பெயர்ச்சிக் காலநிலையில் கள்ளின் ஊற்று அதிகரித்துள்ளது. இதனால் போதியளவு கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. எனினும் விற்பனை குறைவடைந்துள்ளது. இதன்காரணத்தால்விற்பனை இன்றிக்கள் தேங்கும்நிலைகாணப்படுகின்றது. இருந்தபோதும்தேங்கும் கள், வடிசாராயம் மற்றும்போத்தலில்கள் அடைக்கும் பயன்பாட்டுக்கு பயன்படுத்தப்பட்டு வருகின்றது என்று அவர் மேலும் தெரிவித்தார். (எ-17)

# அஸ்மினுக்கு எதிராக வழக்குத் தொடருவேன்

## அனந்தி தெரிவிப்பு



யாழ்ப்பாணம் ஜூலை 20
என்னிடம் துப்பாக்கி உள்ளது என்று பொய்யான கருத்தை வெளியிட்டுள்ள மாகாணசபைஉறுப்பினர்அஸ்மினுக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்குத் தொடரவுள்ளேன் என்று வடக்கு மாகாண மகளிர்விவகாரஅமைச்சர்அனந்திசசிதரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அவருடைய அமைச்சின் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் ஊடகவியலாளர்களைச்சந்தித்தபோதேமேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடக்கு மாகாணத்தில் உள்ள பெண்கள் மற்றும் சிறுவர்களின் பாதுகாப்பு இப்போது கேள்விக்குறியாகி உள்ளது.

வடக்கில் உள்ள ஒவ்வொரு பெண்ணும் தனது பாதுகாப்புக்காக துப்பாக்கியை வழங்குமாறும், அதனைப்பயன்படுத்துவதற்கு அனுமதி தருமாறு கோரும் அளவில்தான் பெண்களின் பாதுகாப்புநிலை உள்ளது.

குறிப்பாக வடக்கு மாகாண சபை உறுப்பினர் அஸ்மின் போன்றவர்கள் இங்கிருக்கின்றநிலையில்துப்பாக்கிபெண்களிடம் இருக்க வேண்டும் என்ற நிலையும் தற்போது தோன்றியுள்ளது.

நான்ஆயுதத்தைஅறியாதவள்இல்லை. துப்பாக்கி என்னிடம் உள்ளது என்றால் அதை நிரூபிக்க வேண்டும். என்னிடம் எந்த ஆயுதமும் இல்லை. என்னுடைய கைகளும், வார்த்தைகளும்தான்என்னுடைய ஆயுதமாக உள்ளன. அனுமதி பெற்று ஆயுதம் இருக்குமாக இருந்தால் வெளிப்படையாகச் சொல்வதில் பயமில்லை. நான் உட்பட முதலமைச்சர், சிவாஜி லிங்கம், சித்தார்த்தன், கஜதீபன் போன்றவர்கள் பெற்றுக்கொண்ட வாக்குகளின் அடிப்படையில்தான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு 2 போனஸ் ஆசனங்கள் கிடைத்தன.

அந்த போனஸ் ஆசனத்தில் மாகாண சபை உறுப்பினராக வந்த அஸ்மின், நாடாளுமன்றஉறுப்பினர்களின்விசுவாசத்துக்காகஎங்கள்மீதுஆதாரம்இல்லாத அவதூறுகளையும், வதந்திகளையும் கட்டவிழ்த்துக்கொண்டிருக்கின்றார். இது கண்டிக்கத்தக்க விடயம். என்னிடத்தில் துப்பாக்கி உள்ளது என்று சொல்லியுள்ள அஸ்மின் என்னிடத்தில் இருந்து துப்பாக்கியை எடுத்துக் காண்பிக்க வேண்டும்.

அது தவிர பாதுகாப்பு அமைச்சின் அனுமதிகடிதம்வந்திருந்தால், நான்துப்பாக்கி பெற்றுக் கொண்டதற்கான ஆவணமும் இருக்க வேண்டும். அவ்வாறான ஆவணங்கள் இருந்தால் அவர் அதனை வெளிப்படுத்தலாம்.

என்னுடையசிறப்புரிமையைஅஸ்மின் மீறியது மட்டுமல்லாமல், என்னை ஆயுததாரியாக சித்திரித்திருப்பது தொடர்பில் அவருக்குஎதிரானவழக்குஒன்றினைப் பதிவு செய்ய உள்ளேன். என்னுடைய சட்டத்தரணிகளுடன் கலந்துரையாடி சட்டஆலோசனைபெற்றபின்னர்அஸ்மினுக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்குத் தொடருவேன் - என்றார். (எ-37)

# மடியில் கனம் இல்லையென்றால் வழியில் பயம் தேவையில்லை

சிறப்பு நீதிமன்ற விவகாரத்தில் மனுஷ நாணயக்கார தெரிவிப்பு



**கொழும்பு, ஜூலை 20**
**நிதி மோசடிகளுடன் தொடர்புடாதவர்கள் நிதி மோசடி குறித்து விசாரணை மேற்கொள்ள அமைக்கப்பட்டிருக்கும் சிறப்பு நீதிமன்றம் தொடர்பில் அச்சப்படத் தேவையில்லை. நாட்டின் சட்டத்தின் பிரகாரமே வழக்கு விசாரணைகள் இடம்பெறும்.**

இவ்வாறு வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பிரதி அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

நிதிமோசடி தொடர்பான வழக்கு விசாரணைகளை மேற்கொள்ள அமைக்கப்பட்டுவரும் சிறப்பு நீதிமன்றம் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயேஅவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

நிதி மோசடி தொடர்பான வழக்கு விசாரணைகளை மேற்கொள்வதற்காக மூன்றுசிறப்புநீதிமன்றங்கள் அமைப்பதற்கு நாடாளுமன்றத்தின் அங்கீகாரம் கிடைக்கப்பெற்றது. நாடாளுமன்றத்தின் அனுமதியுடனே இதனை அமைக்கின்றோமே தவிர அரசியல் தேவைக்காகஅல்ல. நாட்டின்ஏனைய நீதிமன்றக் கட்டமைப்புகளுக்குத் தொடர்புபட்டதாகவே இந்த நீதிமன்றமும் செயற்படும்.

இந்தநீதிமன்றங்களில்விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும் வழங்குகள் தொடர்பில் எந்த அரசியல்வாதியும் தீர்மானிக்க முடியது. மாறாகத் தலைமை நீதியரசரும் நீதி சேவை ஆணைக்குழுவுமேஇந்தநீதிமன்றில் விசாரணைக்குஎடுக்கப்படும்வழக்குகள் தொடர்பில் தீர்மானிக்கும். அரசியல் தேவைகளின் அடிப்படையில், இந்த நீதிமன்றங்களில் வழக்கு விசாரணைகள் இடம்பெறும்எனத்தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டுக்கள், வெறும் அரசியல் இலாபம் கருதித் தெரிவிக்கப்படும் விடயங்களாகும்.

சிறப்புமேல்நீதிமன்றில்வழக்கு விசாரணைமேற்கொள்வதா? இல்லையா? என்பதைத் தீர்மானிப்பது தலைமை நீதியரசர்உட்படநீதிமன்றக்கட்டமைப்பாகும். தற்போது அமைக்கப்பட்டிருக்கும் சிறப்பு நீதிமன்றங்களிலும் அவ்வாறானதொருநடவடிக்கையே இடம்பெறுகின்றது.

நிதி மோசடியுடன் தொடர்புபடாதவர்கள் இவ்வாறான நீதிமன்றங்கள் அமைக்கப்படுவது தொடர்பாக அச்சப்படத் தேவையில்லை. அவ்வாறு குற்றச்சாட்டு இருப்பவர்கள் இந்த நீதிமன்றத்துக்குமுன்னால்வந்துஅவர்களின் குற்றமற்ற தன்மையை முழு நாட்டுக்கும் தெரிவிக்கலாம்.

இந்த நீதிமன்றங்களிலும் நாட்டில் இருக்கின்ற சட்டத்தின் பிரகாரமே வழக்குவிசாரணைகள்இடம்பெறும். புதிய சட்டங்களைக் கொண்டுவந்து தெரிவுசெய்யப்பட்டநபர்களுக்குத்தண்டனை பெற்றுக்கொடுக்க முடியாது. காட்டுச்சட்டத்தின் பிரகாரம் இங்கு வழக்கு விசாரணைகள் இடம்பெறுவதில்லை. விசாரணைநடவடிக்கைகள் முடிவடைந்தவழக்குகள்தொடர்விசாரணைக்குட்படுத்தித் தண்டனையைப் பெற்றுக்கொடுப்பதே இங்கு இடம்பெறப்போகின்றது. அத்துடன் நீதிமன்றத்தீர்ப்பில்யாருக்காவதுதிருப்பதிஇல்லையென்றால்அதுதொடர்பில் மேன்முறையீடு செய்யலாம். இந்த நடைமுறை நாட்டின் நீதித்துறையில் இருக்கின்றது. அதனால் நீதிமன்றம் தொடர்பாகப் பொதுமக்களிடம் இருக்கும் நம்பிக்கையை அரசியல் நோக்கங்களைமுன்வைத்துஅதனைஇல்லாமலாக்கக்கூடாது-என்றார். (ரி2,61)

---

மத்தளவை

## இந்தியாவுக்கு வழங்கினால் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல்.

பொது எதிரணி தெரிவிப்பு



கொழும்பு, ஜூலை 20
மத்தளவானூர்தித்தளத்தை இந்தியாவுக்கு வழங்குவதற்கு அரசு தீர்மானித்துள்ளது. இதனால்நாட்டின் தேசியப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல்கள் ஏற்படும். இவ்வாறுநாடாளுமன்றஉறுப்பினர் தினேஸ் குணவர்தன தெரிவித்துள்ளார்.

மத்தளவானூர்தித்தளத்தை இந்தியாவுக்குவழங்குவது தொடர்பில் சிவில் மற்றும் வானூர்திச் சேவைகள் அமைச்சர்நிமல்சிறிபாலடி சில்வாவைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர். சிவில் வானூர்திச் சேவைகள் அமைச்சில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்தச் சந்திப்பில் தினேஷ் குணவர்த்தன தலைமையிலான மகிந்த அணியின் உறுப்பினர்கள் கலந்துக் கொண்டனர்.

இந்தச்சந்திப்புத்தொடர்பில் தினேஸ்குணவர்தனகூறுகையில்,

இந்தியாவுக்கு மத்தள வானூர்தித் தளத்தை வழங்குவதால் நாட்டுக்கு ஏற்படக்கூடியஅச்சுறுத்தல்கள் குறித்து துறைசார் அமைச்சரிடம் தெரிவித்தோம். ஆனால் அரசின் தீர்மானத்தைமீறிச்செயல்பட முடியாது என்று அவர் தெரிவித்தார். ஆகவேகூட்டு எதிர்க்ட்சிஅடுத்தகட்டநடவடிக்கைகுறித்துகவனத்தில் கொள்ளும்-என்றார்.

நாடாளுமன்றஉறுப்பினர் விமல்வீரவன்சசந்திப்பின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத்தெரிவிக்கையில்,

மத்தள வானூர்தித் தளத்தை விற்பனை செய்யும் செயல்பாட்டை சாதாரண விடயமாகக் கருத முடியாது.

உலகஅரசியல்விவகாரங்களுக்குள் இலங்கை வலிந்து போய் சிக்கிக் கொள்ளக் கூடாது. அவ்வாறு சிக்கிக்கொண்டால் நாட்டின் இருப்பு, தேசியப் பாதுகாப்பு என்பன கேள்விக்குறியாகி விடும். எதிர்மறையானகொள்கைகளை உடையநாடுகள்தமதுஅதிகாரத்தை வெளிப்படுத்த தேசியச் சொத்துக்களைத் தாரைவார்த்துக் கொடுக்க முடியாது. அதற்கு மகிந்த அணி இடமளிக்காது. வணிக ரீதியான விடயம் என்றாலும் தேசியப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் என்றால் அதனை அனுமதிக்க முடியாது. ஆகவே மத் தள வானூர்தித் தளத்தை விற்பனை செய்த விவகாரம் இறையாண்மைக்கு அச்சுறுத்தலான விடயமா கும். எனவே அதற்கு எதிராகக் மகிந்த அணி பெரும் எதிர்ப்பு நடவடிக்கைகளை எடுக்கும்-என்றார். (ரி2,61)

---

## தகவல் தொழில்நுட்ப பரீட்சை பெறுபேறுகள் வெளியிடப்பட்டுள்ளன

கொழும்பு, ஜூலை 20
கடந்த 2017 ஆம் ஆண்டுக்கான உயர்தர தகவல் தொழில்நுட்பப்பரீட்சைக்கானபெறுபேறுகள்வெளியிடப்பட்டுள்ளதாகப் பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

பெறுபேறுகளைப்பரீட்சைகள் திணைக்களத்தின் உத்தியோகபூர்வஇணையத்தளமான www.doenets.lk ஊடாகத்தெரிந்துகொள்ளலாம்எனப்பரீட்சைகள் ஆணையாளர்நாயகம்பீ. சனத் பூஜித தெரிவித்துள்ளார். பெறுபேறுகளை அனைத்துப் பாடசாலைகளுக்கும் தபால் மூலம் அனுப்பும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அவர்தெரிவித்துள்ளார். (ரி2,61)

---

## தொல்பொருள் திணைக்கள செயற்பாடுகளில் சந்தேகம்




கொழும்பு, ஜூலை 20
தொல்பொருள் திணைக்களத்தினால்மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகள், எந்த ஆய்வுகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்றன? இவ்வாறு அமைச்சர் விஜேதாச ராஜபக்சவிடம் கேள்வி எழுப்பியுள்ளார். நாடாளுமன்றஉறுப்பினர் டக்ளஸ்தேவானந்தா.

நாடாளுமன்றில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கேள்வி நேரத்தின்போதே உயர் கல்வி மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் விஜேதாச ராஜபக்சவிடம் நாடாளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தா இவ்வாறு கேள்விஎழுப்பியுள்ளார்.

அவர் தெரிவித்ததாவது:

வடக்குமாகாணத்தின்பல்வேறு இடங்கள் தொல்லியல் கட்டளைச் சட்டத்தின் 16ஆவது பிரிவின் கீழ், தொல்பொருள் திணைக்களத்தி னால் புராதனச் சின்னங்களாக அடையாளப்படுத்தப்பட்டு வருகின்றது. முல்லைத்தீவு மாவட்டத்தில் மிக அதிகளவிலான இடங்கள் புராதனச் சின்னங்களாக அடையாளப் படுத்தப்பட்டுள்ளது. இவற்றுள் உள்ளடக்கப்பட்ட இந்த சந்தை அங்குள்ள வர்த்தகர்களால் உரிய முறையில் பலகாலமாகப் பராமரிக்கப்பட்டு வருகின்றது. அதனைப் புராதனச் சின்னங்களுக் குள் உள்வாங்கப் பட்டிருப்பதால் வர்த்தகர்கள் பெரும் பாதிப்பைஎதிர்நோக்கிவருவதாகவும்தெரிவிக்கப்படுகின்றது. யாழ்ப்பாணம், நல்லூரில்உள்ளவரலாற்றுப்புகழ்மிக்கயமுனாஏரி மற்றும்சங்கிலியன்தோப்பு என்பனஎவ்விதமானபராமரிப்புகளும், பாதுகாப்பு ஏற்பாடுகளும் இன்றிக் காணப்படுகின்றன.

யமுனா ஏரியைச் சுற்றிப் பாதுகாப்பு வேலி அமைக்குமாறு அந்தப் பகுதி மக்களால் பல தடவைகள் சுட்டிக்காட்டியுள்ளநிலையில், தொல்பொருள் திணைக்களம்அதுதொடர்பில் உரிய அவதானங்களைச்செலுத்தியதாக இல்லை.

சங்கிலியன் தோப்புக்குரியகாணியும்பறிபோகும் அபாயம்ஏற்பட்டுவருகின்றது.

நல்லூர் யமுனா ஏரியைச் சுற்றிப் பாதுகாப்பு வேலி அமைத்து அதனையும் பாதுகாத்து, பராமரிப்பதற்குஉடனடிநடவடிக்கைகளை மேற்கொள்ள முடியுமா? என்று அமைச்சர் விஜேதாசராஜபக்சதெளிவுபடுத்த வேண்டும். சந்தையின்நிலமைதொடர்பிலும் உண்மை நிலை என்ன? என்பது தொடர்பாகவும் தெளிவுபடுத்தவேண்டும்-என்றார். (ரி2)

---

## இலங்கை-ஜோர்ஜியா நாட்டுத் தலைவர்களிடையே சந்திப்பு



கொழும்பு, ஜூலை 20
இலங்கைக்கும் ஜோர்ஜியாவுக்கும் இடையிலான நட்புறவை மேம்படுத்துவது தொடர்பில் இரு நாட்டு அரச தலைவர்களும் கவனம் செலுத்தியுள்ளனர்.

திறந்த அரச பங்குடமை தலைவர்களின் சந்திப்பில் பங்குகொள்வதற்காகஜோர்ஜியாவுக்கு மூன்று நாள் உத்தியோகபூர்வப்பயணம் மேற்கொண்டுள்ள அரச தலைவர்மைத்திரிபாலசிறிசேனவுக்கும் ஜோர்ஜிய அரச தலைவர் Giorgi Margvelashviliக்கும் இடையிலானசந்திப்புநேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

இருநாடுகளுக்கும்இடையிலானபொருளாதாரத்தொடர்புகளைப் புதிய வழிமுறைகள்ஊடாகவலுப்படுத்துவது தொடர்பில் தலைவர்கள் கவனம் செலுத்தினர். இது தொடர்பிலான கலந்துரையாடல்களை முன்னெடுப்பதற்கானபணிப்புரைகளை அதிகாரிகளுக்கு வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று மைத்திரிபால சிறிசேன இதன்போது தெரிவித்தார்.

நாடுகளுக்கிடையிலான விவசாய மற்றும் சுற்று லாத் துறை தொடர்பில் உறவுகளை மேம்படுத்துவது குறித்தும் இதன்போது கவனம்செலுத்தப்பட்டது.

இலங்கையைச் சேர்ந்த மாணவர்கள் பலர் ஜோர்ஜியாவில்கல்விகற்றுவருவதுடன், அவர்களின் வசதிகளை மேம்படுத்துவது தொடர்பிலும்கலந்துரையாடப்பட்டது. இலங்கையுடனான உறவுகளை அனைத்துத் துறைகளிலும் மேம்படுத்துவதற்கு ஜோர்ஜியா விரும்புவதாக ஜோர்ஜிய அரச தலைவர் தெரிவித்தார்.

இவ்வாறு அரச தலைவர் ஊடகப்பிரிவுஅனுப்பிவைத்துள்ள ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ரி2)



## எரித்தியா - எத்தியோப்பியா இடையே பறந்தது வானூர்தி

அஸ்மாரா, ஜூலை 20
எத்தியோப்பியா-எரித்தியா இடையே 20 ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் வானூர்திப் போக்குவரத்து ஆரம்பிக்கப்பட்டுள்ளது.
எத்தியோப்பியா, எரித்தியா இடையில் 1998-2000 காலகட்டத்தில் நடைபெற்ற எல்லைப்பிரச்சினையை அடுத்து, இவ்விரு நாடுகளுக்கும் இடையேயான சாலை மற்றும் வானூர்திப் போக்குவரத்து நிறுத்தப்பட்டது. இந்த நிலையில் சுமார் இரண்டு தசாப்தங்களின் பின்னர் மீண்டும் வானூர்திப் போக்குவரத்துக்கள் ஆரம்பமாகியுள்ளன. சாலைப் போக்கு வரத்துக்களும் மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளதாகத் தகவல்கள் வந்துள்ளன. எனினும் இரு நாடுகளின் எல்லைகளிலும் உச்சக்கட்ட விதத்தில் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டுள்ளது. எல்லைப் பிரச்சினையால் பிரிந்திருந்த குடும்பங்கள் தற்போது மீண்டும் ஒன்று சேர்ந்துள்ளன. இது தொடர்பான ஒளிப்படங்களை பன்னாட்டு ஊடகமான ரொயிட்டர்ஸ் வெளியிட்டது. (ம)

# பெரிய முடிவு வருவதுநிச்ச

## புடினுடனான சந்திப்புத் தொடர் ட்ரம்ப் இவ்வாறு கருத்துப் பகி

வொஷிங்டன், ஜூலை 20
"இந்த உலகம் மிக விரைவில் பெரிய முடிவுகளைப் பார்க்கவுள்ளது" என்று தெரிவித்தார் அமெரிக்க அதிபர் ட்ரம்ப். புடினுடனான சந்திப்புத் தொடர்பில் எதிர்கொண்ட விமர்சனங்களை அடுத்து அத்தகைய விமர்சனங்க ளுக்குப் பதிலடி கொடுக்கும் வகையிலேயே இவ்வாறு தெரிவித்தார் ட்ரம்ப்-அமெரிக்க அதிபர் ட்ரம்ப் ரஷ்ய அதிபர் புடின் இணைந்து பின்லாந்துத் தலைநகர் ஹேல்சின்கியில் கடந்த திங்கட்கிழமை பேச்சு நடத்தினர்.
இந்தப் பேச்சின்போது ட்ரம்ப் மேற்கொண்ட நகர்வுகளுக்கு அவர் கடும் விமர்சனங்களை வாங்கிக் குவித்துள்ளார். குறிப்பாக அமெரிக்கத் தேர்தலின்போது ரஷ்யா தலையிட்டது என்று அமெரிக்க உளவுத்துறை அறிவித்தமை தவறு என்றும் ரஷ்யா அவ்வாறு தலையிட வாய்ப்பில்லை என்றும் தெரிவித்திருந்தார்.
இதற்குக் கடும் விமர்சனங்கள் எழுந்துள்ள நிலையில் புடினுடனான சந்திப்புத் தொடர்பில் இந்த உலகம் நிச்சயம் பெரிய முடிவுகளைப் பார்க்கும் என்று குறிப்பிட்டார் ட்ரம்ப்.
"பின்லாந்துத் தலைநகர் ஹெல்சின்கியில் புடினுடன் நடந்த சந்திப்பு உளவுத்துறையில் உயர் பதவிகளில் உள்ள பலருக்குப் பிடித்திருந்தது. பத்திரிகையாளர் சந்திப்புக்கு முன்பு புடினும் நானும் பல முக்கிய ஆலோசனைகளை நடத்தினோம். எங்களது சந்திப்பைக் குத்துச்சண்டைப் போட்டியாக காண விரும்பிய வெறு துள்ளது. பெரிய மு தனது கீச்சகத்தில்



## மணிலாவில் தொடர் மழை வெள்ளக் காடான வீதிகள்

மணிலா, ஜூலை 20
பிலிப்பைன்ஸின் மணிலா நகரில் தொடர்ந்து மழை பெய்து வருகிறது. இதையடுத்து நகரின் பல பகுதிகள் வெள்ளக் காடாக மாறியுள்ளன. மணிலாவில் கடந்த 15 நாள்களாக கடும் மழை பெய்து வருகிறது. இதனால் நகரில் பல பகுதிகளும் வெள்ளம் சூழ்ந்துள்ளன. ஆங்காங்கே மின்கம்பங்கள் குடை சாய்ந்ததால் மின்சார விநியோகமும் துண்டிக்கப்பட்டுள்ளது. மரங்கள், வீடுகள் குடைசாய்ந்துள்ளன. வெள்ளம் வழிந்தோடாமல் இருப்பதால் மீட்புப் பணிகள் மந்த கதியில் இடம்பெற்று வருகின்றன. சிறிய ரகப் படகுகளில் இராணுவத்தினர் மீட்புப் பணியில் ஈடுபட்டு வருகின்றனர். அது தொடர்பான ஒளிப்படங்களை பன்னாட்டு ஊடகமான ரொயிட்டர்ஸ் வெளியிட்டது. (ம)





## சுவீடன பன்னா

ஸ்ரோக்கோம், ஜூலை
ஐரோப்பிய நாடுகளி
சுவீடனின் கடும் காட
டுள்ளது.
சுவீடனின் வடக்குப்
தக் காட்டுத் தீ உருவ
தற்போது தீ ஆர்டிக்
நோக்கி விரைவாகப்
றது. இதையடுத்து
உதவி கோரப்பட்டு
ணைப்புப் பணியில்




## அணுவாயுதத்தை அழிபதற்கு வடகொரியாவுக்கு காலக்கெடு இல்லையாம்

வொஷிங்டன், ஜூலை 20
"வடகொரியா அணு ஆயுதங்களை அழிப்பதற்கு கால வரையறை எதுவும் நிர்ணயிக்கப்படவில்லை" என்று அமெரிக்க அதிபர் ட்ரம்ப் தெரிவித்தார்.
வடகொரியா அதிபர் கிம் ஜோங் உன் ட்ரம்ப் இருவரும் கடந்த மாதம் 12ஆம் திகதி சிங்கப்பூரில் சந்தித்துப் பேசினர். அப்போது, அணு ஆயுதங்களை அழிக்க வடகொரியாவும் அந்த நாட்டுக்குப் பாதுகாப்பு அளிக்க அமெரிக்காவும் ஒப்புக்கொண்டன.
இது தொடர்பாக ஓர் ஒப்பந்தம் கையெழுத்தானது.
இந்தச் சந்திப்புக்குப் பிறகு, "அணு ஆயுதங்களை அழிக்கும் நடவடிக்கை உடனடியாகத் தொடங்கும்" என்று ட்ரம்ப் தெரிவித்திருந்தார்.
இரண்டு நாடுகளுக்கும் இடையிலான அணுவாயுத அழிப்புத் தொடர்பான நடவடிக்கைகள் ஆரம்பித்துள்ளன என்று தெரிவிக்கப்பட்ட நிலையில், "அமெரிக்கா கூலிப்படைத் தலைவனைப் போல செயற்படுகிறது" என்று வடகொரியா அண்மையில் குற்றம் சாட்டியிருந்தது. மேலும் "உயர் நிலை பேச்சின்போது அமெரிக்காவின் நிபந்தனைகள் பிரச்சினைக்குரியதாக உள்ளன" என்றும் அது குறிப்பிட்டிருந்தது.
இத்தகையதொரு பின்னணியில் "வடகொரியா உடனடியாக தனது அணுவாயுதங்களை அழிக்க வேண்டும்" என்கிற நிபந்தனையில் இருந்து பின்வாங்கினார் ட்ரம்ப். வொஷிங்டனில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் "வடகொரியாவுடனான பேச்சு சுமுகமாக நடைபெற்று வருகிறது. அணு ஆயுதங்கள்ளை அழிக்க கால வரையறை எதுவும் நிர்ணயிக்கப்படவில்லை. வேக உச்ச வரம்பு இல்லை. இந்த விவகாரத்தில் அவசரப்படத் தேவையில்லை.
வடகொரியா மீதான பொருளாதார தடைகள் தொடர்கின்றன. அங்கு புதிதாக ஆயுத சோதனை எதுவும் நடைபெறவில்லை. இரு நாடுகளுக்கிடையிலான உறவு நன்றாக இருப்பதாக நினைக்கிறேன். அடுத்து என்ன நடக்கிறது என்று பொறுத்திருந்து பார்ப்போம்" என்று ட்ரம்ப் மேலும் தெரிவித்தார்.
வடகொரியாவுடன் அமெரிக்கா மேற்கொள்ளும் நகர்வுகளில் சீனாவின் தலையீடு உள்ளது என்று ட்ரம்ப் அண்மைக்காலமாக குற்றஞ்சாட்டி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம)



# வுகள்
# சயம்

## ாடர்பில்
## பகிர்வு




ம்பிய வெறுப்பாளர்களை இது மிகவும் பாதித்
ளது. பெரிய முடிவுகள் வரவுள்ளன" என்று ட்ரம்ப்
து கீச்சகத்தில் குறிப்பிட்டுள்ளார். (ம)


# அவசர நிலைக்கு முற்றுப்புள்ளி வைத்தது துருக்கி



இஸ்தான்புல், ஜூலை 20
துருக்கியில் கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்னர் கொண்டு வரப்பட்ட அவசர நிலையை முடிவுக்குக் கொண்டு வந்தது துருக்கி அரசு.
துருக்கி அதிபர் ரயிப் எர்டோகனின் ஆட்சியைக் கவிழ்ப்பதற்கு கடந்த 2016ஆம் ஆண்டு மிகப்பெரிய சதித்திட்டம் தீட்டப்பட்டது. இராணுவத்தில் ஒரு பிரிவினர் சில அரச அதிகாரிகளின் துணையுடன் இந்த ஆட்சிக் கவிழ்ப்பு முயற்சிக்கு முயன்றனர். எனினும் மக்களின் தன்னார்வப் பேரெழுச்சியை அடுத்து சதித்திட்டம் முடியடிக்க ப்பட்டது.
பல்லாயிரம் பேர் கைது செய்யப்பட்டனர். அத்துடன் பல்லாயிரக் கணக்கானோர் பதவி நீக்கப்ப ட்டனர். சுமார் 50 ஆயிரம் பேர் கைது செய்யப்பட்டனர். சுமார் ஒரு லட்சம் வரையிலானோர் பதவி நீக்கப்பட்டனர் என்கின்றன சில உத்தியோகபூர்வமற்ற தரவுகள். இதையடுத்து உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் துருக்கியில் அவசர நிலை அறிவிக்கப்பட்டது. அந்த அவசர நிலை சுமார் 2 வருடங்களுக்கும் மேலாக நீடித்தது. தற்போது அது திரும்பப் பெறப்பட்டுள்ளது.
துருக்கியில் அண்மையில் நடைபெற்ற அதிபர் தேர்தலில் எர்டோகன் வெற்றிபெற்று தனது பதவியைத் தக்கவைத்தமையும், முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு துருக்கி அதிபரின் அதிகாரங்கள் அதிகரிக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கவை. (ம)

# சைப்ரஸில் படகு விபத்து 19 அகதிகள் துயரச் சாவு

சைப்ரஸ் தீவில் ஏற்பட்ட படகு விபத்தை அடுத்து 19 அகதிகள் உயிரிழந்தனர். ஈராக், சிரியா, லிபியா, ஆபிரிக்க நாடுகள், ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான் உள்ளிட்ட ஆசிய நாடுகள் என்பவற்றில் நிலவும் உள்நாட்டு அரசியல் குழப்பம் காரணமாக, ஆயிரக்கணக்கான மக்கள் ஆபத்தான படகு பயணத்தின் மூலம் அகதிகளாக மேற்கத்திய நாடுகளில் தஞ்சம் அடைவது தொடர்கதையாக உள்ளது. இவ்வாறான பயணத்தின்போது படகுகள் விபத்து உள்ளாவதும் உயிரிழப்புக்கள் ஏற்படுவதும் பதிவுகள். அவ்வாறாக, சைப்ரஸ் நாட்டின் வடக்குப் கடற்பகுதியில் சுமார் 150 பேருடன் பயணித்த படகு மூழ்கியதில் 19 பேர் உயிரிழந்தனர். 103 பேர் பத்திரமாக மீட்கப்பட்டு ள்ளனர். காணாமல்போன 25 பேரை தேடும் பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன. (ம)



நெல்சன் மண்டேலாவின் நினைவுத் தினம் தென்னாபிரிக்காவில் நேற்றுமுன்தினம் கடைப்பிடிக்கப்பட்டது. அமெரிக்காவின் முன்னாள் அதிபர் ஒபாமா நிகழ்வில் கலந்துகொண்டு சிறப்புரை ஆற்றினார். (ம)

# வீடனில் கடுமையான காட்டுத் தீ
# ன்னாட்டு உதவிக்கும் கோரிக்கை

கோம், ஜூலை 20
ிய நாடுகளில் ஒன்றான
ன் கடும் காட்டுத் தீ ஏற்பட்

ன் வடக்குப் பகுதியில் இந்
டுத் தீ உருவாகியுள்ளது.
து தீ ஆர்டிக் வட்டத்தை
விரைவாகப் பரவிச் செல்கி
தையடுத்து பன்னாட்டு
கோரப்பட்டுள்ளது. தீய
ுப் பணியில் சுமார் 10

சிறிய ரக வானூர்திகளும் 13 உலங்குவானூர்திகளும் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.
அத்துடன் சுவீடனில் சமீப காலமாக கடும் வறட்சியும், வெப்பமும் நிலவுகின்றன.
இதனால் காட்டுத் தீ ஏற்படக் கூடிய அல்லது ஏற்பட்ட காட்டுத் தீ நாட்டின் அனைத்து இடங்களுக்கும் விரைவாகப் பரவிச் செல்லக்கூடிய சாத்தியக்கூறுகள் உள்ளன. இதையடுத்து சுவீடன் முழுவதும் அவசர நிலை அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த அவசர நிலை மறு அறிவித்தல் வரும் வரை இருக்கும் என்றும் எச்சரிக்கப்பட்டுள்ளது. சுவீடனின் அயல் நாடான நோர்வேயும் காட்டுத் தீயிற்கு எதிராகப் போராடுவதற்குத் தயார் நிலையில் உள்ளது. நோர்வேயிலும் சமீப காலமாக காட்டுத் தீ எச்சரிக்கை விடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம)



# 32 கி.மீ. நடந்த தொழிலாளி காரைப் பரிசளித்த முதலாளி

வொஷிங்டன், ஜூலை 20
வேலையின் முதல் நாளில் நேரத்துக்குச் செல்ல வேண்டும் என்ற கடமை உணர்ச்சியால், 32 கி.மீ. நடந்துசென்று பணியில் சேர்ந்த ஊழியரைப் பார்த்த முதலாளி அவருக்கு காரைப் பரிசாக அளித்து நெகிழச் செய்தார். அமெரிக்காவின் அலபாமா மாநிலத்தில், பிரி மிங்ஹாம் நகரில் இந்தச் சம்பவம் நடந்துள்ளது.



பிரிமிங்ஹாம் நகர் அருகே பெல்ஹாம் நகரைச் சேர்ந்தவர் வால்டர். அவருக்கு வயது 22. கல்லூரியில் படித்து வரும் இவருக்கு பிரிமிங்ஹாமில் உள்ள பெல்ஹாப்ஸ் எனும் நிறுவனத்தில் பகுதிநேர வேலை கிடைத்தது.
இந்த நிறுவ னத்துக்குச் செல்ல 32 கி.மீ. தொலைவை வால்டர் கடக்க வேண்டும். சமீபத்தில் அமெரிக்காவை உலுக்கிய கத்தரீனா புயலில் வால்டரின் வீடு தரைமட்டமானதால், புதிய வீட்டில் தனது தாயுடன் வறுமையான சூழலில் வாழ்ந்து படித்து வருகிறார்.
இந்த நிலையில் வேலை கிடைத்து முதல்நாள் பணிக்குச் செல்ல வேண்டும். ஆனால், கையில் பணம் இல்லாத காரணத்தால், பெல்ஹாம் நகரில் இருந்து 32 கி.மீ. தொலைவில் உள்ள பிரிமிங்ஹாம் நகருக்கு இரவு நடந்து செல்ல வால்டர் திட்டமிட்டு நடக்கத் தொடங்கினார்.
அப்போது, அதிகாலை 4 மணி அளவில் வீதியில் கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டிருந்த பொலிஸார் சிலர் அந்த இளைஞரை மடக்கி எங்கு செல்கிறாய் எனக் கேட்டுள்ளனர். அப்போது வால்டர் கார் தன்னுடைய குடும்ப சூழலைக் கூறி வேலைக்கு முதன்முதலாகச் செல்கிறேன், கையில் பணம் இல்லாததால் நடந்து செல்கிறேன் என்று கூறியுள்ளார்.
இதைக் கேட்டு இரக்கப்பட்ட பொலிஸார், வால்டருக்கு உணவு வாங்கிக்கொடுத்து விடிந்த பின் செல்லலாம் எனக் கூறி ஒரு தேவாலயத்தில் தங்கவைத்துள்ளனர்.
அதன்பின் காலையில் அந்த போலீஸ் அதிகாரிகள் வால்டர் காரை அழைத்துக் கொண்டு பிர்மிங்ஹாம் நகரில் உள்ள அவரின் நிறுவனத்தில் இறக்கி விட்டுள்ளனர்.
அத்துடன் நிறுவனத்தின் முதலாளியும், தலைமை நிர்வாக அதிகாரியுமான மார்க்லினிடம் இந்தக் கதையைத் தெரிவித்தனர். இதைக்கேட்டு நெகிழ்ச்சியடைந்த முதலாளி தனது காரையே அவருக்குப் பரிசாக வழங்கினாராம். (ம)

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# உணர்வுகள் மதிக்கப்படவேண்டும்

வல்வெட்டித்துறை தீருவிலில் விடுதலைப் புலிகளின் தளபதிகள் இருவர் உள்ளிட்ட 12 புலிகளுக்கு நினைவுத்தூபி எழுப்பப்பட்ட இடத்தில் மாற்று இயங்கங்களின் உறுப்பினர்களையும்போரில்இறந்தபொதுமக்களையும்நினைவுகூருவதற்கான நினைவுத் தூபி ஒன்றும் எழுப்பப்படவேண்டும் என்கிற தீர்மானம் வல்வெட்டித்துறை நகர சபையில் நேற்று நிறைவேற்றப்பட்டுள்ளது. ஏற்கனவே கொண்டு வரப்பட்டுத் தோற்கடிக்கப்பட்ட இந்தத் தீர்மானம் மீண்டும் கொண்டுவரப்பட்டு நிறைவேற்றப்பட்டிருக்கிறது. தீர்மானத்திற்குக் கடும் எதிர்ப்பும் கிளம்பியிருக்கிறது.

போருக்குப் பின்னரான காலத்தில் ஏற்பட்டிருக்கும் புலிகள் அற்ற ஓர் அரசியல் சூழ்நிலையில் தமிழ்ச் சனம் எதிர்கொள்ளும் உணர்வுச் சிக்கலின் மற்றொரு வெளிப்பாடு இது. விடுதலைப் புலிகள் இயக்கம் எழுச்சியோடு இருந்த காலங்களில், அவர்கள் ஒரு நிழல் அரசை நிறுவி ஆட்சி புரிந்த காலங்களில் இனத் துரோகிகளாக வகைப்படுத்தப்பட்டவர்கள் இன்று அங்கீகரிக்கப்பட்ட கட்சிகளின் அரசியல் தலைவர்களாக வலம் வருகின்றார்கள். இவ்வாறு துரோகிகளாக வகைப்படுத்தப்பட்ட மாற்று இயங்கங்களில் சில விடுதலைப் புலிகளின் இறுதிக் காலத்தில் அவர்களால் பாவமன்னிப்பு வழங்கப்பட்டவை. சில இயக்கங்களோ புலிகளால் எக்காலத்திலும் மன்னிக்கப்படாதவைகள்.

இன்று இந்தக் கட்சிகள் எல்லாமே அரசியல் கட்சிகள். அவற்றின் தலைவர்கள் தேர்தல் மூலம் மக்களின் அங்கீகாரம் பெற்றவர்கள். புலிகள் அற்ற ஒரு நிலையில், முன்னர் புலிகளால் தடை செய்யப்பட்ட இயக்கங்களும் கட்சிகளும் தாம் இழந்துபோன பெருமையை மீண்டும் நிலைநாட்ட முயற்சிக்கின்றன. எல்லா இயக்கங்களுமே தமிழ் மக்களின் விடிவுக்காத்தான் போராடப் புறப்பட்டன என்பது இந்தத் தரப்பின் வாதம். அதில் நியாயமும் இருக்கத்தான் செய்கின்றது.

ஆயுதப் போர் ஒன்று நடந்துகொண்டிருந்த காலத்தில் நடந்த சம்பவங்கள், கடைப்பிடிக்கப்பட்ட கொள்கைகள் சரியானவையா பிழையானவையா என்பது குறித்த உடற்கூறுப் பரிசோதனை சிக்கலானதும், நீண்டதும், முடிவு காண முடியாததுமாகும். எனினும் தொடக்க காலத்தில் உருவாகிய அனைத்து இயக்கங்களும், அமைப்புகளும் தமிழர்களின் இனவிடுதலையை நோக்கமாகக் கொண்டே எழுச்சி கண்டன என்பது மறுக்கமுடியாதது. தொடக்கத்தில் அந்த இயக்கங்களில் சேர்ந்தவர்களும் இயங்கியவர்களும் தன்னலமற்று அந்த நோக்கத்திற்காகத் தம்மைத் தியாகம் செய்யத் தயாராக இருந்தார்கள் என்பதும் மறுக்க முடியாதது.

அதேயளவிற்கு, இடைநடுவில் அந்தப் பயணத்தைக் கைவிட்டு, கொண்ட கொள்கையில் இருந்து விலகியவர்கள் என்பதும் மறுக்க முடியாதது. அதற்கும் மேலாக விடுதலைப் போர் எதிரியாக வரித்துக்கொண்டவர்களுடன் சேர்ந்து நின்று சொந்த இனத்திற்கு எதிராகச் செயற்பட்டவர்கள் என்பதும் உண்மையானது. அவ்வாறு தாம் செயற்பட்டதற்கு விடுதலைப் புலிகள்தான் காரணம் என்று அவர்கள் குற்றஞ்சாட்டக்கூடும். ஆனால், எத்தகைய சூழலிலும் கொண்ட கொள்கையில் இருந்து வழுவாதிருப்பதுதானே போராளிகளுக்கு அழகு.

விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இருந்து வீரச்சாவைத் தழுவிக்கொண்ட அனைவரையும் அவ்வாறான கொள்கைப் போராளிகள் என்று கொண்டால், ஏனையவர்களையும் அதேயிடத்தில் வைத்து மதிப்பிடுவதில் உணர்வுச் சிக்கல்கள் இருக்கவே செய்கின்றன. இது ஒரு ஆழப் பதிந்த உணர்வு. குறுகிய காலத்தில் இதனைப் பக்குவப்படுத்திவிட முடியாது. காலம் செல்லச் செல்ல புதிய தலைமுறைகள் அந்தப் பக்குவத்தை எட்டக்கூடும். அதற்கிடையில் குறுக்கு வழியில் மரியாதையைப் பெற முயல்வது சரியானதல்ல.

தீருவிலில் அமைக்கப்பட்ட நினைவுத் தூபி இந்தியாவின் துரோகத்திற்கான ஒரு சான்று. அதற்கும் மேலாக ஆதிக்க சிந்தனை கொண்ட அரசுகளின் கூட்டிணைவின் ஒரு வெளிப்பாடு. அன்று அந்தப் 12 பேருக்கும் நடந்ததுதான் கடைசியில் வன்னிப் போரில் ஆயிரம் ஆயிரம் பேருக்கும் நடந்தது. எனவே தீருவில் துரோகத்தின் அடையாளமும்கூட. அந்த இடத்தில்தான் மற்றொரு தூபியையும் அமைக்க வேண்டும் என்று அடம் பிடிப்பது மக்களின் உணர்வுகளைக் காயப்படுத்தும் நடவடிக்கை. அதைக் கைவிடவேண்டும். தீருவிலின் தனித்துவத்தைக் கெடுத்துவிடக் கூடாது.

அதேநேரத்தில் விடுதலைப் போருக்காக என்று புறப்பட்ட அத்தனைபேருக்கும் அவரவருக்கான இடமும் வழங்கப்பட்டேயாக வேண்டும். அதிலும் மாற்றுக்கருத்தில்லை. மாற்று இயக்க உறுப்பினர்களுக்கு நினைவிடங்களே இருக்கக்கூடாது என்று எவரும் சொல்லமுடியாது. இரண்டையும் ஒரே இடத்தில்தான் வைப்போம் என்றுகூறி தன்னலமற்ற தியாகத்தில் குளிர்காய நினைப்பது மோசமான செயல். அது கூடாது. எனவே தீருவிலின் தனித்துவத்தைக் கெடுக்காமல் வேறோர் இடத்தில் மற்றைய தூபியை அமைக்க வல்வெட்டித்துறை நகரசபை நடவடிக்கை எடுப்பதன் மூலம் இந்தப் பிரச்சினையை முடிவுக்குக் கொண்டுவரவேண்டும்.

# நாய்களும் நாமும்!

செ.அன்புராசா அடிகள்




**கடிநாய்கள் கவனம்**

என்னுடைய நண்பர் ஒருவர், தனிமையாக வாழ்ந்துவந்த வயோதிபத் தாய் ஒருவரைச் சந்திப்பதற்காகச் சென்றிருந்தார். அந்த வயோதிபத் தாய் ஏறக்குறைய பன்னிரெண்டு நாய்களை வளர்த்து வருகின்றார். இதனால், அந்த வய தான பெண்மணியின் வளவிற்குள் செல்வது நண்பருக்குப் பெரிய பயங்கர அநுபவமாகிவிட்டது! பன்னிரெண்டு நாய்களும் சேர்ந்து குரைத்துக்கொண்டு கடிக்கவந்தால் எப்படி இருக்கும்? பெரும் அசௌகரியங்களுக்கு உள்ளான நண்பர், ஒருவாறாக அந்தச்சந்திப்பை முடித்துவிட்டு வந்துவிட்டார். அச்சந்திப்புப் பற்றி பின்னர் குறிப்பிட்ட போது,'பன்னிரெண்டு நாய்களோடு தாய் நாயையும் சேர்த்து அந்த வீட்டில் பதின்மூன்று நாய்களைப் பார்த்துவிட்டு வந்தேன்!' என்றார்! தனக்குப் பிள்ளைகள் இருந்தும், தான் தனியாக இருக்கவேண்டும், எவரது உதவியும் தனக்குத் தேவையில்லை என அடம் பிடித்துக்கொண்டு, தனது சொத்துக்களை எவராவது சூறையாடிவிடுவார்கள் என்று கூறிக்கொண்டு, எவருடைய உதவியையும் நாடாது "தனிக்காட்டு ராணி"யாக அந்த வயோதிபப் பெண்மணி வாழ்ந்து வருவதாகக் குறிப்பிட்டார் நண்பர். பன்னிரெண்டு நாய்களுக்கும் ஒரு தாயென்றாலும் தேவையல்லவா? அந்த வகையில்தான் தலைப்பு வரையப்பட்டிருக்கின்றது என்பதை வாசகர்கள் புரிந்துகொள்வார்கள் என்பதில் எனக்கு நிறையவே நம்பிக்கை உண்டு!

சில வீடுகளின் வெளி வாசல்களில் 'கடிநாய் கவனம்' என எழுதப்பட்டிருப்பதைப் பார்க்கலாம். வளர்ப்பு நாய்களிடம் இருந்து பொதுவாகத் தப்பிவிடலாம். ஆனால், வீடுகளில் 'இருக்கின்றவை'களிடம் இருந்து தப்பிப் பிழைப்பது கடினமானதாகிவிடும்! ஆக, மேற்சொன்னதைச் சிறு திருத்தத்தோடு 'இந்தவீட்டில் கடிநாய்கள் உண்டு. கவனம்!' எனப் புரிந்து கொள்வதுதான் உசிதமானது.

**'நாயே! உனக்குமொரு நாடா?'**

'நாயே உனக்குமொரு நாடா' எனத் தொடங்கும் வார்த்தைகளில் ஈழத்துக் கவிஞர் காசிஆனந்தன் ஒரு பாடல் எழுதியிருந்தார். அப்பாடல் வரிகளின் பொருள் இன்னமும் எமது ஈழவள நாட்டுக்குப் பொருந்துவதாகவே தெரிகின்றது. இவ்வுருவகத்தின் ஊடாக, பல சங்கதிகளைச் சொல்லவிளைகின்றார் கவிஞர். இந்தப்பாடலை வைத்துக்கொண்டு பல தரத்தாரையும் உருவகிக்கலாம்போல் தோன்றுகின்றது. இதுபோன்றதொரு பாணியில்தான்,'கேவலம்' என்றொரு கவிதையை சில ஆண்டுகளுக்கு முன்னர் எமது நாட்டில் நிலவிய அரசியல் சூழலை மனதில் கொண்டு, "எங்கள் பிள்ளைகள் வேட்டையாடப்பட்டபோது இந்த மண்ணில் தெருநாய்கள்கூட பத்திரமாய்ப் பாதுகாக்கப்பட்டன!' என எழுதியிருந்தேன். ஏனெனில், நாய்களைக் கொல்வது குற்றமாகவும், 'பயங்கரவாதிகள்' என்ற முத்திரை குத்தி மனிதர்களைச் சுட்டுத்தள்ளுவது வீரமாகவும் கருதப்பட்ட கால கட்டம் அது.

ஒருவகையில்,ஈழவள நாட்டில் வாழும் அனைத்து இனக் குழுமங்களுக்கும் இந்தப் பாடல் பொருந்துவதாகவே தெரிகின்றது. ஏனெனில், இத்தனை ஆண்டுகள் காலமாகப் புரையோடிப்போன இனப் பிரச்சினைக்கு மூன்று, நான்கு தசாப்த காலமாக எத்தனையோ உயிர்களை இழந்த பின்னரும், சுமுகமான ஒரு சூழல் நிலவும் இன்றைய காலத்தில்கூட அரசியல் தீர்வைக் காணமுடியாத எமது தலைவர்களைப் பார்த்து உங்களுக்குமொரு நாடு தேவையா? என்று கேட்பதில் என்ன தவறு இருக்கின்றது?. சரியாகத்தானே கவிஞன் பாடியிருக்கின்றான் எனச் சொல்லத் தோன்றுகின்றது. இது, நாடளாவிய தேசிய ரீதியில் சுட்டிக் காட்டக்கூடிய ஒன்று.

அடுத்து, தமிழ்த் தேசியத்தை எடுத்துக்கொண்டால், இந்தக் கட்டத்தில் என்னவென்று சொல்வது! இந்த ஆண்டில்(2018) நடந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் வடமாகாணத்தில் பெரும்பான்மை இருக்கைகளைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புப் பெற்றுக் கொண்டது. அப்படியிருந்தும், எலும்புத் துண்டைக் கண்டால் உடலை வாலாக வளைத்து நிற்கும் சீவன்களைப்போல, சில இலட்சங்களுக்காக உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களில் வெற்றியீட்டிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்களில் சிலர், பெரும்பான்மை இனக்கட்சிகளுக்கு இரகசியமாக ஆதரவு தெரிவித்து, சில உள்ளூராட்சி மன்றங்களை பெரும்பான்மை இனக்கட்சிகள் கைப்பற்றக் காரணமாய் ஆகியிருக்கின்றார்கள். இவர்களைப் பார்த்து,உங்களுக்குமொரு நாடு தேவையா? என்று கேட்கவேண்டும் போல இருக்கின்றது. அப்படிக் கேட்பதில்தான் என்ன பிழை இருக்கிறது?

**'நாணமும் அச்சமும் நாய்களுக்கு'**

'ஆணும் பெண்ணும் நிகரெனக் கொள்வதால் அறிவிலோங்கி இவ்வையம் தழைக்குமாம்...' எனத் தொடங்கி,'நாணமும் அச்சமும் நாய்களுக்கு வேண்டுமாம்' என மகாகவி பாரதியார் பாடுகின்றபோது, பெண்ணடிமைத்தனத்தில் இருந்து பெண்கள் விடுதலை பெறவேண்டும் என்ற உன்னத நோக்கு பாரதியை இவ்வாறாகப் பாடவைத்தது. பெண்கள் என்பவர்கள் அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு ஆகிய அக அணிகலங்களைக் கொண்டிருக்கவேண்டும். ஆனால், இதனையே அடிமைச் சங்கிலிகளாக ஆக்கி அவர்களைக் காலங்காலமாக அடுப்படியில் அடிமைகளாக வைத்திருந்தார்கள். இக்கொடூரமான நிலைகண்டு கொதித்தெழுந்தான் பாரதி. அதன் விளைவுதான் பாரதியின் 'நாணமும் அச்சமும் நாய்களுக்கு வேண்டுமாம்' என்ற பாடல்! எனினும், பாரதி கண்ட புதுமைப் பெண்ணை இன்னும் எதிர்பார்த்துக் காத்துக்கிடக்கவேண்டி இருப்பதுதான் துரதிஷ்டவசமானது.

**இயேசுவின் பார்வையில்!**

'...பிள்ளைகள் வயிறார உண்ணட்டும். பிள்ளைகளின் உணவை எடுத்து நாய்க்குட்டிகளுக்குப் போடுதல் நல்லதல்ல...' என இயேசுவின் போதனை(மாற்கு7:27) ஒன்றில் புலப்படும். விவிலிய பார்வையில் மிக ஆழந்த ஒரு பார்வையை இக்கூற்றோடு வருகின்ற வார்த்தைகள் ஏற்படுத்தினாலும், சாதாரணமாக ஒவ்வொன்றையும் அதற்குரிய தரத்தில் வைத்துப் பேணவேண்டும், ஒவ்வொன்றுக்குமுரிய மதிப்பையும் அவற்றுக்குரிய வகையில் கொடுக்கவேண்டும் என்பது பொருளாகின்றது. அவ்வாறெனில், பிள்ளைகள் உறங்கும் கட்டிலில் நாய், பூனை போன்ற செல்லப்பிராணிகளை வைத்திருப்பது, அத்தகைய இடத்தை அவற்றுக்குக் கொடுப்பது ஏற்புடையதல்ல. சில பேர்வழிகள் ஒரு குழந்தைக்குச் செலவிடும் பணத்தைவிட அதிகமான தொகையை, நாய், பூனை போன்ற பிராணிகளைப் பராமரிக்கச் செலவிடுகின்றார்கள். இது நியாயமானதல்ல என்பதை அவர்கள் நினைத்துப் பார்ப்பது கிடையாது!

நாய் பூனை போன்றவை தாங்களாகவே தங்கள் உணவைத் தேடும் ஆற்றலைக் கொண்டிருக்கின்றன என்று ஆய்வுகள் தெரிவிக்கின்றன. மேலும், மனிதன் பாரிணாம வளர்ச்சி அடைவதற்கு பல நூறு ஆண்டுகளுக்கு முன்பே, நாய் பரிணாம வளர்ச்சி அடைந்துவிட்டது என்று பத்து ஆண்டுகளாக நாய்கள் பற்றி ஆய்வுகள் நடத்திவரும் வைத்தியர் 'ஜெக் செங்' சுட்டிக்காட்டுகின்றார். இன்னும் மனிதருக்குத்தான் நாய்கள் வேண்டுமே தவிர, மனிதர் இல்லாமலே நாய்கள் உயிர்வாழக்கூடியவை என்கின்றார் அவர். மனித குலம் அழிந்து போனாலும் உயிர்வாழக்கூடிய ஒரே இனம் நாய்தான் என்று தன் ஆய்வுகள் மூலம் நிறுவுகின்றார் மேற்சொன்ன ஆய்வாளர். எமது ஊர்களிலும் நகரப் பகுதிகளிலும் நாய்களின் பெருக்கத்தையும், தெருநாய்களின் அட்டகாசங்களையும் பார்க்கின்ற

போது இதே போக்கில் போனால் நாய்களின் ஆட்சிதான் விரைவில் நாட்டில் நடைபெறும்போல் தோன்றுகின்றது! ஏன், இப்போதுகூட எப்படியான ஆட்சி நடக்கின்றது?, அப்படியான ஆட்சிதானே நடக்கின்றது என்று யாரும் கூறினாலும் ஆச்சரியப்படத் தேவையில்லை!

**ஒருவரது இயல்பான குணத்தை மாற வைப்பது இலேசானதொன்றதல்ல என்பதற்கு நாயை உவமைப்படுத்தும் பழமொழிகள்**

'நாய்க்கேன் போர்த் தேங்காய்' என்றொரு பழமொழி வழக்கில் இருக்கின்றது. இவ்வாறு ஒருவரைக் குறித்துக் குறிப்பிட்டால், 'உனக்கேன் தேவையில்லாத வேலை', 'உனக்குப் பொருத்தமில்லாத வேலையை ஏன் செய்கிறாய்?' என்பதே புரிந்து கொள்ளப்படும் பொருளாகும். 'நாயை நடுக்கடலில் விட்டாலும், நக்குத் தண்ணிதான்' என்று இன்னொரு முதுமொழி உண்டு. ஒருவருடைய இயல்பை, குணத்தை இலேசில் மாற்றிவிட முடியாது என்பதைக் குறிக்கச் சொல்லப்படும் ஒரு முதுமொழியாக இதனைப் பார்க்கலாம்.

மேலும், 'நக்குகிற நாய்க்கு செக்கென்ன சிவலிங்கமென்ன' என்று வேறொரு பழமொழியும் இருக்கின்றது. கொள்கைகளை, வாக்குறுதிகளை காற்றில் பறக்கவிட்டுவிட்டு, சந்தர்ப்பவாதிகளாக மாறுகின்றவர்களை இவ்வாறாகக் குறிப்பிடுவார்கள். உதாரணமாக, அன்றாடம் அல்லலுறும் காணாமலாக்கப்பட்டோரைத் தேடும் உறவுகள், தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலைக்காகக் காத்திருப்போர் போன்றவர்களின் நலனை முன்னுரிமைப்படுத்தாது, தங்கள் தனிப்பட்ட நலன்களை முன்னிலைப்படுத்தி செயற்படும் தலைவர்கள் குறித்து 'நக்குகிற நாய்க்கு செக்கென்ன சிவலிங்கமென்ன' என்றும் சாதாரண மக்கள் வெறுப்போடு பேசிக்கொள்கின்றார்கள்.

இன்னும், 'நாய் வாலை நிமிர்த்த முடியாது' எனப் பெரியவர்கள் கூறுவார்கள். அதாவது ஒருவருடைய இயல்பான பழக்க வழக்கங்களை மாற்றுவது இயலாத காரியம், என்று இதற்குப் பொருள் கொள்ளப்படுகின்றது. சில மனிதர்களின் செயற்பாடுகள் அவர்களின் போக்குகளை ஒரு போதும் மாற்றமுடியாதவை போன்றே இருந்துவிடுவதையும் பார்க்கலாம்.

'திறந்த வீட்டிற்குள் நுழைகின்ற நாய் போல' என்ற உருவகத்தையும் சொல்லுகின்றார்கள். உரியவரிடம் எவ்வகையான அனுமதியும் பெற்றுக்கொள்ளாத ஒன்றைப் பயன்படுத்தும்போது அல்லது ஒருவர் தான் நினைத்தபடி ஒருவருடைய உடமையைக் கையாளுகின்றபோது மேற்சொன்னவாறாகக் கூறுவார்கள்.

**நாய்கள் இனம் சொல்வது மனித இனத்துக்குப் புரியுமா?**

'உறங்கிக் கிடக்கின்றது ஊர்! ஆனால், நாலாபக்கமும் நாய்கள் மட்டும் நடமாடித் திரிகின்றன!' என்றும், 'நன்றிகெட்ட நாயே! என இனிமேலும் இகழாதே மனிதா! எம்மோடு வாழ்ந்துகொண்டும், நன்றிமறவாது இற்றைவரை இருப்பது நானும் நீயுமல்ல! நாய்தான்!' எனவும் இரு கவிதைகளை நாயை வைத்துக்கொண்டு நாசூக்காக எழுதியிருந்தேன். 'இதில்வரும் முதலாவது 'கவிதை இராணுவ மிகை நடமாட்டத்தையும், குடாநாட்டுக் கோஷ்டிகளின் குழப்பங்களையும், மேலும் தெருநாய்களின் அத்துமீறிய அடாவடித்தனங்களையும் கோடிட்டுக் காட்டுபவையாக இருப்பது புரியும்.

'வீட்டுக்கொரு நாயை வளர்த்தும் மனிதன் விசுவாசத்தைக் கற்றுக்கொள்ளவில்லையே! இனி நாய்கள் மனிதனை வளர்த்து, அவனுக்கு விசுவாசத்தைக் கற்றுக்கொடுக்குமா?' எனக் கவியரசு கண்ணதாசன் நாய்களிடமிருக்கும் விசுவாசத்தை விபரிப்பார். கவிஞர் சோ. பத்மநாதன், 'நாய்கள்' என்ற தலைப்பில் வடக்கிருத்தல் என்ற கவிதைத் தொகுதியில், 'அந்நாளில் ஊரைவிட்டு ஓடாதிருந்து, மதிப்பில் உயர்ந்தீர். இன்றும் வேற்றரவம் கேட்டால் விடாது குரைக்கின்றீர். எமக்கில்லாமான உணர்வு உமக்கு, வந்தவிதம் எந்தவிதம்?' என நாயின் மான உணர்வின் மதிப்பை எடுத்தியம்புகின்றார்.

மேலும், தமிழர் தாயமெங்கும் நடைபெற்ற போரில் மக்கள் இடம் பெயர்ந்தபோது நாய்களின் பொறுப்பில்தால் வீடுகள் விடப்பட்டன! எவ்வளவு விசுவாசமாக அவை இருந்தன என்பதற்கு கவிஞர் சோ.பத்மநாதனின் மேற்கூறப்பட்ட கவிதைத் தொகுதியில் 'வீடு பேறு' என்ற கவிதை தக்க சான்றாகும். இதேபோல 25. 10.2009இல் மித்திரனில் வெளிவந்த 'இடம்பெயர்ந்த ஊரில் இடம்பெயரா நாய்' என்ற கவிஞர் யோ.புரட்சியினுடைய கவிதையும் இதற்குச் சிறந்த ஆதாரமாகும். இந்தக் கவிதைகளைப் படிக்கின்றபோது கண்கள் கண்ணீரால் குளமாகும்.

'நாய்கள் செய்யும் வேலையை மனிதர்கள் செய்வதால் மனக் குழப்பத்தில் திரிகின்றன தெருநாய்கள்!' என வித்தியாவின் படுகொலையைப் பின்னணியாக வைத்து அலைக்ஸ் பரந்தாமன் எழுதியிருந்தார். இப்படியாக, இவைபோல, நாய்களை வைத்தே நியாயமான கவிஞர்கள் கவிதைகளின் ஊடாகச் சக மனிதர்களுக்கு நல்லறிவூட்ட விளைகின்றார்கள். சுனாமியாக எழுந்து நிற்கும் கேள்வி என்னவெனில், எந்த அளவுக்கு நாய்கள் இனம் சொல்லும் விடயம், மனித இனத்துக்குப் புரியும் என்பதுதான்?

**நாய்க் குணம்!**

வயது முதிர்ந்த, ஓய்வுநிலையிலுள்ள அருட்தந்தையர்கள் வாழும் இல்லத்தில் ஓர் அருட்தந்தை நாயொன்றை வளர்த்தார். அந்த நாய் ஒரு வயதான அருட்தந்தையைக் கடித்துவிட்டது. கடிவாங்கிய அருட்தந்தை, 'உங்களுடைய நாய் என்னைக் கடித்துவிட்டது!' எனச் சொல்ல, 'அந்நாயை வளர்க்கும் அருட்தந்தை, 'நாய் தன்ரை வேலையைச் செய்யும் தானே?' என்று சர்வசாதாரணமாகக் கூறினார்! அதற்குப் பின்னரான நிலைமை எப்படி இருந்திருக்கும் என எண்ணிப்பார்க்க வேண்டியதில்லைத்தானே?

கடந்த ஆண்டு(2017) மார்கழிமாதம் அமரிக்காவில் கோகிலேன்ட் வர்ஜீனியா மாகாணத்தில் 22வயது நிரம்பிய இளம் பெண்ணான பெத்தானி ஸ் ரீபன்ஸ் என்பவள் உடலில் பல பாகங்களில் காயங்களுடன் சடலமாக மீட்கப்பட்டாள். அவளின் இறப்புக் குறித்து பொலிசார் எவ்வித தகவல்களையும் ஆரம்பத்தில் வழங்கவில்லை. இருப்பினும் பெத்தானியின் உறவினர்கள், நண்பர்களின் கோரிக்கைக்கு அமைவாகவும், வதந்திகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கவும் பொலிசார் பெத்தானிக்கு நடந்த விபரீதத்தை வெளியிட முன்வந்தார்கள். '...உடல் கைப்பற்றப்பட்ட அன்று, பெத்தானியின் இடுப்புப் பகுதியை அவருடைய இரு நாய்களும் சாப்பிட்டுக் கொண்டிருந்தன. அதை நானும் மற்ற அதிகாரிகளும் நேரடியாகப் பார்க்க நேரிட்டது. இறந்த பெத்தானியின் குடும்பத்தை மனதில் வைத்தே அந்த இறப்புக் குறித்து அறிவிக்காமல் இருந்தோம்...' என பொலிஸ் உயரதிகாரியொருவர் கூறியதோடு, நாய்கள் எதற்காக அவளைக் கொன்றன என்ற விசாரணை நடந்து வருவதாகக் குறிப்பிட்டிருந்தார். இந்த விடயம் அமரிக்காவை மட்டுமல்ல முழு உலகையுமே ஒருகணம் அதிர்ச்சிக்கு உள்ளாக்கி இருந்தது.

**நாய்களால் ஏற்படும் தொல்லைகள்!**

தெருநாய்களால் ஏற்படும் வீதி விபத்துக்களில் சிக்கி எமது பிரதேசங்களில் படுகாயம் அடைந்தவர்களையும் இறந்துபோனவர்களையும் பதிவுசெய்தால் அது எண்ணிக்கையில் பெரும் தொகையாக இருக்கும் என அறுதியிட்டுக் கூறலாம்! கட்டாக்காலி நாய்களுக்கு விசர் பிடித்து, அதனால் நீர் வெறுப்பு நோய் ஏற்பட்டு அநியாயமாகச் செத்தவர்கள் இன்னும் ஒரு பெரும் தொகையாக இருக்கும். மேலும் இரவு நேரங்களில் நாய்களால் ஏற்படும் தொல்லைகளினால் இரவு உறக்கத்தைத் தொலைப்பவர்கள் ஆயிரக்கணக்கானவர்கள். மேலும், வீதிகளில் வீசப்படுகின்ற கழிவுப் பொட்டலங்களை இரவு முழுவதும் கிண்டிக் கிளறி நகர வீதிகளை நரகமாக்கி விடும் நிலையும் இன்னொரு புறம்!



> சில இலட்சங்களுக்காக உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களில் வெற்றியீட்டிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்களில் சிலர், பெரும்பான்மை இனக் கட்சிகளுக்கு இரகசியமாக ஆதரவு தெரிவித்து சில உள்ளூராட்சி மன்றங்களை பெரும்பான்மை இனக்கட்சிகள் கைப்பற்றக் காரணமாய் ஆகியிருக்கின்றார்கள்.

தெருநாய்களின் தொல்லைகளுக்கு ஒரு முடிவு கட்டவேண்டும் என்பது எவ்வித தாமதமும், தயக்கமும் இன்றி மேற்கொள்ளப்பட வேண்டிய ஒரு பெரும் வேலைத் திட்டமாகும். 'தெருநாயை அழிப்பது யார் பொறுப்பு?' என 13.03.2018அன்று குடாநாட்டுப் பத்திரிகையொன்று, ஆசிரியர் தலையங்கம் தீட்டியிருந்தது. இதில், வடபுலத்தில் குறிப்பாக, யாழ்ப்பாண மாவட்டத்தில் தெருநாய்த் தொல்லைகளிலும் துன்பங்களிலும் இருந்து மக்களை விடுவிக்க வடமாகாண ஆளுநர் விரைந்து நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் அந்தப் பத்திரிகை சுட்டிக்காட்டியிருந்தது. அதனை ஒவ்வொரு உள்ளூராட்சி சபையும், ஏன் மாகாண சபையும் ஒரு முன்மொழிவாகக் கொள்ள வேண்டும்.

**அனுராதபுர முதல்வரின் முன்னுதாரணத்தைப் பின்பற்றுவார்களா?**

இதற்கு முன்னுதாரணமாக அனுராதபுரம் மாநகர 'சபை முதல்வர் எம்.ஜீ.சோமதாச ஒரு அருமையான திட்டத்தை அநுராதபுர நகரில்நடைமுறைப்படுத்தமுன்வந்துள்ளார். அநுராதபுர நகரம் கட்டாக்காலி நாய்கள், நுளம்புப் பரவல் ஆகிய இரண்டு பெரும் சுற்றாடல் பிரச்சினைகளை எதிர்கொண்டிருப்பதாகக் குறிப்பிட்டு, அவற்றை உடனடியாகக் கட்டுப்படுத்த உடன் நடவடிக்கையில் இறங்கியுள்ளார். சுற்றாடலுக்கு நாய்கள் அவசியம் எனக் குறிப்பிட்ட அவர், நாய்களைச் சரியான முறையில் வளர்க்க வேண்டும் என்றும் தெளிவுபடுத்தி உள்ளார். நாய்களை வளர்க்க வரி அறவிடுவதன் மூலம் நாய் வளர்ப்பது கட்டுப்படுத்தப்படுவதோடு, கருத்தடை ஊசி மருந்துகள், சத்திர சிகிச்சை போன்ற வசதிகளை ஏற்படுத்தி இந்தத்திட்டத்தை நடைமுறைப்படுத்த உள்ளார் எனத் தெரியவருகின்றது.

ஆகக்குறைந்தது எம்முடைய பிரதேச,நகர சபைகள் தெருநாய்களையாவது கட்டுப்படுத்துவதை தமது தலையாய பணியாகக் கொண்டால், அதுவே முதல் வெற்றியாகும். இவ்வாறாக அநியாய உயிரிழப்புக்களையும் வீதி விபத்துக்களை யும் இல்லாமல் செய்யும். திட்டத்தை முன்மொழிந்து நடைமுறைப்படுத்தச் சில நல்ல மனிதர்கள் இந்நடப்பாண்டிலேயே முன்வரலாம். ஆனால், இதனைத் தடுத்து நிறுத்தி தெருநாய்களைக் காப்பாற்ற அவைகளின் பக்கமாக நின்று வாதிட தேர்தலில் வெற்றிபெற்ற எத்தனை தெரிந்தெடுக்கப்பட்ட தரப்பினர்கள் அணிதிரள்வார்களோ என்ற ஆதங்கம் ஏற்படுவதும் இவ்விடத்தில் தவிர்க்க முடியாத தாகின்றது. ஏனெனில் எந்தத்திட்டத்தைக் கொண்டுவந்தாலும் எதிர்ப்பதற்கு என்றே ஒரு கோஷ்டி இருக்கின்றதே!

**காட்டு விலங்குகளின் காப்பகங்கள் காடுகளே!**

மிருகங்கள் விலங்குகளுக்கு காப்பகங்கள் அமைப்பது பற்றி ஆங்காங்கே சிலர் சிந்தித்து வருகின்றார்கள். உண்மையில் மிருகங்கள் விலங்குகள் இயற்கையாகவே வாழக்கூடிய இடங்களில் அவற்றை வாழவிட்டுவிட வேண்டும். குறிப்பாகக் காட்டு விலங்குகளை காட்டில் வாழவிட வேண்டும். ஆனால், இன்று காடுகளை மனிதர்கள் அழிப்பதனால் மிருகங்கள் காடுகளை விட்டு நாட்டுப் பகுதிக்குள் அத்துமீறி நுழைவதையும், நுழைவதோடல்லாமல், பெரும் சேதங்களை ஏற்படுத்துவதையும் அவதானிக்கலாம். மிருகங்கள் வாழும் காடுகளை அழித்தால் மிருகங்கள் மனிதர்களுக்கு இடையூறுகளை ஏற்படுத்துவதைத் தவிர்க்க முடியாதுபோகும்!

**மனநிலையை மாற்ற ஆவன செய்யவேண்டும்!**

தெருநாய்களுக்குக் காப்பகம் அமைப்பது தொடர்பாகச் சில செய்திகளைக் கடந்த சில மாதங்களாக ஆங்காங்கே பார்க்கக்கூடியதாக இருந்தது. நல்லதொரு செய்தி! ஆனால், இந்த இடத்தில் இன்னுமொன்றையும் கட்டாயமாகக் குறிப்பிட்டே ஆக வேண்டும். நாய்களுக்கான காப்பகங்களை அமைக்கின்ற அதேநேரத்தில், நாய்களிலும் கேவலமான தமது மனநிலைகளை மனிதர்கள் மாற்றிக் கொள்வதற்கான செயற்றிட்டங்களையும் நடைமுறைப்படுத்துவது எமது சமூகம் உயிர்ப்புப்பெற மிகமிக அவசியமானது. இந்தச் சமூகம் நாய்களை, பூனைகளைக் கொண்டாடும். பசு மாட்டை தெய்வமாகப் பூசிக்கும். பல நூற்றாண்டுகளாக அடிமைகளாக உழைத்துழைத்துத் தேய்ந்திருக்கும் மனிதர்களை மட்டும் தீண்ட மறுக்கிறது. தனக்குச் சமமான ஒருவன் என்ற சம உரிமையைத் தர மறுக்கிறது. இது கொடிய மனநோய். இத்தகைய சம்பவங்கள் மன உளைச்சலை ஏற்படுத்துகின்றன...' என்ற பத்திரிகை ஆசிரியர் புனித பாண்டியனின் கூற்று ஆழ்ந்த சிந்தனைக்குரியது.

**அநாவசியப் பெருக்கம் ஆபத்தானது!**

அடுத்து, விலங்குகள் மிருகங்கள், எதுவாக இருப்பினும், அவைகள் பாதுகாக்கப்பட வேண்டும் இயலுமானவரை பராமரிக்கப்பட வேண்டும். இன விருத்தியைக் கொஞ்சம் கட்டுப்பாட்டோடு பேணுவதற்கு வழிவகை மேற்கொள்ளப்பட்டால் அவை அநாவசியமாகப் பெருகாது தடுக்கலாம். இதுபற்றி ஏன் எம்முடைய பிரதேச சபைகளும், நகர சபைகளும் அக்கறைப்படுவதில்லை என்பதைப் பற்றி பொறுப்பிலுள்ள புத்திசாலிகள் கொஞ்சம் சிந்திக்க வேண்டும். நாலாபக்கமும் நாய்கள் பெருகி அவற்றின் தொல்லைகள் கட்டுங்கடங்காமல் போனதன் பின், நாய்களைப் பிடிக்க் நான்கு வண்டில்களோடு நான்குபேர் சென்று நாற்பது நாய்களைப் பிடித்து அழித்தால் தெருநாய்களின் அட்டகாசம் குறைந்துவிடப் போவதில்லை- அவைகளால் ஏற்படும் பிரச்சினைகளும் தீர்ந்துவிடப் போவதில்லை என்பதை மேற்சொன்ன சபைகளும்புத்திசாலி அதிகாரிகளும்தெரிந்துகொள்ள வேண்டும்.

எனவே, மக்களின் நலன்பேணும் திட்டத்தில் ஈடுபடுகின்ற உள்ளூராட்சிச் சபைகளும், ஏனைய அதிகாரிகளும் நிறுவனங்களும் இதுபற்றி மிக நிதானமாகச் சிந்தித்து திட்டங்களை வகுத்துச் செயல்படுத்த முன்வரவேண்டும். ஆகக்குறைந்தது தெருநாய்களைக் கட்டுப்படுத்துவதிலாவது எமது பிரதேச, நகர சபைகள் நடப்பாண்டில் வெற்றிகாணுமா என்பதைப் பொறுத்திருந்து பார்ப்போம்!



## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** பிறரை நம்பி எவருக்கும் வாக்குறுதி வழங்க வேண்டாம். தொழில், வியாபார நடைமுறை சீராக கூடுதல் உழைப்பு அவசியம். சராசரி பணவரவு கிடைக்கும்.

**இடபம்:** வளர்ச்சிக்கான திட்டங்களை தீட்டுவீர்கள். நண்பரின் ஆலோசனையால் நன்மை உண்டாகும். தொழில், வியாபாரத்தில் உற்பத்தி, விற்பனை செழிக்கும்.

**மிதுனம்:** நற்செயலில் ஈடுபட்டுப் பெருமிதம் காண்பீர்கள். சுபநிகழ்வு நடத்தும் சூழல் குடும்பத்தில் உருவாகும். தொழில், வியாபாரம் செழித்து சமூகத்தில் புகழ் பெறுவீர்கள்.

**கடகம்:** சிலரது பேச்சு உங்களைச் சங்கடப்படுத்தலாம். தொழிலில் உற்பத்தி, விற்பனை சுமாரான அளவில் இருக்கும். புதிய இனங்களில், திடீர் செலவு அதிகரிக்கும்.

**சிங்கம்:** முக்கிய பணி ஒன்றை மறந்திடுவீர்கள். குடும்ப உறுப்பினர் நினைவுபடுத்தி உதவுவர். தொழில், வியாபாரத்தில் கூடுதல் பணிச்சுமை ஏற்படும். பணவரவு சுமாராக இருக்கும்.

**கன்னி:** பூர்வபுண்ணிய நற்பலன் துணை நிற்கும். தொழில், வியாபாரம் வியத்தகு வளர்ச்சி பெறும். உபரி பணவருமானம் வந்து சேரும். பெண்கள் வீட்டு உபயோகப்பொருள் வாங்குவர்.

**துலாம்:** போட்டி மனப்பான்மையுடன் செயற்படுவீர்கள். தொழில்,வியாபாரத்தில் அளவான உற்பத்தி, விற்பனை இருக்கும். இலாபம் சீராக இருக்கும்.

**விருச்சிகம்:** நண்பரிடம் கேட்ட உதவி கிடைக்கும். செயல்களில் பொறுப்புணர்வுடன் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபாரத்தில் புதிய வளர்ச்சி உருவாகும்.

**தனுசு:** இரக்க குணத்தால் பிறருக்கு உதவுவீர்கள். தொழில், வியாபாரத்தில் வருகிற இடையூறுகளை தாமதமின்றி சரி செய்வது நல்லது. குறைந்த அளவில் பணவரவு இருக்கும்.

**மகரம்:** தொல்லை கொடுத்தவர், இடம் மாறிப் போகிற சூழ்நிலை ஏற்படும். தொழில், வியாபாரத்தில் உற்பத்தி, விற்பனை அதிகரிக்கும். வருமானம் திருப்தியளிக்கும்.

**கும்பம்:** உங்கள் மனதில் ஆன்மிக எண்ணம் மேலோங்கும். தொழில், வியாபாரத்தில் தாராள முன்னேற்றம் உருவாகும். பணவரவு திருப்திகரமாக இருக்கும்.

**மீனம்:** வழக்கத்துக்கு மாறான பணி உருவாகி தொந்தரவு தரலாம். தொழில், வியாபாரத்தில் அளவான மூலதனம் போதும். நிலுவைப்பணம் கூடுதல் முயற்சியால் கிடைக்கும்.




அம்புலன்சுக்குகூட வழிவிடாமல்
அவசரமாய்ச் சென்ற ஆட்டோவின் பின்னால்
எழுதியிருந்த வாசகம்...

**"விட்டுக் கொடுப்பவர்கள்
கெட்டுப்போவதில்லை"**

"உங்க அப்பா பெரிய ஒலிம்பிக்ஸ்
ரசிகரா இருக்கலாம்...
அதுக்காக தங்கத்திற்குப் பதிலா
வெண்கல நகை போட்டா என்ன
அர்த்தம்"
"நான் மூன்றாவதாப் பிறந்த
பொண்ணுங்க, அதான் அப்படி"





## காத்திருக்கப் பழகு

பசிக்கும் வரை காத்திரு
சளி வெளியேறும் வரை காத்திரு
உடல் தன்னைச் சீர்படுத்தும் வரை காத்திரு
உலையில் அரிசி வேகும் வரை காத்திரு
பயிர் விளையும் வரை காத்திரு
கனி கனியும் வரை காத்திரு
மரம் மரமாகும் வரை காத்திரு
தானியத்தின் உமி நீங்கும் வரை காத்திரு
தானியம் கல்லில் மாவாகும் வரை காத்திரு
துவையல்அம்மியில்அரைபடும்வரைகாத்திரு



ஓடாதே
நில்
விழி
பார்
தேடு
ரசி
சுவை
உணர்
பேசு
பழகு
விரும்பு

உன்னிடம்காத்திருப்புப்பழக்கம்இல்லாததனாலேயே,
உன்வாழ்க்கைமுறைக்குசற்றும்பொருந்தாத,
தேவையில்லாதபொருள்களும், செய்திகளும்
உன் மேல் திணிக்கப்படுகிறது.
அவசரம் உன்னையும், உன் சந்ததியையும்
அழிக்கும் ஆயுதம் என்பதை மறவாதே.

## சுடோக்கு

எண் விளையாட்டு


| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | 7 | | 3 | 5 |
| | | | | 8 | 5 | | 4 | 2 |
| | | | | 2 | | 1 | | |
| | | 6 | | 5 | | | 2 | 7 |
| | 5 | | | | 6 | | 1 | |
| 9 | 7 | | | | 2 | 6 | 5 | |
| | | 1 | | 4 | | | | |
| 7 | 9 | | 5 | 6 | | | 8 | |
| 3 | 8 | | 2 | | | | | |


| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | 6 | 4 | 3 | 2 | 7 | 9 | 8 | 1 |
| 8 | 7 | 2 | 5 | 9 | 1 | 4 | 3 | 6 |
| 1 | 9 | 3 | 8 | 4 | 6 | 2 | 5 | 7 |
| 6 | 2 | 9 | 4 | 3 | 5 | 7 | 1 | 8 |
| 7 | 1 | 8 | 2 | 6 | 9 | 5 | 4 | 3 |
| 4 | 3 | 5 | 7 | 1 | 8 | 6 | 2 | 9 |
| 3 | 5 | 1 | 9 | 7 | 4 | 8 | 6 | 2 |
| 2 | 8 | 7 | 6 | 5 | 3 | 1 | 9 | 4 |
| 9 | 4 | 6 | 1 | 8 | 2 | 3 | 7 | 5 |


நேற்றைய விடை

## ரஜினிக்கு ஜோடியாகிறார் சிம்ரன்!

இயக்குநர் கார்த்திக் சுப்புராஜ் இயக்கத்தில் நடிகர் ரஜினிகாந்த் நடித்து வருகிறார். இந்த படத்தின் முதற்கட்ட படப்பிடிப்பு சமீபத்தில் முடிவடைந்தது.
இந்தப் படத்தில் விஜய் சேதுபதி முக்கிய வேடத்தில் நடிக்க வுள் ளமை அனைவரும் அறிந்ததே. தற்போது இந்தப் படத்தில் ரஜினிக்கு ஜோடியாக சிம்ரன் நடிக்கவுள்ளதாகத் தகவல் வெளி யாகியுள்ளது



நீங்கள் சாதாரண தரப்பரீட்சையில் தோற்றி.

Registered with TVEC
TERTIARY AND VOCATIONAL EDUCATION COMMISSION SRI LANKA

**(O/L) 5 S**

பெறுபேற்றினைப் பெற்றவரா?......




சாதாரண தரப்பரீட்சையில் 5S பெறுபேற்றுடன் 30 வயதுக்குட்பட்ட ஆண் / பெண் அனைவரும் விண்ணப்பிக்கமுடியும்.

TVEC நிறுவனத்தினால் NVQ III,IV தர சான்றிதழ் வழங்கப்படும்.

மாதாந்தம் 25,000/- அடிப்படை சம்பளத்துடன்
உறுதியான தொழில் வாய்ப்பு

| | | |
|---|---|---|
| 28 Bar Road Batticaloa<br>0718722353<br>0702705368 | 76/A Police station Road<br>Kalmunai<br>0719926682<br>0710770770 | 203, 1stFloor Main Street<br>Trincomalee<br>0719926681<br>0702705370 |
| 36/1,38/1 2ndCross Road<br>Vavuniya<br>0718722351<br>0702705367 | 323 Kashthooriya Road<br>Jaffna<br>0718722350<br>0718722352 | Thirukkovil<br>Boys Home Road<br>Thirukkovil<br>0710770770 |

IVA NURSING SCHOOL
Making You Success
MY HOPE GROUP

**அய்வா தாதியர் பாடசாலை**

323, கஸ்தூரியா வீதி, யாழ்ப்பாணம்
071 8722350, 071 8722352.

36/1, 38/1 இரண்டாம் குறுக்கு வீதி, வவுனியா
071 8722351, 070 2705367.

---

**மு/வித்தியானந்தக் கல்லூரியின்**

# பழைய மாணவர் தினம் – 2018

**பழைய மாணவர்களின்
வருடாந்த ஒன்று கூடல்**

- பாடசாலையின் வளர்ச்சி பற்றிய கலந்துரையாடல்கள்
- பழைய மாணவர்களின் கலை, விளையாட்டு நிகழ்வுகள்

**ஜூலை-28 (28.07.2018) காலை 9.00 மணிமுதல்.**

பழைய மாணவர்கள் அனைவரையும்
அன்புடன் அழைக்கின்றோம்.

- பழைய மாணவர் சங்கம் -

(Sup/1528)(10)

---

திருமண பட்டுப் புடைவைகளின் பூங்காவனம்

# இந்தியன் செலக்ஷனின் ஆடித் தள்ளுபடி



**15000/= பெறுமதியான பட்டுச் சாறி
ஒன்றிற்கு 5000/= பெறுமதியான
சாறி ஒன்று இலவசம்**

| | | |
|---|---|---|
| கொட்டன் TOP | - ~~1800/=~~ | 1000/= |
| டெனிம் TOP | - ~~1800/=~~ | 1200/= |
| கொட்டன் சல்வார் | - ~~4000/=~~ | 2000/= |
| நெற் சல்வார் பெரியது | - ~~5000/=~~ | 2000/= |
| நெற் சல்வார் சிறியது | - ~~3500/=~~ | 1000/= |

**10%-50%
வரை
விலைக்கழிவு**

மொடர்ன் Tops, கொட்டன் Tops, டெனிம் Top,
மொடர்ன் சல்வார்கள், மொடர்ன் சூட்ஸ்,
பார்ட்டி புரொக்ஸ் மற்றும்
சிறுவர்களுக்கான ஆடைத் தெரிவுகள்



ஞாயிற்றுக்கிழமைகளிலும் திறந்திருக்கும்

**இடம் : யாழ் வீரசிங்கம் மண்டபம்**
**காலம் : 16.07.2018 - 01.08.2018**

## இந்தியன் செலக்ஷன்

அனைவரையும்
அன்புடன்
அழைக்கின்றோம்

## ஆத்மசாந்திப் பிரார்த்தனை
## திருமதி கெங்காதேவி சுப்பிரமணியம்
(சங்கானை, லண்டன்)



எமது ஆலயத்தின் நீண்டகால அடியாரும், தொண்டருமாகிய **திருமதி கெங்காதேவி சுப்பிரமணியம்** அவர்கள் 13.07.2018 வெள்ளிக்கிழமை லண்டனில் இறைபதம் அடைந்ததைக் கேள்வியுற்று அதிர்ச்சியும், மனவேதனையும் அடைந்துள்ளோம். ஆலயத்தின் புனர்நிர்மாணப் பணிகளை மேற்கொள்ள அன்னாரும், அவரின் குடும்பத்தினரும் பல்வேறு பங்களிப்பைச் செய்தமைக்கு எமது நன்றிகளைத் தெரிவிப்பதோடு குடும்பத் தலைவியை இழந்து வேதனையுறும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம். அன்னாரின் ஆத்மசாந்திக்காக முருகமூர்த்தியைப் பிரார்த்திக்கின்றோம்.

செல்வநாயகம் குடும்பம்

**077 208 1168** இலுப்பைத்தாழ்வு முருகமூர்த்தி ஆலய தர்மகர்த்தா, சங்கானை.

(CS/18351)(11.17)

---

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில் 17 . 09 . 1950



இறைவன் அடியில் 31 . 07 . 2017

### அமரர் வேலுப்பிள்ளை விசுவலிங்கம்
திதி: அட்டமி

அன்பின் திருவுருவாய் பாசத்தின் உறைவிடமாய்
எமக்கு நல்ல வழிகாட்டிய குலதெய்வமே!
நீங்கள் எம்மைவிட்டுப் பிரிந்து
ஓராண்டு சென்றாலும் உங்கள் நினைவுகள்
எங்கள் மூச்சோடு என்றும் கலந்திருக்கும்.....

மீசாலை வடக்கு,
கொடிகாமம். (cs.13706 -13)

நீங்கா நினைவுகளுடன்
குடும்பத்தினர்

---

## நல்லூர் பிரதேச சபை
## வீதி விளக்கு பொருத்துதல் மற்றும் பழுது பார்த்தல்

சபையானது வீதிவிளக்குப் பொருத்துதல் மற்றும் பழுதுபார்த்தலுக்கான சேவை வழங்குநர்களிடமிருந்து விண்ணப்பங்களை ஏற்கவுள்ளது.

விண்ணப்பங்கள் சபையின் தலைமை அலுவலகத்தின் **நிதிக் கிளையில் ரூபா 1000.00 (வரிநீங்கலாக)** செலுத்திப் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும்.

விண்ணப்பபடிவங்கள் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் **"வீதி விளக்கு பொருத்துதல் மற்றும் பழுது பார்த்தல் சேவை வழங்குநர்களைப் பதிவு செய்தல் 2018"** எனக் குறிப்பிட்டு பதிவுத்தபால் மூலம் **"தலைவர், தலைமை அலுவலகம், நல்லூர் பிரதேச சபை. இல 14/05 கருவப்புலம் வீதி, கொக்குவில்** எனும் முகவரிக்கு அனுப்பிவைக்கப்படல் வேண்டும். விண்ணப்பப் படிவங்கள் 31.07.2018 ஆம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

மேலதிக விவரங்களுக்கு **021 222 2700** எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும்

**தா.தியாகமூர்த்தி,**
**தவிசாளர்**
**நல்லூர் பிரதேச சபை** (IN/6094)(11) **20.07.2018**

---

## 17 ஆம் ஆண்டு நினைவஞ்சலி
### அமரர் J.S.சத்தியநாதன்
(ஓய்வுபெற்ற கணக்குப் பதிவாளர்,
பனை அபிவிருத்திச் சபை)



எங்கள் அப்பப்பாவுக்கு
எழுதுகின்றோம் மடல் ஒன்று

பதினேழாம் ஆண்டின் நினைவு நிறைவாய்
எங்கே இருக்கின்றீர்கள்? நல்ல சுகமா?
அப்பாவையும், அப்பம்மாவையும்
பார்க்க எப்போது வருவீர்கள்?
பதினேழு ஆண்டுகளாய் - எங்கள் அப்பாவை
பரிதவிக்கவிட்டு எங்கு சென்றீர்கள்?
பாவம் எங்கள் அப்பா! இயேசப்பா!
சத்திய தரிசனத்தோடு மீண்டும்
எங்கள் அப்பப்பாவை நாம் காணவேண்டும்.

பேரப்பிள்ளைகள் -
மிருதுளன், மிருணாளன்
மடத்துக்கடவை, அல்வாய் மேற்கு,
அல்வாய். 077 662 4408 (CS/18368)(11)

தோற்றம் 29.05.1944 மறைவு 20.07.2001

---

### வேலையாள்கள் தேவை
வெல்டிங் வேலைக்கு ஆள்கள் தேவை.
**077 907 8839** (CS/18358)(11)

---

MAJESTIC CINEPLEX




Jaffna Silver
10.15AM | 1.15PM | 4.15PM | 7.15PM




Jaffna Platinum
10.30AM | 1.30PM | 4.30PM | 7.30PM




Jaffna Bronze
10.30AM | 4.30PM




Jaffna Bronze
1.30PM | 7.30PM

மேலதிக விபரங்கள் தொடர்பாக அழையுங்கள்
021 2227712

CEYLON THEATRES
Since 1928
www.ceylontheatres.lk
MajesticCineplexSL

---

## ஐந்தாம் ஆண்டு நினைவினில்...


மண்ணில் 14 . 11 . 1932



விண்ணில் 13 . 08 . 2013

### அமரர் கந்தையா அம்பலவாணர்
(Rtd.Staff Sergant - Sri Lankan Army Ordnance Corp.
Late Chairman - Mercantile Security Services Pvt. Ltd.)

வாழ்க்கை என்பது வாழ்வதற்கே!
எப்படியும் வாழலாம் என்ற வாக்கியத்தைப்
பொய்யாக்கி
இப்படித்தான் வாழ வேண்டும் என்று
தெரிவித்து வாழ்ந்து காட்டியவரே!
எம்மை வாழவைத்து வடிவு பார்த்தவரே,
வணங்குகின்றோம் உங்கள் பாதங்களை
மேன்மேலும் வளர்ந்திடுவோம் உங்கள்
வழிகாட்டலில் நீங்கள் காட்டிய பாதையில்
என்றும் அலையலையாக
பலவடிவங்களில் தொடர்வோம்....
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.



651/13, நாவலர் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம். (CS/18356)(11)

திரு. திருமதி சுகுமாரன் நிதர்சினி
குடும்பத்தினர்.
077 773 0597

---


## SKT சிறி குமரன் ரெக்ஸ்

ஆடி பிறந்திருச்சி
ஆடித்தள்ளுபடி
ஆரம்பமாயிருச்சு

தட்டாதெரு சந்தியில்
அசத்தலான
ஆடித் தள்ளுபடி!



இந்தியாவிலிருந்து நேரடியாக இறக்குமதி
செய்யப்பட்ட புத்தம் புதிய ஆடைத் தெரிவுகள்
அனைத்தும் தள்ளுபடி விலையில்

விசேடமாக Office wear சாறிகள்
மிக குறைந்த விலையில்


இல. 770, கே.கே.எஸ். வீதி,
தட்டாதெருச் சந்தி, யாழ்ப்பாணம்.

(Sup/1525)(10)


---

## 6 ஆம் மாத நினைவலைகள்
### அமரர் கந்தன் தங்கராசா (தங்கம்)

பூவுலகில் 02.06.1947 பேருலகில் 20.01.2018



மாதங்கள் ஆறு ஆயினும்
- அன்பு முகம் மறக்கவில்லை
இன்று உங்கள் நினைவாய் இருந்தே
- நாம் தவிக்கின்றோம்
தூண்டா மணி விளக்காய்
- ஒளி வீசிப் பிரகாசித்தீர்கள்
இன்று வேண்டித் துதித்தே நாம்
- இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

V.C.C. லேன்,
மாவிட்டபுரம் தெற்கு, தெல்லிப்பழை.

பிரிவால் துயருறும்
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

# இறையருள் பேசும் திருப்பாக்களின் முதல்வன்

## நாளை சுந்தரமூர்த்தி நாயனார் குருபூசை தினம்

கந்தையா-கனகசபை



இறைவனின் அருள் கீர்த்தியொடு பல அற்புதங்கள் புரிந்து உலகில் சைவ சமயத்தை நிலைபெறச் செய்த சமய குரவர்கள் நால்வருள் சுந்தரமூர்த்தி நாயனார் சிறப்புக்குரியவராக திகழ்கிறார். இவருடைய குருபூசைத் தினம் நாளை சனிக்கிழமை ஆடிச்சுவாதி நன்னாளில் நாடெங்கிலும் பக்தி பூர்வமாக கடைப்பிடிக்கப்படுகின்றது.

**அவதாரம்**

திருமுனைப்பாடி நாட்டிலே சடையனாருக்கும் இசைஞானியாருக்கும் மகனாக ஆலாலசுந்தரர் அவதரித்தார். கைலையில் சிவபெருமானை பக்தியால் ஆராதனை செய்து திருத்தொண்டாற்றிய அடியவராக தனித்துவம் பெறுகிறார். சிவபெருமானிடம் மிகுந்த அன்பை கொண்டிருந்தார். கோயில்களுக்குச் சென்று அவன் தாள் வணங்கிப் பணிந்து தேவார திருமுறைகளை பாடினார்.

**அற்புதம்**

இவ்வாறு பல கோயில்களுக்குச் சென்று இறைவனை மெய்யன்பால் நினைந்துருகி வழிபாடு இயற்றுவதை அன்றாட பணியாக ஆற்றிவந்தார். இவ்வாறு ஒரு நாள் ஆலய வழிபாடுகளை முடித்துவிட்டு வரும் வழியில் ஒரு வீட்டில் அழுகை ஒலி கேட்டதை அவதானித்தார். அதே நேரத்தில் எதிர்வீட்டில் மங்கல ஒலி கேட்பதையும் உணர்ந்தார். அவ்விடத்தில் நின்றபடியே சிந்தனைவயப்பட்டார்.

பின்பு அழுகைக்குரல் கேட்ட வீட்டுக்குச் சென்றார். அங்கு கூடியிருந்தவர்களை விழித்து. "ஏன் அழுகிறீர்கள்...?" என்று கேட்டார். அப்போது அங்கு தன் மகனின் இழப்பை எண்ணி அழுதுகொண்டிருந்த தாய் பின்வருமாறு பதிலுரைத்தாள். "எனது மகனும் எதிர் வீட்டுப் பிள்ளையும் ஒரே வயதுடையவர்கள். இருவரும் இணைபிரியா நண்பர்கள். நேற்று குளத்திற்குக் குளிக்கப் போனார்கள். எனது மகனை முதலை விழுங்கிவிட்டது. பிள்ளையை இழந்த துயரில் நான் அழுது கொண்டிருக்கிறேன்." எனக் கூறினாள். தாய் கூறியதை கேண்மையுற்ற சுந்தரர் குளக்கரையை நாடிச் சென்றார். அங்கு சிவபெருமானை வேண்டித் தேவாரம் பாடினார். என்ன ஆச்சரியம், சுவாமிகள் தேவாரம் பாடி முடித்ததும் குளத்தினுள் இருந்து முதலை வெளிப்பட்டு வந்தது. பிள்ளையை வாயிலிருந்து உயிருடன் உமிழ்ந்தது. முதலை உண்ட பிள்ளையை உயிருடன் மீட்டுத்தந்த சுவாமிகளின் அற்புதம் கண்டு அனைவரும் வியந்தனர். அவரை வணங்கி பணிந்தனர்.

**இறையருளின் திருச்சொரூபம்**

சுந்தரமூர்த்தி நாயனார் சிவப் பரம்பொருளோடு தோழமை கொண்டிருந்த மெய்யடியார். அவருடைய துணைவியார் பெயர் பரவையார். இருவரும் சிவ பக்தியில் சிறந்து விளங்கினர். ஒருமுறை பங்குனி உத்தரத் திருநாளைக் கொண்டாட வேண்டும் என்ற விருப்பை பரவையார் கொண்டிருந்தார். அதற்கு அதிகளாவான பொன், பொருள் தேவைப்பட்டது. தன்னிடம் பொன் பொருள்கள் இல்லாதமை குறித்து சுந்தரர் மன வருத்தம் கொண்டார். திருப்புகலூர் கோயிலுக்குச் சென்று அங்குள்ள இறைவனை வணங்கி தனது மனக்குறையை அவன்பால் ஒப்புவித்தார். பின்பு சிறிது நேரம் களைப்பாற எண்ணி அங்குள்ள மடத்தை நாடிச் சென்றார். அங்கிருந்த செங்கட்டிகளை தலையணையாக வைத்துக் கொண்டு சிறிது நேரம் உறங்கினார். உறக்கம் கலைந்து எழுந்தார். என்ன ஆச்சரியம்! தலையணையாக வைத்த செங்கட்டிகள் அத்தனையும் பொன்கட்டிகளாக மாற்றங்கண்டிருந்தன. இது கண்டு அளவிலாத ஆனந்தம் கொண்டார். இறைவனின் கருணையை நினைந்து வணங்கினார். பொன் கட்டிகளை எடுத்துச் சென்று பரவையாரிடம் கொடுத்தார். பங்குனி உத்தரத்திருநாளை வெகு சிறப்பாக கொண்டாடினார். இவ்வாறு இறை அருளின் சித்தம் கொண்டு சுந்தரர் பல அற்புதங்கள் புரிந்தார்.

**நாமகரணம்**

இவர் 'நம்பியாரூரர், ஆலால சுந்தரர், சிங்கடிப்பன், வனப்பகையப்பன், தம்பிரான் தோழர், வன்தொண்டன்' போன்ற நாமகரணங்கள் கொண்டு அழைக்கப்பட்டார்.

**முத்தி நிலை**

கி.பி 8ஆம் நூற்றாண்டு காலப்பகுதியில் குறிப்பாக, நரசிங்க முனையனார் மன்னன் ஆட்சிக் காலத்தில் வாழ்ந்தார்.

திருவெண்ணை நல்லூரிலே இறையருள் கைகூட அருள்பெற்று முதன் முதலில் 'பித்தா பிறை சூடி' எனும் பதிகத்தை பாடினார். இவ்விதம் இறையருளின் அனுக்கிரகத்தோடு இவர் பாடியருளி 3 ஆயிரத்து 800 பதிகங்கள் 7 ஆம் திருமுறையில் தொகுக்கப்பட்டுள்ளன. யோக நெறியைக் கடைப்பிடித்து சகமார்க்க நெறியைப் பின்பற்றி காய் நின்ற நிலை (பருவம்) அடைந்து 18 வருடங்கள் வாழ்ந்தார். இறுதியாக "தலைக்குத் தலை மாலை" எனும் பதிகத்தைப் பாடி ஆடிச்சுவாதி திருநாளில் பதமுத்தி அடைந்தார்.




**இறையருளை நாடுவோம்**

ஆகவே பல அற்புதங்கள் புரிந்து உலகில் சைவசமயத்தை நிலை பெறச் செய்த சுந்தரமூர்த்தி நாயனார் குருபூசைத் தினத்தை பக்தி பூர்வமாக கடைப்பிடிப்போம். சைவசமயிகளாக அவர் அருளிச் செய்த திருப்பதி கங்களை பாடிப் பரவி இறையருளுக்கு பாத்திரமாவோம்.

**பித்தா பிறை சூடி பெருமானே அருளாளாய்
எத்தால் மறவாதே நினைக்கின்றேன் மனத்துன்னை
வைத்தாய் பெண்ணை தென்பால் வெண்ணெய் நல்லூரருட்துறையுள்
அத்தாவுனக்காளாயினி அல்லேன் எனலாமே**

---

**நாளை**

**21.07.2018**

சனிக்கிழமை

**ஆடி 05**

திதி: நவமி மாலை 06.34 வரை
நட்சத்திரம்: சுவாதி பி.ப. 02.17 வரை
சுபநேரம்: 03.01 – 04.31 வரை
ராகுகாலம்: 09.01– 10.31 வரை


செங்கடகல பினான்ஸ்

50 வருட இணைப்பு

செங்கடகல பினான்ஸ்
உங்கள் சேமிப்பிற்கு உயர் வட்டி வீதத்தையும் VISA டெபிட் கார்ட்டினையும் வழங்குகின்றது.

சேமிப்புகளுக்கு
வ.வ. 8.0% வரை

*சிரேஷ்ட பிரஜைகளின் சேமிப்புக்களுக்கு 0.5 % மேலதிக வட்டி




5 வருட நிலையான வைப்புக்களுக்கு
வ.வ. 14.50% வரை

( A.E.R. 11.52% )

*சிரேஷ்ட பிரஜைகளின் நிலையான வைப்புகளுக்கு 1% மேலதிக வட்டி

நிலையான வைப்புத் திட்டங்களுக்கான தற்போதைய வட்டி வீதங்கள்

| காலம் | மாதாந்தம் | A.E.R. | முதிர்வுறும் போது | A.E.R. |
|---|---|---|---|---|
| 1 மாதம் | | | 8.50% | 8.84% |
| 3 மாதங்கள் | | | 10.50% | 10.92% |
| 6 மாதங்கள் | | | 10.75% | 11.04% |
| 1 வருடம் | 11.00% | 11.57% | 11.50% | 11.50% |
| 15 மாதங்கள் | 11.00% | 11.57% | 12.00% | 11.83% |
| 18 மாதங்கள் | 11.25% | 11.85% | 12.25% | 11.90% |
| 2 வருடங்கள் | 11.50% | 12.13% | 12.50% | 11.80% |
| 3 வருடங்கள் | 11.75% | 12.40% | 12.75% | 11.40% |
| 4 வருடங்கள் | 11.75% | 12.40% | 14.00% | 11.76% |
| 5 வருடங்கள் | 11.75% | 12.40% | 14.50% | 11.52% |

*நிபந்தனைகளுக்குட்பட்டது.

விபரங்களை அறிய: ஈஷா - 077 3 090 370 சுலந்தி - 077 0 129 366 மனிஷா - 077 2 249 984

FITCH RATINGS SL BBB+(lka)

செங்கடகல பினான்ஸ்

கூட்டிணைக்கப்பட்ட ஆண்டு 29.12.1968.
2011 ஆம் ஆண்டு 42 ஆம் இலக்க நிதித்தொழில் சட்டத்தின் கீழ் இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையினால் உரிமம் அளிக்கப்பட்டது. நிறுவனப் பதிவு இல. PB 238 PQ
பதிவுபெற்ற அலுவலகம்: இல.267, 2வது மாடி, காலி வீதி, கொழும்பு 03.
தொலைபேசி: (011) 2 301 301 தொலைநகல்: (011) 2 375 780 மின்னஞ்சல்: senk@senfin.com Web: www.senfin.com

# இராவணன் வெட்டு



தமிழர் பழம்பெரு நகர்களில் திருகோணமலை தனித்துவம் மிக்கதாகும். வரலாற்று ரீதியாகவும், இன்றைய அரசியல், பொருளாதார கேந்திர மையமாகவும் திகழும் திருகோணமலையின் முக்கியத்துவம், உலக நாடுகளின் கழுகுப் பார்வைகளுக்கும் உள்ளாகி வருகின்றது. அந்த வகையில், இவ்வாறு உலகளாவிய ரீதியிலும் தமிழர்களின் வரலாற்றிம் தனித்துவம் மிக்கதான இந்தப் பகுதியில் உள்ள செல்வாக்கு மிக்க இடங்களில் 'இராவணன் வெட்டு' என்று இலக்கிய ரீதியாகச் சுட்டப்படும் பகுதியும் குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.
இராவணன் தென் இலங்கையை ஆட்சிசெய்த காலத்தில் திருக்கோணேஸ்வரத்தின் மீது மிகுந்த பக்தி கொண்டிருந்தான் என்றும், இவன் தனது தாயாருக்காக சிவலிங்கம் ஒன்றைப் பெற விரும்பி பெயர்த்த மலையே திருகோணமலை என்றும், யாழ்ப்பாண மன்னர் காலப் பகுதியில் எழுந்த தட்சண கைலாச புராணம் கூறுகின்றது. இந்தப் புராணம் ஈழத்தின் தொன்மையான புராணங்களில் ஒன்றாகும்.
இராவணன் கிறிஸ்துவுக்கு முன்னரான காலகட்டத்தில் வாழ்ந்தவன் என்றும் அவனது ஆட்சி அதிகாரம் முடிவுக்கு வந்தபின்னர், கடல்கோள் நிகழ்ந்திருக்க வேண்டும் என்றும் 'ராஜாவாளிய' என்ற புத்த சமய வரலாற்று நூல் குறிப்பிட்டுள்ளமை இங்கு நோக்கத் தக்கதாகும்.
இராவணனால் ஏற்படுத்தப்பட்டதாகக் கருதப்படும் இந்தப்பிளவின் இடையே கல்லை ஓங்கி வீசும்போது நன்மை விழையும் என்ற நம்பிக்கையும் உண்டு.

# யார் குற்றவாளி

ஒருநாள் கடைவீதியில் ஒரு மீன்வியாபாரியும், ஒரு எண்ணெய் வியாபாரியும் பணப்பிரச்சினை தொடர்பாக வாக்குவாதம் செய்து கொண்டிருந்தனர். அப்போது அவ்விடத்துக்கு வந்த வழிப்போக்கன் ஒருவன், அவர்கள் இருவரிடமும் நடத்தவற்றைக் கேட்டான். "நீங்கள் இருவரும் சண்டை போட்டுக் கொள்ளாதீர்கள். பீர்பாலிடம் செல்லுங்கள். அவர் உங்களுக்கு நல்ல தீர்ப்புச் சொல்லுவார்" என்றான்.
வழிப்போக்கன் சொன்னபடி பீர்பாலைப் பார்க்க மீன் வியாபாரியும் எண்ணெய் வியாபாரியும் சென்றனர். பீர்பாலைக் கண்டதும் எண்ணெய் வியாபாரி அவர் காலில் விழுந்தான். "ஐயா! என் பணப்பையை எடுத்துக்கொண்டு இவர் தர மாட்டேன் என்கிறார். நீங்கள் தான் வாங்கித் தரவேண்டும்" என்றான்.



மீன் வியாபாரி "ஐயா! எண்ணெய்க்காரன் சொல்வதை நம்பாதீர்கள். பணம் என்னுடையது" என்றான். பீர்பால் "என்ன நடந்தது என்பதை முழுமையாகச் சொல்லுங்கள்" என்றார். மீன் வியாபாரி முதலில் சொன்னான். "ஐயா! இவன் எண்ணெய் வேண்டுமா? என்று கேட்டு என் கடைக்கு வந்தான். நான் எண்ணெய் வாங்குவதற்காக பாத்திரம் எடுக்க கடைக்குள் போனேன். அதற்குள் இவன் என் பணத்தை எடுப்பதைப் பார்த்தேன். உடனே பாய்ந்து வந்து அவனிடமிருந்த பணத்தைப் பறித்தேன். இப்போது அந்தப் பணம் தன்னுடையது என்று இங்கு நாடகமாடுகிறான்" என்றான்.
ஐயோ! இவன் சொல்வதை நம்பாதீர்கள். இவன்தான் நாடகமாடுகிறான்"என்றான் எண்ணெய் வியாபாரி.
இந்தப்பிரச்சினையை எப்படித் தீர்ப்பது என்று யோசித்தார் பீர்பால். சிறிது நேரத்தின் பின் ஒரு முடிவுக்கு வந்தார். ஒரு வீரனை அழைத்து பாத்திரத்தில் தண்ணீர் கொண்டு வரச் சொன்னார்.
பீர்பாலில் அருகே வீரன் தண்ணீர்ப் பாத்திரத்தை வைத்தான். "அந்தப் பணப்பையில் உள்ள நாயணங்களைத் தண்ணீருக்குள் கொட்டு"என்று பீர்பால் கட்டளையிட்டார். இப்போது பாத்திரத்தில் உள்ள தண்ணீரின் மேற்பரப்பில்எண்ணெய் மிதந்தது.
"பணப்பை எண்ணெய்க் காரனுக்கு சொந்தமானது, நீ தான் திருடன்"என்று மீன் வியாபாரியைப் பார்த்துச் சொன்னார் பீர்பால்.
எண்ணெய் வியாபாரி நன்றியுடன் பீர்பாலை வணங்கினான்.
பீர்பாலிடம் மீன் வியாபாரி மன்னிப்புக் கேட்டான். பிர்பால் அவனைப் பார்த்து ".எவருடைய பணத்துக்கும் ஆசைப்படாதே. உண்மை பேசி உத்தமனாய் வாழ்" என்று அறிவுரை கூறி அனுப்பி வைத்தார்.

# மரங்கள் வளர்ப்போம்




மோகனும் அமீரும் நண்பர்கள். அவர்கள் இருவரும் ஒரு மரத்தின் கீழ் இருந்து உரையாடுகின்றனர். சற்றுத் தூரத்தில் தென்னை மரத்திலிருந்து 'தொப்'என்று ஒரு தேங்காய் விழுகிறது.

அமீர் : மோகன், அது என்ன சத்தம்?
மோகன் : அமீர், அது தேங்காய் விழுந்த சத்தம். அதோ அங்கே தெரியும் தென்னை மரங்களைப் பார். தேங்காய்ப் பழுத்து விட்டன.
அமீர் : பலா மரங்களைப் பார், பலாக்காய்கள் நிறையத் தொங்குகின்றன.
மோகன் : இந்தப் பக்கம் திரும்பிப்பார். பலவகை மா மரங்கள் பூவும் பிஞ்சும் காயுமாகக் காட்சி தருகின்றன.
அமீர் : மரங்களுக்கும் கோடையில் நிறையத் தண்ணீர் ஊற்ற வேண்டுமே.
மோகன் : அமீர் எங்கள் வீட்டில் ஒரு நாளும் தண்ணீருக்குப் பஞ்சம் இல்லை. அதோ, கமுகுகள் உள்ள இடத்தைப் பார்
அமீர் : ஆமாம் அங்கே என்ன?
மோகன் : அங்கே தான் வற்றாத கிணறு உண்டு. கிணற்றைச் சுற்றித்தான் கமுகு மரங்கள் உள்ளன.
அமீர் : கமுக மரங்களால் என்ன பிரயோசனம் மோகன்.
மோகன் : குலை குலையாகப் பாக்குத் தருபவை அவை.
அமீர் : வேறு என்ன மரங்கள் உங்கள் காணியில் உள்ளன.
மோகன் : கிணற்றுக்குக் கிழக்குப் பக்கம் பார். வாழைத்தோட்டம் உள்ளது.
அமீர் : மோகன் இப்போது எனக்கு ஓர் உண்மை புரிகிறது. அது என்ன தெரியுமா? இத்தனை மரங்களும் நிற்பதால் உங்களுக்கு நிறைய வருமானம் கிடைக்கும்.
மோகன் : அமீர், அது மட்டுமல்ல, பழங்களையும் நாம் சாப்பிடலாம். அவை எம் உடல் வளர்ச்சிக்கும் உதவும்.
அமீர் : மோகன், எங்கள் காணியிலும் பயன்தரும் மரங்களை உண்டாக்க வேண்டும்.
மோகன் : நிச்சயமாக அமீர், நான் மட்டுமல்ல எங்கள் குடும்பத்தவர் எல்லோருமே உதவுவோம். எங்கள் தோட்டத்தில் நிறைய மரக்கன்றுகள் உள்ளன. உங்கள் தோட்டத்தை முதலில் நீ பண்படுத்து பின்னர் நான் அங்கு நாட்ட மரக்கன்றுகள் தருகிறேன்.
அமீர் : மிகவும் நன்றி மோகன்.

# வர்ணம் தீட்டுவோம்



# கஸ்தூரியின் கதை



தமிழர்களின் பாரம்பரிய வைத்தியமான சித்த வைத்தியத்தில் கஸ்தூரிக்கு முக்கிய இடமுண்டு. நல்ல வாசனை தரும் இந்த கஸ்தூரியைத் தருவது ஒரு வகை மான். கஸ்தூரி மான் என்றே அதற்குப் பெயர். நாம் காணும் மான்களை விட கஸ்தூரி மான் சற்று விச்சியாசமானது. மானினத்திலேயே மிகவும் சிறியது கஸ்தூரிமான். இதன் கால்கள் நீண்டவை. காதுகள் பெரியவை. வால் மிகவும் குறுகியது. முன்னங்கால்களை விட பின்னங்கால்கள் அதிக நீளமானவை. இமயம் தொடக்கம் சைபீரியா வரையுள்ள உயர்ந்த மலைப் பிரதேசங்களில் இவை வாழுகின்றன. ஆண் மான்களின் வயிற்றின் அடிப்பக்கத்தில் மேல் தோலுக்கு அடியில் தனிப்பட்ட சுரப்பி ஒன்றுண்டு. மூன்று வயதுடைய மான்களில் ஈரம் கலந்த மஞ்சள் நிறமான ஒரு பொருள் இந்தச் சுரப்பியில் உண்டாகிறது. இறந்த மானின் வயிற்றைக் கிழித்து இதை எடுக்க வேண்டும் வெளியே எடுத்தவுடன் காற்றில் பட்டு இது இறுகி நல்ல மணத்தைப் பரப்புகின்றது. ஒரு மானிலிருந்து ஓர் அவுன்ஸ் மட்டுமே எடுக்க முடியும்.

## கார் விற்பனைக்கு

Toyata Premio - NP CAA XXXX வகை கார் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு - 077 757 4564

(CS 18372/15/18)

## விற்பனைக்கு

உணவகத்திற்கான 15 கிலோ மா குழைக்கும் இயந்திரம் 8' நீளமும், 4' அகலமும் உள்ள அலுமினிய மேசை விற்பனைக்குண்டு.

077 549 0937

## G.C.E (A/L) 2018

முன்மாதிரி வினாத்தாள்கள்

Physics, Chemistry, Biology, Com.Maths, Commerce

Royal, விசாகா, கண்டி

வினாத்தாள்கள் விடைகளுடன்

வடமராட்சி, தென்மராட்சி, வலிகாமம், தீவகம்

வீட்டுக்கு வீடு சேவை. அழையுங்கள்...

077 773 0840 (சிங்கம் மாஸ்ரர்)

(CS/18355)(11)

## வேலையாள்கள் தேவை

பிரபல வர்த்தக நிலையத்திற்கு கொழும்பில் தங்கி நின்று வேலை செய்யக்கூடிய ஆண்கள் தேவை. உணவு, தங்குமிடம் இலவசம்

தொடர்பு - 077 3866 250

## உடனடி வேலைவாய்ப்பு

யாழ்.நகரில் இயங்கும் பிரபல ஹொட்டல் மற்றும் வியாபார நிறுவனத்துக்கு உணவு, தங்குமிட வசதி உட்பட கவர்ச்சிகரமான சம்பளம் மற்றும் மேலதிக வேலைக் கொடுப்பனவு என்பனவற்றுடன்

- அனுபவம் வாய்ந்த பிரதம சமையலாளர் (ஆண்/ பெண்)
- Chinese, இந்திய, யாழ். பாரம்பரிய உணவு தயாரிப்பாளர்
- களஞ்சியக் காப்பாளர்
- அறை பராமரிப்பாளர்
- உணவு பரிமாறுபவர்
- காவலாளி (ஆண்)

(தகைமை - G.C.E. O/L) - வயது 40 இற்குள்.

அனைத்துப் பதவிகளுக்கும் முன்னனுபவம். நற்பண்பு மற்றும் சிங்களம், ஆங்கிலம் மேலதிக தகைமையாகக் கருதப்படும்.

நேர்முகத் தேர்வு 22.07.2018 ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணி தொடக்கம் மாலை 2.30 மணிவரை

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க காரியாலயம், 155 ஆம் கட்டை, A9 வீதி, கிளிநொச்சி.

விவரங்களுக்கு - 070 336 0996

(காலை 8 மணி தொடக்கம் இரவு 10 மணிவரை)

(CS/18341)(11)


## விழிநீர் அஞ்சலி



யா/ புனித சாள்ஸ் மகா வித்தியால அதிபர்

திருமதி J. கிறிஸ்ரபெல்

அவர்களின் மைத்துனர்

**பிரான்சிஸ் பவுலப்பு இயஸ்ரின் றொசைஸ்**

04.07.2018 அன்று பிரான்ஸில் காலமானார். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலைச் சமூகம்

**யா/ புனித சாள்ஸ் ம.வி.**

(cs.13696) (13.17)


உதயன் விளம்பர தொடர்புகளுக்கு

advt@uthayan.com, 021 493 1111


## வலிகாமம் வடக்கு பிரதேச சபை காங்கேசன்துறை (கொல்லங்கலட்டி)

கூத்தன் சீமா சந்தைக்கோழிக்கடையினை 01.08.2018 தொடக்கம் 31.12.2018 வரை குத்தகைக்கு / வாடகைக்கு விடுவதற்கான

### கேள்வி அறிவித்தல்

கேள்விப் பத்திரம் வழங்கும் கடைசித் திகதி : 26.07.2018 வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணிவரை
கேள்விப் பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி : 26.07.2018 வியாழக்கிழமை பி.ப 2.00 மணி வரை
கேள்விகள் திறக்கப்படும் திகதி : 26.07.2018 வியாழக்கிழமை பி.ப 3.00மணி

| இல. | குத்தகை விபரம் | மாத வாடகை | ஆகக்குறைந்த கேள்வித்தொகை | கேள்விப் பிணைப்பணம் (மீளளிக்கக் கூடியது) | கேள்விப் பத்திரப்பணம் (மீளளிக்க முடியாதது) |
|---|---|---|---|---|---|
| | தெல்லிப்பழை உப அலுவலகம் | | | | |
| 01 | கூத்தன்சீமா சந்தை கோழிக்கடை | 1, 050 .00 | 18, 500 .00 | 2, 000 .00 | 1, 000 .00 |

குறிப்பு : மேலதிக விபரங்களை தலைமை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

திரு.சோ.சுகிர்தன்
தவிசாளர் வ்லிகாமம் வடக்கு பிரதேச சபை
காங்கேசன்துறை (கொல்லங்கலட்டி).

20.07.2018

## வலிகாமம் வடக்கு பிரதேசசபை - காங்கேசன்துறை
## கடைகள் வாடகைக்கு வழங்குவதற்கான மீள்கேள்வி அறிவித்தல் - 2018

வலிகாமம் வடக்கு பிரதேச சபைக்கு சொந்தமான கீழ் குறிப்பிடப்படும் அட்டவணையில் விபரிக்கப்படும் கடைகளினை யாழ்ப்பாண மாவட்டத்தை நிரந்தர வதிவிடமாகக் கொண்டவர்களுக்கு பின்வரும் நிபந்தனைகளுக்கமைய மாதாந்த வாடகைக்கு வழங்குவதற்கு கேள்விகள் கோரப்படுகின்றன.

கேள்விப்பத்திரம் வழங்கப்படும் திகதி :- 20.07.2018 தொடக்கம் 03.08.2018 பிற்பகல் 12.00 மணி வரை
(அலுவலக நாட்களில் மு.ப 8.30 தொடக்கம் பி.ப 3.00 மணி வரை பெற்றுக்கொள்ளலாம்)
கேள்விப் பத்திரம் ஏற்கப்படும் இறுதித்திகதி:- 03.08.2018 வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.00 மணி வரை
கேள்விப் பத்திரம் திறந்து பரிசீலிக்கப்படும் திகதி:- 03.08.2018 வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.00 மணி

கேள்விகள் இரு பிரதிகளில் தயாரித்து அரக்கு முத்திரையிட்டு மூலப்பிரதியினை தவிசாளர், வலிகாமம் வடக்கு பிரதேச சபை, காங்கேசன்துறை எனும் முகவரிக்கு 03.08.2018 ஆம் திகதி பிற்பகல் 1.00 மணிக்கு முன்னதாக கிடைக்க கூடியதாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும் அல்லது தலைமையலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப் பெட்டியில் இடப்படல் வேண்டும். மறு பிரதியினை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு குறித்த திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கப்படல் வேண்டும். தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக இடப்படல் வேண்டும்.

01. இக் கேள்வியானது யாழ்மாவட்டத்தை நிரந்தர வதிவிடமாக கொண்ட கேள்வியாளர்களுக்கு மட்டும் வழங்குவதற்கு உரித்துடையதாக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. கேள்வியாளர்கள் கேள்வியுடன் யாழ் மாவட்டத்தில் இறுதியாக 05 வருடங்கள் வசித்தமையினை உறுதிப்படுத்தி கிராம உத்தியோகத்தரினால் வழங்கப்பட்டு பிரதேச செயலரினால் மேலொப்பமிடப்பட்ட வதிவிடச்சான்றிதழ் அல்லது வாக்காளர் பட்டியலின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதி சமர்ப்பிக்க வேண்டும். வதிவிடத்தினை உறுதிப்படுத்தும் ஆவணங்கள் சமர்ப்பிக்காத கேள்விகள் நிராகரிக்கப்படும்.

02. சித்தி பெற்ற கேள்விதாரர் கேள்வி திறத்தல் தினத்திலிருந்து 14 நாட்களிற்குள் ஒருங்கிணைந்த கட்டுப்பணத்தின் முழுத்தொகையையும் ஒரே தவணையில் செலுத்த வேண்டும்.

| விபரம் | பரப்பளவு (சதுர அடி) | ஆகக் குறைந்த கேள்வித் தொகை (ஒருங்கிணைந்த கட்டுப்பணம்) | கேள்விப் பத்திர கட்டணம் | கேள்வி வைப்பு | மாதாந்த வாடகை |
|---|---|---|---|---|---|
| கீரிமலை | | | | | |
| கடை இல 4 | 220 சதுர அடி | 500,000.00 | 2000.00 | 50,000.00 | 1,000.00 |
| வீமன்காமம் | | | | | |
| கடை இல1 | 370 சதுர அடி | 750,000.00 | 2000.00 | 75,000.00 | 1,500.00 |
| கடை இல2 | 180 சதுர அடி | 375,000.00 | 2000.00 | 37,500.00 | 1,000.00 |

குறிப்பு : மேலதிக தகவல்களை 18.04.2018 ம் திகதி வெளியான "வலிகாமம் வடக்கு பிரதேசசபை காங்கேசன்துறை கடைகள் வாடகைக்கு வழங்குவதற்கான கேள்வி அறிவித்தல் 2018" இல் பார்வையிடவும்.

சோமசுந்தரம் சுகிர்தன்
வலிகாமம் வடக்கு பிரதேச சபை, காங்கேசன்துறை.

20.07.2018


## வேலையாள்கள் தேவை

அல்பா மிச்சர் கம்பினி, சுப்பர் மாக்கட் என்பவற்றிற்கு

- ☑ காசாளர் (Cashier)
- ☑ விற்பனை உதவியாளர் (Salesman)

இருபாலரும், உடனடியாக தேவை.

தொடர்பு: சதீஸ் - 076 110 5711

ALPA MIXTURE

இல.140, பரமேஸ்வராச் சந்தி, பலாலி வீதி, திருநெல்வேலி.


## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையில் கடமையாற்றும் சிற்றூழியரான சரவணபவான் கஜந்தன் அவர்களின் தந்தை

**சோமநாதன் சரவணபவான்**

அவர்கள் 09.07.2018 காலமானார். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினர் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் கழகம்,
யா/ ஸ்ரீ சோமாஸ்கந்த இந்து ஆரம்ப பாடசாலை,
புத்தூர்.

(IN/7327)(11)

## கண்ணீர் அஞ்சலி



எமது வித்தியாலயத்தின் தமிழ் பாட ஆசிரியர்

**பொன்னையா சிவசுதன்**

அவர்கள் 18.07.2018 புதன்கிழமை காலமானார். அன்னாரின் பிரிவினால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் ஆத்ம சாந்திக்காகவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

பாடசாலைச் சமூகம்,
யா/ நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை வித்தியாலயம்

(cs.13696) (13.17)

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையின் நீண்ட காலமாக ஆங்கில ஆசிரியராக சேவையாற்றிய திருமதி சி. பிரதீபன் அவர்களின் அன்புத்தாயாராகிய


திருமதி

**அன்ரோனியா கிறிஸ்ரி**

அவர்கள் இறைபதமடைந்ததையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு இறைவன் அவர்களது குடும்பத்தினரை மனத் துயரங்களிலிருந்து தேற்ற வேண்டுமென்று பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலைச்சமூகம், யா/ மானிப்பாய் இந்துக்கல்லூரி.

## மரண அறிவித்தல்



**பொன்னுத்துரை இரத்தினசோதி**

திருநெல்வேலி, கேணியடியைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னுத்துரை இரத்தினசோதி கடந்த (18.07.2018) புதன்கிழமை சிவபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை - திலகமணி தம்பதிகளின் பாசமிகு மகனும் காலஞ்சென்றவர்களான புன்னாலைக் கட்டுவன் சுப்பிரமணியம் - தனலட்சுமி தம்பதிகளின் அன்பு மருமகனும் சிவரூபியின் அன்புக் கணவரும் சுஜீபனின் பாசமிகு தந்தையாரும் லில்லிமலர், பூமலர், காலஞ்சென்ற இந்திராணி ஆகியோரின் பாசமிகு சகோதரனும் சிற்பாலன், சிவஞானம், காலஞ்சென்ற நவரத்தினராசா மற்றும் உமாபதி (பிரான்ஸ்), சிவதாசன், சிவசோதி, சிவபாலன் (பிரான்ஸ்), காலஞ்சென்ற சிவகுமார் மற்றும் சிவதாட்ஷாயனி (கனடா), சிவரூபன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் (24.07.2018) செவ்வாய்க்கிழமை பிரான்ஸில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

19, மணற்தரை லேன்,
கந்தர்மடம், யாழ்ப்பாணம். 021 222 9939

தகவல்:
குடும்பத்தினர்.






# மதிப்புறுத்தல் நிகழ்வு

கொமர்ஷல் வங்கியின் நெல்லியடிக் கிளை நிலையத்தில் அருணலு சிறுவர் சேமிப்பு கணக்கை பேணி வருகின்ற.ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களை மதிப்புறுத்தும் நிகழ்வு நெல்லியடி தடங்கன் புளியடி திருமண மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றது.

கொமர்ஷல் வங்கியின் நெல்லியடிக் கிளை முகாமையாளர் திருமதி தபோதினி கஜரூபன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சி.நந்தகுமார் கலந்துகொண்டார்.

பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் ஒவ்வொருவருக்கும் சான்றிதழ், பரிசுப் பொதி என்பன வழங்கி வைக்கப்பட்டன. (ஒ-35)

# மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி வீதம்




# கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண்கள் அதிகரித்துள்ளன

## *மே மாத உற்பத்தியில் 2.0 வீதமாகப் பதிவு*

2017 ஆம் ஆண்டு மே மாத உற்பத்திகளுடன் ஒப்பிடுகையில் நடப்பாண்டின் மே மாத உற்பத்திச் செயலாற்றுகையில் கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண் அளவீடு 2.0 வீதத்தால் அதிகரித்துள்ளது.

இந்த தகவலை தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிவரப் பணிப்பாளர் நாயகம் அமர சதரசிங்க வெளிப்படுத்தியுள்ளார்.

2017 ஆம் ஆண்டு மே மாத மாதாந்த உற்பத்தி கொள்ளளவுடன் ஒப்பிட்டு நேர்க்குமிடத்து, நடப்பாண்டின் மே மாத உற்பத்திக் கொள்ளளவில், 'இரசாயனமும் இரசாயனப் பொருள் உற்பத்தியும்', 'வடிவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகள்', 'கோக் மற்றும் சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலிய உற்பத்திகள்' என்பன முறையே 20.9 வீதம், 19.5 வீதம் மற்றும் 13.5 வீத வளர்ச்சியை காட்டுகின்றன.

நடப்பு வருடத்தின் மே மாத உணவு உற்பத்தி 2.9 வீத அதிகரிப்பை வெளிக்காட்டுகின்றது.

தவிர, நடப்பு வருடத்தின் மே மாதத்தில் கைத்தொழில் துறையில் உள்ளடங்கும், 'மின் உபகரண உற்பத்திகள்', 'இயந்திர உபகரணங்கள்', 'கடதாசி மற்றும் கடதாசி உற்பத்திகள்' என்பன முறையே 24.6 வீதம், 13.9 வீதம் மற்றும் 12.8 வீத வீழ்ச்சியைப் பதிவு செய்துள்ளன.

உற்பத்தி கைத்தொழில்களில் 2017 ஆம் ஆண்டு முதலாம் காலாண்டு உற்பத்திச் செயலாற்றுகையுடன் ஒப்பிடுகையில் நடப்பாண்டின் முதலாம் காலாண்டுக்குரிய உற்பத்திச் செயற்பாடு 1.6 வீத அதிகரிப்பை வெளிக்காட்டியுள்ளது. (ஒ)

கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண் (2015=100)

| மாதம்/ ஆண்டு | சுட்டெண் பெறுமதி |
|---|---|
| மே - 2017 | 103.7 |
| மே - 2018 | 105.7 |
| | |
| வருடத்தின் வருட மாற்றம் (%) -2.0 | |

## பாலியல்...

யாழ்ப்பாணம், ஜூலை 20

பதின்ம வயது மாணவிகள் இருவரை பாலியல் துன்புறுத்தலுக்குள்ளாக்கினார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட ஆசிரியர் நீதிமன்றால் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார்.

பாடசாலையின் அதிபராகக் கடமையாற்றியவர் மோசடிகளில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் பணி நீக்கம் செய்யப்பட்டார். அவரது பணி நீக்கத்துடன் இந்த ஆசிரியரும் தொடர்புபட்டுள்ளார் என்ற காரணத்தைக் காட்டியே இவர் பழி வாங்கப்பட்டுள்ளார்.

சந்தேகநபரான ஆசிரியர் வன்னிப் பகுதியில் நீண்டகாலம் பணியாற்றி அங்குள்ள மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு பங்காற்றியவர். இவர் ஒழுக்கமுடையவர். நிர்வாக ரீதியான பழிவாங்கலுக்குள்ளான இவரை பிணையில் விடுவிக்கவேண்டும் என்று சந்தேகநபரின் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி மன்றில் விண்ணப்பம் செய்தார்.

வழக்கை தாக்கல் செய்த யாழ்ப்பாண சிறுவர் பெண்கள் பிரிவு பொலிஸாரும் சந்தேக நபருக்குப் பிணை வழங்குவதற்கு ஆட்சேபனை தெரிவிக்கவில்லை.

இரு தரப்பு விண்ணப்பங்களையும் ஆராய்ந்த யாழ்ப்பாணம் நீதிமன்ற நீதிவான் சின்னத்துரை சதீஸ்தரன் சந்தேகநபரை ஆள் பிணையில் விடுவித்து உத்தரவிட்டார். யாழ்ப்பாணம் நகரப் பகுதியில் உள்ள பாடசாலை ஒன்றின் ஆசிரியர் ஒருவரே கைது செய்யப்பட்டிருந்தார். தரம் 7 இல் கற்கும் மாணவிகள் இருவருக்குப் பாலியல் தொல்லை கொடுத்தார் என்று குற்றஞ் சாட்டப்பட்டது.

யாழ்ப்பாண மாவட்ட சிறுவர் பாதுகாப்பு பிரிவினரால் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் நேற்றுமுன்தினம் பதிவு செய்யப்பட்ட முறைப்பாட்டுக்கு அமைய விசாரணைகளை மேற்கொண்ட யாழ்ப்பாணம் பொலிஸார் ஆசிரியரைக் கைது செய்தனர்.

ஆசிரியர் விசாரணைகளின் பின்னர் நேற்று நீதிமன்றத்தில் முற்படுத்தப்படுத்தப்பட்டார். விசாரணைகளை மேற்கொண்ட நீதிமன்று சந்தேகநபரைப் பிணையில் செல்ல அனுமதித்தது. (ரு-8,103)

## பொன்னாலை...

யிருந்த கடற்படையினர் நேற்று மாலை 6.30 மணியளவில் அந்த இடத்தை விட்டு வெளியேறினர்.

22 வருடங்களாக அந்த அன்னதான மடத்தைக் கடற்படையினர் ஆக்கிரமித்திருந்த நிலையில் அன்னதான மடத்துக்குச் சொந்தமானவர்கள் விடுத்த வேண்டுகோளை அடுத்து அங்கிருந்து வெளியேறியுள்ளனர் என்று கூறப்பட்டது.

தமிழீழ விடுதலைப் புலிகளிடம் இருந்து 1996 ஆம் ஆண்டு அரச படைகள் யாழ்.குடாநாட்டைக் கைப்பற்றின. பொன்னாலையும் இராணுவத்தினரின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது. ஒரு சில மாதங்களில் பொன்னாலை முற்றுமுழுதாக கடற்படையினரின் பொறுப்பில் ஒப்படைக்கப்பட்டது. அன்று முதல் பொன்னாலை தொடக்கம் கீரிமலை வரையான கரையோரப் பிரதேசம் பொதுமக்களின் நடமாட்டம் அற்ற சூனியப் பிரதேசம் ஆக்கப்பட்டு கடற்படையினர் மட்டுமே ஆதிக்கம் செய்தனர். பொன்னாலையில் மீள்குடியமர அனுமதிக்குமாறு மக்கள் தொடர் போராட்டங்களை நடத்தியபோதிலும் அரசு இதற்கு அனுமதி வழங்கவில்லை. பொன்னாலை பெரும் கடற்படை முகாமாக மாற்றப்பட்டிருந்தது.

பொன்னாலை வரதராஜப் பெருமாள் ஆலயச் சூழலில் இருந்த கட்டடங்கள், மூன்று அன்னதான மடங்கள், தனியாரின் வீடுகள் போன்ற அனைத்திலும் கடற்படையினர் தங்கியிருந்தனர். சில கட்டடங்களில் பெண் கடற்படையினரும் தங்கியிருந்தனர்.

2009 ஆம் ஆண்டு போர் முடிவுக்கு கொண்டுவரப்பட்ட போதிலும் 2012 டிசெம்பர் மாதமே பொன்னாலையில் மக்கள் மீள்குடியமர அனுமதிக்கப்பட்டனர்.

அப்போது ஏனைய கட்டிடங்களில் இருந்த கடற்படையினர் வெளியேறிய போதும், இரு அன்னதான மடங்களில் மட்டும் தங்கியிருந்தனர். சில ஆண்டுகளில் பின்னர் ஒரு அன்னதான மடமும் விடுவிக்கப்பட்டது. நேற்று மற்றைய அன்னதான மடத்தையும் விட்டு கடற்படையினர் வெளியேறியுள்ளனர்.

தற்போது, பொன்னாலைச் சந்தியிலும் பொன்னாலை குடி தண்ணீர் வழங்கல் திட்ட வளாகத்திலும் இரு இடங்களில் மாத்திரம் கடற்படையினர் நிரந்தரக் காவலரண்களை அமைத்துத் தங்கியுள்ளனர். (ரு-8)

CSE COLOMBO STOCK EXCHANGE

கொழும்பு பங்குப்பரிவர்த்தனை - 147-2/3, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம் - 0212221455

19/7/2018
www.cse.lk

பங்குச்சந்தைத் தகவல்கள்

| சுட்டிகள் | | இன்று | நேற்று |
|---|---|---|---|
| ASPI | 22.33 | 6,183.02 | 6,160.69 |
| S&P SL20 | 29.60 | 3,389.76 | 3,360.16 |
| வியாபாரப்புரள்வு | | 634,689,790 | 543,816,510 |
| உள்நாடு:- கொள்வனவு | | 251,734,912 | 289,608,704 |
| விற்பனை | | 325,473,984 | 255,543,360 |
| வெளிநாடு-கொள்வனவு | | 382,954,880 | 254,207,824 |
| விற்பனை | | 309,215,808 | 288,273,184 |

| கம்பனி அதிகூடிய பங்குப்பரிமாற்றம் | குறியீடு | இறுதிவிலை | பங்குகள் | புரள்வு (Rs) |
|---|---|---|---|---|
| மெல்ஸ்ரா க்ரோப் | MELS.N | 50 | 8,320,786 | 208,335,400 |
| ஜோன் கீல்ஸ் கோல்டிங்ஸ் | JKH.N | 149.5 | 2,314,468 | 191,213,133 |
| சம்பத் வங்கி | SAMP.N | 301.00 | 124,274 | 24,261,646 |
| செலான் வங்கி | SEYB.N | 80.50 | 200 | 21,208,050 |
| சிலோன் டொபாக்கோ | CTC.N | 1,150.00 | 21,441 | 18,910,774 |
| டி எப் சி சி வங்கி | DFCC.N | 103.50 | 330,302 | 17,152,106 |
| அமானா வங்கி | ABL.N | 3.40 | 5,003,102 | 16,506,584 |
| கொமர்சியல் வங்கி | COMB.N | 129 | 194,551 | 13,288,513 |
| நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி | NTB.N | 92 | 236,431 | 10,921,932 |
| நெஸ்லே லங்கா | NEST.N | 1745 | 12,022 | 10,551,105 |



பங்குலாம் அறிவித்தல்
களனி டயர் ரூபா 2.50
ரெக்ஸ்யேட் பெர்ஷி ரூபா 0.90
எ சி ல் பிளாஸ்டிக் ரூபா 5.00
Call 0777 822 014 / 0777 105 205

சந்தைக் குறிகாட்டிகள்.

| | |
|---|---|
| கம்பனிகள் | 297 |
| பரிமாற்றத்தில் | 221 |
| விலை உழைப்பு | 10 |
| புத்தகப்பெறுமதி | 1.2 |
| பங்குலாப விளைவு | 3.3 |

## விஜயகலா...

அமைச்சர் விஜயகலா மகேஸ்வரனின் கருத்து தொடர்பிலான அறிக்கை ஓரிரு தினங்களில் சபாநாயகரிடம் கையளிக்கப்படும் என்று ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்தது.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தவில் நேற்று வியாழக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் உரையாற்றியபோதே ஐ.தே.கவின் இராஜாங்க அமைச்சர் எரான் விக்கிரமரத்ன மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்தாவது

தாம் வகித்துவந்த இராஜாங்க அமைச்சுப் பதவியிலிருந்து விஜயகலா விலகியுள்ள நிலையில், அவரது நாடாளுமன்ற உறுப்புரிமையும் நீக்கப்படவேண்டுமென எதிர்த்தரப்பினர் கோரி வருகின்றனர். அவ்வாறு தகுதி நீக்குவதற்குச் சட்டத்தில் இடமில்லை.

விஜயகலாவின் கருத்துத் தொடர்பான சகல விடயங்களும் சட்டமா அதிபருக்கு வழங்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் ஓரிரு நாட்களில சபாநாயகர் கரு ஜயசூரியவிடம் இது குறித்த முழுமையான அறிக்கை சமர்ப்பிக்கப்படும்.என்றார்.

யாழ்ப்பாணத்தில் வன்முறைகள் அதிகரித்துச் செல்வதை சுட்டிக்காட்டி, விடுதலைப்புலிகளின் அவசியம் தொடர்பிலான கருத்துகளை யாழில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் விஜயகலா தெரிவித்திருந்தார். இந்த விடயம் தென்னிலங்கை அரசியலில் பெரும் புயலைக் கிளப்பியிருந்தது. இதன் காரணமாக அவர் தமது இராஜாங்க அமைச்சுப் பதவியிலிருந்து விலகியிருந்தார். அவரின் கருத்துத் தொடர்பில் ஐ.தே.க. விசார ணைகளை மேற்கொண்டு வருகின்றது. (ஈ)

## நெடுங்கேணி...

ஐந்து பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். அவர்கள் இன்று வவுனியா நீதிமன்றில் முற்படுத்தப்படவுள்ள னர்.

வவுனியா, நெடுங்கேணியில் பட்டிக்குடியிருப்பு கிராம அலுவலர் பிரிவுக்கு உட்பட்ட இடத்தில் புதையல் தோண்டியபோதே இவர்கள் கைது செய்யப்பட்டனர். கைது செய்யப்பட்டவர்களில் தமிழரும், சிங்களவரும் அடக்கம் என்று தெரிவிக்கப்படுகின்றது.

பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலை அடுத்தே இவர்கள் கைது செய்யப்பட்டனர். இதனை அண்டிய பகுதிகளில் ஏற்கனவே சிலர் புதையல் தோண்ட முயற்சித்து அரைகுறையில் விட்டுச் சென்றிருந்தனர். அதனால் அந்தப் பகுதியைப் பொலிஸார் தொடர் கண்காணிப்பில் வைத்திருந்தனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

கைது செய்யப்பட்டவர்களிடம் ஆரம்ப விசாரணைகள் நடைபெறுகின்றன. இன்று அவர்கள் நீதிமன்றில் முற்படுத்தப்படுவார்கள் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ஈ-105)

## எதிரிகளின்...

இந்த மனுவை நேற்றுத் தாக்கல் செய்தார். கொலைக் குற்றச்சாட்டுள்ள சந்தேகநபர்களை ஒரு வருடத்துக்கு விளக்கமறியலில் வைக்க சட்டம் வரையறை செய்யும் அதே வேளை, தேவையேற்படின் மேலும் ஒரு வருடத்துக்கு அவர்களை விளக்கமறியலில் வைக்க மேல்நீதிமன்றில் சட்டமா அதிபர் கோர முடியும்.

இந்த வழக்கில் புலன்விசாரணைகள் நிறைவடையவில்லை. சந்தேகநபர்களைப் பிணையில் விடுவித்தால் அவர்கள் தலைமறைவாகக்கூடும். சாட்சிகளுக்கு அச்சுறுத்தல் வரலாம். சந்தேகநபர்களுக்கு மேலும் ஒரு வருடம் விளக்கமறியலை நீடிக்கவேண்டும் என்று அரசசட்டவாதி மனுவில் கோரினார்.

அதைப் பரிசீலித்த நீதிபதி, வழக்கின் முதல் அறிக்கை உள்ளிட்ட வழக்கின் நிலை பற்றி மன்றுக்கு அறிக்கையிடுமாறு கூறி மனு மீதான கட்டளையை எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

யாழ்ப்பாணம் நல்லூரில் கடந்த வருடம் இதே மாதம் 22ஆம் திகதி துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது. ஒரு பொலிஸ் பணியாளர் கொல்லப்பட்டார். மற்றொரு பொலிஸ் பணியாளர் படுகாயமடைந்தார். இந்தக் குற்றச்சாட்டில் சூடு நடத்தப்பட்ட மறுநாள் இருவரும் அதற்கும் மறுநாள் ஒருவருமாக மூன்று பேர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். (ஈ-4)

## வழி...

தார். நாடாளுமன்றத்தில் நேற்று புதிய அரசமைப்பு உருவாக்கப் பணி தொடர்பில் எழுந்த சர்ச்சையின் போது கருத்து வெளியிட்டபோதே அநுர இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்தாவது

வழிநடத்தும் குழுவின் தலைவராகத் தலைமை அமைச்சர் இருக்கின்றபோதும், அரசமைப்பு நிர்ணய சபையின் தலைவராக நீங்களே (சபாநாயகர்) பதவி வகிக்கின்றீர்கள். இது விடயத்தில் உங்கள் கரிசனை மிகவும் அவசியம்.

வழிநடத்தும் குழுவுக்கு ஒத்துழைப்பு வழங்குவதற்காகவே நிபுணர் குழு அமைக்கப்பட்டது. அடுத்தகட்ட கலந்துரையாடலுக்கான ஆவணமொன்றைத் தயாரிக்குமாறு நிபுணர் குழுவுக்கு வழிநடத்தும் குழுவால் அறிவிக்கப்பட்டிருந்தது.

நிபுணர் குழுவின் பொது இணக்கப்பாட்டின் அடிப்படையிலேயே அந்தப் பத்திரம் தயாரிக்கப்படவேண்டும். ஆனால், பொது இணக்கப்பாடு இல்லாமலேயே தயாரிக்கப்பட்டுள்ளது என்பது நேற்று (நேற்றுமுன்தினம்) புலனானது. ஒருசிலரின் ஆலோசனை மட்டுமே முன்வைக்கப்பட்டுள்ளது. இதனால், வழிநடத்தும் குழுவால் மேற்படி அறிக்கை நிராகரிக்கப்பட்டது.

பொது இணக்கப்பாட்டின் அடிப்படையில் பேச்சுக்கான பத்திரத்தை சமர்ப்பிக்க நிபுணர் குழுவுக்கு காலஅவகாசம் வழங்கப்பட்டுள்ளது. அதற்கப்பால் செய்வதற்கு இடமளிக்கப்படாது - என்றார். (ஈ)


அத கோடிபதி
சீட்டிழுப்பு வார: 316
வர்ணம்: ஊதா
சீட்டிழுப்பு திகதி 2018.07.19
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 51,859,710/-
வெற்றி இலக்கங்கள் 02 26 32 50 ஆங்கில எழுத்து I

சங்வர்தன வாசனாவ
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 161
சீட்டிழுப்பு திகதி 19.07.2018 வியாழக்கிழமை
ஆங்கில எழுத்து D
வெற்றி இலக்கங்கள் 01 16 48
விதி எண் 01
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 31, 734, 532/=
ஸ்வர்ண திலின

| | |
|---|---|
| யாழ்ப்பாணம் | 2490744 |
| குருநாகல் | 6384161 |
| கண்டி | 5251373 |
| திருகோணமலை | 7269989 |
| கொழும்பு | 7904783 |

2018.07.21 ம் திகதி சனிக் கிழமை சிவப்பு நிற டிக்கட்டுகள் சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
அபிவிருத்தி லொத்தர் சபை

ஜயோதா
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 1484 சீட்டிழுப்பு திகதி 19.07.2018
வெற்றி இலக்கங்கள் 26 46 55 70 ஆங்கில எழுத்து U
அடுத்த திங்கட்கிழமைக்கான ஜக்பொட் ரூ. 31, 362, 688 /=
தங்க ஜூலை
100,000 பரிசுகள்
விசேட வெற்றி இலக்கங்கள்

| விசேட வெற்றி இலக்கங்கள் | மாவட்டம் | விசேட வெற்றி இலக்கங்கள் | மாவட்டம் |
|---|---|---|---|
| 604 3930 | முல்லைத்தீவு | 024 2691 | புத்தளம் |
| 315 3673 | கண்டி | 958 0905 | அம்பாந்தோட்டை |
| 371 6224 | பதுளை | 332 0934 | நுவரெலியா |
| 936 4331 | குருணாகல் | 867 7782 | திருகோணமலை |
| 242 6775 | கொழும்பு | 305 9173 | மொனராகலை |

விசேட வெற்றி இலக்கம் 35474


## மரண அறிவித்தல்

### திருமதி விமலாதேவி சபாரட்ணம்



பிறப்பு 09.03.1942 இறப்பு 19.07.2018

யாழ். கலட்டி அம்மன் வீதி, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி விமலாதேவி சபாரட்ணம் நேற்று (19.07.2018) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் கண்ணம்மா தம்பதியரின் அன்புமகளும் காலஞ்சென்றவர்களான நல்லையா செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் சபாரட்ணத்தின் அன்புமனைவியும் தேவிகா (லண்டன்), ரூபிகா (யாழ். குப்பிளான் விக்கினேஸ்வரா மகாவித்தியாலய ஆசிரியை) ஆகியோரின் அன்புத்தாயும் காந்தரூபன் (லண்டன்), சதீஸ்வரன் (நீதிமன்றம், சாவகச்சேரி) ஆகியோரின் அன்பு மாமியும் மகேந்திரம், உருத்திரகுமார், இந்திரகுமார், கருணாநந்தன் காலஞ்சென்ற கமலாதேவி ஆகியோரின் அன்புச்சகோதரியும் டிலக்சன் (லண்டன்), டிலக்சி (லண்டன்) லக்சி (லண்டன்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.07.2018) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பி.ப 3 மணியளவில் கோம்பயன்மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

86, கலட்டி அம்மன் வீதி, யாழ்ப்பாணம்.

தகவல் : சதீஸ்வரன் (மருமகன்), 077 6544 723

## மரண அறிவித்தல்கள்

### செல்லையா குமாரவேலு (சிவலிங்கம்)



வராத்துப்பளையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா குமாரவேலு (சிவலிங்கம்) நேற்று (19.07.2018) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்புமகனும் சின்னையா தங்கம் தம்பதியரின் அன்புமருமகனும் யோகமலரின் அன்புக்கணவரும் காலஞ்சென்ற சிறிபாஸ்கரன் (டென்மார்க்) மற்றும் சுபாஸ்கரன் (டென்மார்க்), சசிகரன், பிரபாகரன் (கனடா) காலஞ்சென்ற உஷா ஆகியோரின் அன்புத்தந்தையும் வதனி, வனஜா, சுபாஜினி, லக்ஸிகா ஆகியோரின் அன்புமாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.07.2018) வெள்ளிக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று நண்பகல் 12 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக ஆனைவிழுந்தான் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் : குடும்பத்தினர்.

### பொன்னையா சிவசுதன்



சாவகச்சேரி வடக்கு மீசாலையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்டவரும் யா/மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரியின் முன்னாள் ஆசிரியரும், யா/சாவகச்சேரி அமிர்தாம்பிகை வித்தியாலயத்தின் தற்போதைய ஆசிரியருமான பொன்னையா சிவசுதன் கடந்த (18.07.2018) காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா விசாலாட்சி தம்பதியரின் அன்புமகனும் பூபாலசிங்கம் (சுவிஸ்), இந்திராதேவி, ஜெயபாலசிங்கம் (லண்டன்), தர்மலட்சுமி, சிவகுமார் (லண்டன்), சுபோதினி (கரைதுரைப்பற்று பிரதேச செயலகம்) ஆகியோரின் அன்புச்சகோதரரும் பாலகுமார், மகேந்திரம், ஜெயநந்தன் (முல்/மகாவித்தியாலயம்), சிவசோதி (சுவிஸ்), புஸ்பஞானதேவி (லண்டன்), வனிதா (லண்டன்) ஆகியோரின் அன்புமைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.07.2018) வெள்ளிக்கிழமை மு.ப. 10 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வேம்பிராய் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மருதடி வீதி, சாவகச்சேரி வடக்கு, மீசாலை.

தகவல் : இ. பாலகுமார் (மைத்துனர்), ந. மகேந்திரம் (மைத்துனர்) 077 604 8891

## அண்ணா அபாரம்

யாழ்ப்பாணம், ஜீலை 20
புத்தூர் கிராம சபையின் முன்னாள் தலைவர் அரியகுட்டியின் நூறாவது பிறந்த தினத்தை முன்னிட்டு நடத்தப்படும் கரப்பந்தாட்டத் தொடரில் கெருடாவில் அண்ணா அணி அரையிறுதி ஆட்டத்துக்குத் தகுதி பெற்றது.

புத்தூர் கலைமதி விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற காலிறுதியாட்டத்தில் கெருடாவில் அண்ணா விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து அச்சுவேலி கலைமகள் அணி மோதியது. 2:0 என்ற புள்ளிகளின் அடிப்படையில் அண்ணா அணி வெற்றி பெற்றது. (ம-23)

## வளர்மதி அணி நேர்செற் வெற்றி

யாழ்ப்பாணம், ஜீலை 20
அரியாலை திருமகள் சனசமூக நிலையத்தின் 66ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்பட்டுவரும் கரப்பந்தாட்டத் தொடரில் வளர்மதி அணி அரையிறுதிக்குத் தகுதி பெற்றது.

திருமகள் சனசமூக நிலைய மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற காலிறுதி ஆட்டத்தில் அச்சுவேலி ஸ்ரார் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து வளர்மதி அணி மோதியது. 25:15, 25:13 என்ற புள்ளிகளின் அடிப்படையில் முதலிரு செற்களையும் கைப்பற்றி நேர் செற் கணக்கில் வளர்மதி அணி வெற்றிபெற்றது. (ம-23)

## ஆவரங்கால் மத்தி அரையிறுதிக்குள்

அரியாலை திருமகள் சனசமூக நிலையத்தின் 66ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்படும் கரப்பந்தாட்டத் தொடரில் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழக அணி அரையிறுதிக்குத் தகுதி பெற்றது. ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து புத்தூர் சென்றல் ஸ்ரார் விளையாட்டுக் கழக அணி மோதியது. 2:0 என்ற நேர்செற் கணக்கில் வென்றது ஆவரங்கால் மத்தி. (ம-23)

# நேதாஜி கழகம் போராடி வெற்றி




யாழ்ப்பாணம், ஜீலை 20
வல்வை சைனிங்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் நடராசா வைத்திலிங்கம் ஞாபகார்த்தக் கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் நேதாஜி விளையாட்டுக் கழக அணி வென்றது.

வல்வை றெயின்போ விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் நேதாஜி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து இளங்கதிர் விளையாட்டுக் கழக அணி மோதியது. 1:0 என்ற கோல் கணக்கில் நேதாஜி விளையாட்டுக் கழக அணி போராடி வெற்றிபெற்றது. (ம-23)

## நவஜீவன்ஸ் அசத்தலாட்டம்

யாழ்ப்பாணம், ஜீலை 20
புத்தூர் கிராம சபையின் முன்னாள் தலைவர் அரியகுட்டியின் நூறாவது பிறந்த தினத்தை முன்னிட்டு நடத்தப்படும் மின்னொளியிலான கரப்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழக அணி அபார வெற்றி பெற்றது.

புத்தூர் கலைமதி விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற காலிறுதியாட்டத்தில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணி மோதியது. 2:1 என்ற புள்ளிகளின் அடிப்படையில் நவஜீவன்ஸ் அணி வெற்றிபெற்றது. (ம-23)



வடமாகாண கராத்தே போட்டியில் காட்டா, குமித்தே ஆகிய இரு பிரிவிலும் யாழ்ப்பாணம் வட இந்து ஆரம்பப் பாசாலை மாணவன் கி.ஹரிஸ் முதலிடம் பிடித்தார். (ம-67)

# அசத்தலாட்டத்தால் ரேவடி அணி வெற்றி

யாழ்ப்பாணம், ஜீலை 20
வல்வை சைனிங்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் நடராசா வைத்திலிங்கம் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் ரேவடி விளையாட்டுக் கழக அணி வெற்றிபெற்றது.

வல்வை றெயின்போ விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் தீருவில் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ரேவடி விளையாட்டுக் கழக அணி மோதியது. 3:0 என்ற கோல் கணக்கில் ரேவடி விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்றது. (ம-23)

### வடக்கு - கிழக்கு பிறீமியர் லீக்

## நோதேண் எலைட் - மாதோட்டை இன்று பலப்பரீட்சை செய்கின்றன

யாழ்ப்பாணம், ஜீலை 20
வடக்கு - கிழக்கு பிறிமியர் லீக் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் மின்னொளியில் இடம்பெற்று வருகின்றன. இந்த தொடரில் இன்று வெள்ளிக்கிழமை மாலை 6 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் நோதன் எலைட் எவ்.சி. அணியை எதிர்த்து மாதோட்டை எவ்.சி. அணி மோதவுள்ளது. இரவு 9 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் மன்னார் எவ்.சி. அணியை எதிர்த்து ரில்கோ கொங்கீயூரெர்ஸ் அணி மோதவுள்ளது. (ம-23)



# இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், ஜீலை 20

**கரப்பந்தாட்டம்**

புத்தூர் கிராம சபையின் முன்னாள் தலைவர் அரியகுட்டியின் நூறாவது பிறந்த தினத்தை முன்னிட்டு நடத்தப்படும் மின்னொளியிலான ஓவர் கேம் முறையிலான கரப்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் சில இன்று வெள்ளிக்கிழமை புத்தூர் கலைமதி விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெறவுள்ளன. இந்தத் தொடரில் மாலை 5 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் புத்தூர் வளர்மதி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து வரணி விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. இந்த ஆட்டத்தில் வெற்றிபெறும் அணி இரவு 7 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் உடுப்பிட்டி இமையாணன் விளையாட்டுக் கழக அணியுடன் மோதவுள்ளது. மாலை 6 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் வரணி இளைஞர் விளையாட்டுக் கழக பி அணியை எதிர்த்து புத்தூர் கலைமதி விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளத்து. மேற்படி ஆட்டத்தில் வெற்றிபெறும் அணி இரவு 8 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் உடுப்பிட்டி சிவகுமரன் விளையாட்டுக் கழக அணியுடன் மோதவுள்ளது.

**வசந்தசிறி வி.க.**
**தாச்சித் தொடர்**

சண்டிலிப்பாய் வசந்தசிறி விளையாட்டுக் கழகம் நடத்தும் தாச்சித் தொடரின் ஆட்டங்கள் குறித்த விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று வெள்ளிக்கிழமை இரவு 7.15 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் உதயசூரியன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சாந்தை விநாயகர் விளையாட்டுக் கழக ஏ அணி மோதவுள்ளது. தொடர்ந்து இரவு 8 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் வைகறை விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து தாவடிகாளி அம்பாள் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

**உதயதாரகை வி.க**
**கால்பந்துத் தொடர்**

கற்கோவளம் உதயதாரகை விளையாட்டுக் கழகம் நடத்தும் அணிக்கு 7 வீரர்கள் பங்குபற்றும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று வெள்ளிக்;கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சென். சேவியர் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. தொடர்ந்து மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் நக்கீரன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து புங்குடுதீவு சண் ஸ்ரார் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

**சைனிங்ஸ் வி.க.**
**கால்பந்தாட்டம்**



வல்வை சைனிங்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் நடராசா வைத்திலிங்கம் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் வல்வை றெயின்போ விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் றெயின்போ விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சைனிங்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

**திருமகள் சசநி**
**கரப்பந்தாட்டம்**

அரியாலை திருமகள் சனசமூக நிலையத்தின் 66ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு சதீஷ்குமார் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்காக நடத்தப்பட்டுவரும் கரப்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் அரியாலை திருமகள் சனசமூக நிலைய மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று வெள்ளிக்கிழமை இரவு 7 மணிக்கு இடம் பெறும் அரையிறுதியாட்டத்தில் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து புத்தூர் வளர்மதி விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (ம-23)

# ஓய்வை அறிவிக்கிறாரா நட்சத்திர வீரர் டோனி?

இந்திய அணியின் நட்சத்திர வீரர் டோனி ஓய்வை அறிவிக்கப் போகிறாரா என்பது தொடர்பில் தற்போது பெரும் எதிர்பார்ப்பு நிலவுகிறது.
இங்கிலாந்துக்கு எதிராக நேற்றுமுன்தினம் நடைபெற்ற இறுதி ஒருநாள் ஆட்டத்தில் இந்திய அணி தோல்விய டைந்ததை அடுத்து இங்கிலாந்து அணி தொடரை வென்றது. இந்தத் தொடரில் டோனியின் பெறுபேறு மோசமானதாக அமைந்தது என்று விமர்சிக் கப்படுகிறது. மூன்றாவது ஆட்டம் முடிந்த பின்னர் டோனி நடுவர்களிடம் இருந்து அந்த ஆட்டத்தில் பயன் படுத்திய பந்தைக் கேட்டுப் பெற்றார். இது தனது குறித்து தானே வெளிப்படுத்திய சமிக்ஞையா? என்று குழம்பி நிற்கின்றனர் கிரிக்கெட் விமர்சகர்கள்.
ஏனெனில், டோனி தனது இறுதி டெஸ்ட் ஆட்டத்தின் போது அந்த ஆட்டத்தில் பயன்படுத்திய இலக்கைக் கேட்டுப் பெற்றுக்கொண்டார். இதையடுத்து திடீர் என்று ஓய்வை அறிவித்தார். அன்று இலக்கு, இன்று பந்தா? என்று ஆச்சரியத்தில் ஆழ்ந்துள்ளது கிரிக்கெட் உலகம்.
எனினும், இதுபோன்ற தேவையற்ற விமர்சனங்கள் வேண்டாம் என்று கண்டித்துள்ளார் இந்திய அணி யின் தலைமைப் பயிற்சியாளர் ரவி சாஸ்திரி. "பந்தின் தேய்மானத்தை வைத்தும் ஆடுகளத்தைப் பற்றி அறி யலாம். அதற்காகவே டோனி நடுவரிடம் இருந்து பந் தைப் பெற்றார்" என்று தெரிவித்தார் ரவிசாஸ்திரி.
ஆனால், டோனி வழக்கம்போன்று எந்தக் கருத்தை யும் வெளியிடாமல் மௌனமாகவே உள்ளார். (ம)


> டோனி தனது இறுதி டெஸ்ட் ஆட்டத்தின்போது அந்த ஆட் டத்தில் பயன்படுத்திய இலக் கைக் கேட்டுப் பெற்றுக்கொண் டார். இதையடுத்து திடீர் என்று ஓய்வை அறிவித்தார். அன்று இலக்கு, இன்று பந்தா?






# மெய்ப்பட்டது கனவொன்று

## ரொனால்டோவுடனான ஒப்பந்தம் குறித்து யுவன்டாஸ் கழகம் நெகிழ்ச்சிக் கருத்து





கால்பந்தாட்ட உலகின் ஜாம்பவான் வீரர்க ளில் ஒருவராகக் கருதப்படும் ரொனால் டோவை ஒப்பந்தம் செய்தமையை தனது கனவு என்று குறிப்பிட்டது இத்தாலியின் யுவன்டாஸ் கழகம்.
போர்த்துக்கல் அணியின் தலைவரும் நட்சத் திர வீரருமான ரொனால்டோ கழகத்தைப் பொறுத்த மட்டில் ஸ்பெய்னின் ரியல் மட்ரிட் கழகத்துக்காக விளையாடி வந்தார். மட்ரிட் 2016, 2017, 2018ஆம் ஆண்டுகளில் ஐரோப்பியக் கழகங்களுக்கு இடையிலான தொடரில் கிண்ணம் வெல்ல ரொனால்டோ முக்கிய காரணமாக இருந்தார். முதன்மைக் காரணியாக இருந்தார் என்று சொன்னாலும் அதில் தவறில்லை. இந்த நிலையில் ரொனால்டோவுக்கும் ரியல் மட்ரிட் கழகத்துக் கும் இடையில் அண்மைக்காலமாக ஊதிய ஒப்பந்தப் பிரச்சினை நிலவியதாக தெரியவ ருகிறது. இதையடுத்து மட்ரிட்டில் இருந்து வெளியேறும் முடிவுக்கு வந்தார் ரொனால்டோ. அவரை வாங்குவதற்கு ஏகப் பட்ட கழகங்கள் போட்டிபோட்டன. சுமார் 100 மில்லியன் பவுண்டுகளை பரிமாற்றத் தொகையாகக் கொடுத்து யுவென்டாஸ் ஒப்பந் தம் செய்ய முன்வந்தது. இந்த ஒப்பந்தம் நேற்றுமுன்தினம் நிறைவேறியது. இதைய டுத்தே, ரொனால்டோவை ஒப்பந்தம் செய் ததை அடுத்து தனது மிகப் பெரிய கன வொன்று நிறைவேறியதாகக் குறிப்பிட்டது யுவென்டாஸ். யுவென்டாஸின் ரசிகர்கள் ஒன்றுதிரண்டு ரொனால்டோவுக்கு மகத் தான வரவேற்பு வழங்கினர்.
ரியல் மட்ரிட்டில் இருந்து ரொனால்டோ வெளி யேறியமை அந்த அணிக்குப் பெரும் பின்ன டைவு என்று கருதப்படுகிறது. ரொனால்டோ வெளியேறியுள்ளதால் மட்ரிட் பலவீனமடை யும் என்பது தொடர்பான மீம்ஸ்கள் சமூக வலைத்தளங்களில் கொட்டிக் கிடக்கின்றன. (ம)

# தேசியமட்ட கூடைப்பந்தாட்டம் யாழில் இன்று

யாழ்ப்பாணம், ஜூலை 20
44ஆவது தேசிய விளையாட்டு விழாவின் ஓர் அங்கமான இருபா லாருக்குமான கூடைப்பந்தாட்டம் யாழ்ப்பாண மாவட்டத்தில் இன்று ஆரம்பமாகிறது.
பழைய பூங்காவில் அமைந்துள்ள கூடைப்பந்தாட்டத் திடலில் காலை 7.30 மணிக்கு ஆரம்ப நிகர்வுடன் தொடர் ஆரம்பமாகிறது. இன் றைய ஆரம்பநாள் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக யாழ்ப் பாணம் மாவட்டச் செயலர் நா. வேதநாயகன் மற்றும் மதிப்புறு விருந்தினராக வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் சத்தியசீலன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ம-23)


# மட்ரிட் செய்தது வரலாற்றுத் தவறு!

"ரொனால்டோவை விற்கும் முடி வெடுத்தமை ரியல் மட்ரிட் நிர்வா கம் செய்துள்ள வரலாற்றுத் தவறு" என்று தெரிவித்தார் ரியல் மட்ரிட் கழகத்தின் முன்னாள் தலைவர் ரமோன்.
ஜுவென்டாஸுக்கு ரொனால் டோவை விற்ற ரியல் மட்ரிட் நிர் வாகத்தை பலரும் பல்வேறு விதமாக விமர்சித்து வரும் நிலை யில் இவ்வாறு தெரிவித்தார் ரமோன்.
"ரொனால்டோ நிகழ்கால ஜாம்ப வான். தற்போதுள்ள ஆகச் சிறந்த வீரர். அவர் தனது கனதிக் கும் திறமைக்கும் ஏற்ற ஆட் டத்தை கடந்த காலங்களில் வெளிப்படுத்தி வந்துள்ளார். இவ் வாறிருக்க ரொனால்டோவை விற்றுவிட்டமை ரியல் மட்ரிட் செய்த பெரும் தவறு. இதை வர லாற்றுப் பிழை என்றும் சொல் லிக் கொள்ளலாம். ரியல் மட்ரிட் கழகத்துக்காக ரொனால்டோ சிறந்த பெறுபேறை வெளிப்படுத் தியுள்ளார். இனிவரும் ஆட்டங்க ளில் மட்ரிட்டில் பெரியதொரு வெற்றிடம் ஏற்படும். அதை நிவர்த்திசெய்ய நீண்ட காலமாக லாம். நிவர்த்தி செய்யப்படாம லும்கூட போகலாம்" என்று ரமோன் மேலும் தெரிவித்தார். (ம)

# இந்தியாவைப் புரட்டியெடுத்து இங்கிலாந்து சம்பியன்



இந்தியாவுக்கு எதிரான மூன்றாவ தும் இறுதியானதுமான ஒருநாள் ஆட்டத்தில் வெற்றிபெற்று 2:1 என்ற அடிப்படையில் கிண்ணம் வென்றது இங்கிலாந்து. முன்ன தாக நடைபெற்ற ரி-20 தொடரை இந்தியா 2:1 என்ற கணக்கில் கைப்பற்றியிருந்த நிலையில், இதற்குத் தக்க பதிலடியாகவும் இது பதிவானது.
நேற்றுமுன்தினம் இந்த ஆட்டம் நடைபெற்றது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இங்கி லாந்து முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இந்தியாவின் ஆரம்ப வீரர்களாக ரோகித், தவான் இருவரும் களமிறங்கி னர். இரண்டு ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து ஏமாற்றினார் ரோகித் சர்மா. ஆனால் தவான், கோக்லி இருவரும் நிலை யான ஆட்டத்தை வெளிப்படுத்தி அணியைச் சரிவில் இருந்து மீட்டனர். அணி 84 ஓட்டங்க ளைப் பெற்றிருந்த நிலையில் ஆட்டமிழந்தார் தவான். அரைச்சதம் கடந்து 71 ஓட்டங்களுடன் போல்ட் முறையில் வெளியேறினார் கோக்லி. டோனி மத்திய வரிசையில் 42 ஓட்டங்களைச் சேர்த்தார். முக் கிய இலக்குகள் சரிந்ததால் ஏனைய வீரர்கள் நிதானித்தனர். முடிவில் 8 இலக்குகளை இழந்து 256 ஓட்டங்களைப் பெற்றது இந்தியா.
இங்கிலாந்துக்கு ஆரம்ப வீரர்க ளான வின்ஸ் 27 ஓட்டங்களை யும், பரிஸ்ரௌவ் 30 ஓட்டங்க ளையும் சேர்த்து வெற்றிக்கான அடித்தளத்தை அமைத்தனர். ரூட், மோர்கன் இங்கிலாந்தை மிகவும் பலப்படுத்தினர். வெற் றிக்கு வெகுதூரத்துக்கு அப்பால் அவர்கள் இந்தியாவை வைத்தி ருந்தனர். இருவரும் அரைச்ச தம் கடந்தனர். சதம் கண்டார் ரூட். பிறிதொரு இலங்கை இழக்காமல் இந்தி யாவைப் புரட்டியது இங்கிலாந்து. (ம)



இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட்

# பலமான வேகப்பந்து வரிசையுடன் அறிவிக்கப்பட்டது இந்திய அணி!



இங்கிலாந்துக்கு எதிரான நீண்ட டெஸ்ட் தொடருக்கான இந்திய அணி நேற்று முன்தினம் அறிவிக்கப்பட்டது. வேகப் பந்து வீச்சின் மட்டில் சிறப்புக் கவனம் செலுத்தி அணி அறிவிக்கப்பட்டுள்ளது. எனினும் புவனேஸ்வர் குமார் நீக்கப் பட்டமை அதிர் வலைகளை ஏற்படுத்தியுள்ளது.

இந்திய அணி இங்கிலாந்துக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டு விளையாடி வருகிறது. இந்த இரண்டு அணிகளுக்கும் இடையிலான ரி-20 தொடரை 2:1 என்ற அடிப்படையில் இந்தியாவும், ஒருநாள் தொடரை 2:1 என்ற அடிப்படையில் இங்கிலாந்தும் கைப்பற்றின. இதையடுத்து ஐந்து ஆட் டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடர் அடுத்த மாதம் முதலாம் திகதி ஆரம்பாகிறது. இங்கிலாந்து ஆடுகளங்கள் வேகப்பந்து வீச்சுக்குச் சாதகமானவை என்பது பரகசியம். இதனால் இந்திய அணி வேகப் பந்து வீச்சைப் பலப்படுத்தி தனது அணியை அறிவித்துள்ளது. அணியில் ஐந்து வேகப்பந்து வீச்சாளர்கள் இடம் பெற்றுள்ளனர். ஆனால் அவர்களில் ஒருவராக புவனேஸ்வர் குமார் இல்லை. ஆட்டத்தின் முதல் நாளில் இங்கிலாந்தின் ஆடுகளங்களில் திடீர் மேலெழும்பல் தன்மையும் திரும் பல் தன்மையும் இருக்கும். அத்தகைய ஆட்டங்களில் புவனேஸ்வர்குமார் சிறப்பாக வீசக்கூடியவர். எனவே அவரை அணியில் சேர்த்துக்கொண்டிருக்க வேண்டும் என்று விமர்சிக்கப்படுகிறது.

மற்றொரு பெரிய மாற்றமாக ரோகித் சர்மா நீக்கப்பட்டு பதில் வீரராக ஐ.பி.எல். தொடரில் கலக்கிய பன்ட் சேர்க்கப்பட்டார். ஐ.பி.எல். போன்ற குறுநேர 'காட்டடி' விளையாட்டில் சிறப்பாகச் செயற்பட்ட காரணத்தால் பன்ட் அணியில் சேர்த்துக்கொள்ளப்பட்டமை அபத்தம் என்றும் விமர்சிக்கப் படுகிறது. 'புக் ஸ்டைல்' என்று சொல்லப் படக்கூடிய ஆட்டம் டெஸ்டுக்கு இன்றியமையாதது. அது பன்டிடம் அறவே இல்லை என்பதும் கண்கூடு.

இந்திய அணி விவரம் - விராட் கோக்லி (தலைவர்), தவான், லோகேஸ் ராகுல், முரளி விஜய், சட்டீஸ்வர் புஜாரா, ரகானே, கருண் நாயர், டினேஸ் கார்த்திக், ரிஷப் பன்ட், ஆர்.அஸ்வின், ரவிந்திர ஜடேயா, குல்தீப் யாதவ், ஹார்திக் பாண்டியா, இசாந்த் சர்மா, முகம்மது சமி, உமேஷ் யாதவ், ஜஸ்பிரிட் பும்ரா, ஷர்துல் தாக்கூர்.

முதல் டெஸ்ட்டில் விளையாடும் பதினொருவர்கொண்ட உத்தேச அணி- விராட் கோக்லி (தலைவர்), தவான், முரளி விஜய், சட்டீஸ்வர் புஜாரா, ரகானே, டினேஸ் கார்த்திக், ஆர்.அஸ்வின், ஹார்திக் பாண்டியா, இசாந்த் சர்மா, முகம்மது சமி, உமேஷ் யாதவ்.

(ம)

போட்டிப் பரீட்சை வகுப்புகள்
சுகாதார முகாமைத்துவ உதவியாளர்
பிரதி சனி
மு.ப. 11.00 → பி.ப. 3.00 மணிவரை
முகாமைத்துவ உதவியாளர் தரம் III
வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை
பிரதி ஞாயிறு
9.00 → 1.00 மணிவரை
தொடர்புகளுக்கு
076 688 3394
D.M.I
(வெலிங்ரன் சந்தி)

விரைவு பொதிகள் சேவை
விசேட விலை குறைப்பு
UK- 550 /-Kg
கனடா-900 /-Kg
ஜேர்மனி-700 /-Kg
நெதர்லாந்து-700 /-Kg
(நிபந்தனைகளுக்குட்பட்டது)
• யாழ்ப்பாணம் • கிளிநொச்சி
• சாவகச்சேரி • மானிப்பாய்
• நெல்லியடி • பருத்தித்துறை
• வல்வெட்டித்துறை
0768226240
V2 TRAVELS

ALLIANCE FRANCAISE DE JAFFNA
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்
af பிரெஞ்சு மொழி
➤ பிரெஞ்சு கற்பதற்கு வடமாகாணத்தில் FRENCH EMBASSY கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் ALLIANCE FRANCAISE மட்டுமே.
➤ அங்கீகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)
➤ யாரும் படிக்கலாம்.
www.ambafrancelk.org
021 222 8093 61, கச்சேரி-நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.

## மரண அறிவித்தல்

### திருமதி அன்ரோனியா கிறிஸ்ரி

*(ஓய்வு பெற்ற ஆசிரியை - யா/ புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்)*



முள்ளிக்குளத்தைப் பிறப்பிடமாகவும், பிரதான வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அன்ரோனியா கிறிஸ்ரி (ஓய்வு பெற்ற ஆசிரியை- யா/புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்) நேற்று (19.07.2018) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செபஸ்ரியன் - அல்பிற்றா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான பிரான்சிஸ் - ரெபேக்கா தம்பதியரின் அன்புமருமகளும் காலஞ்சென்ற கிறிஸ்ரியின் அன்பு மனைவியும் சின்டியாவின் (ஆசிரியை- யா / சாவகச்சேரி இந்துக்கல்லூரி) அன்புத்தாயும் பிரகாசியம்மா, நீக்கிலஸ், றோசலின், புஸ்பம், சூசைதாசன், மேரி கிறேஸ் (ஆசிரிய ஆலோசகர் - மன்னார் கல்வி வலயம்) ஆகியோரின் மூத்தசகோதரியும் காலஞ்சென்றவர்களான லில்லி, கிறிஸ்பின், நோபட், அல்வினஸ், ஜெமயின், வினிபிறீடா ஆகியோரின் அன்பு மைத்துனியும் பிரதீபனின் (ASP Enterprise) பாசமிகு மாமியும் ஆரவியின் (மாணவி - யா/புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்) அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிச்சடங்கு இன்று (20.07.2018) வெள்ளிக்கிழமை பி.ப. 3 மணியளவில் யாழ். மரியன்னை பேராலயத்தில் இரங்கல் திருப்பலியுடன் நடைபெற்று பூதவுடல் கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

368/5, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

தகவல்: குடும்பத்தினர். 021 222 8263, 077 311 6079

## நீங்கா நினைவலைகள்

7 ஆம் ஆண்டு 8 ஆம் ஆண்டு



பிறப்பு 05.02.1933 இறப்பு 30.06.2011 பிறப்பு 04.06.1935 இறப்பு 16.08.2010

மாதகல் மேற்கைப் பிறப்பிடமாகவும், சங்கானை, பழைய தபால்கந்தோர் ஒழுங்கையை வசிப்பிடமாகவும் கொண்ட

### அமரர் வேலுப்பிள்ளை பூபாலசிங்கம் திருமதி பாக்கியம் பூபாலசிங்கம்

(காங்கேசன்துறை சிமெந்து கூட்டுத்தாபன முன்னாள் உத்தியோகத்தர்)

திதி: அபரபக்க சதுர்த்தசி (11.07.2018)

உங்கள் இருவரையும் தேடி ஊர் உலகம் தேடி
நாயாய் அலைகின்றோம் எப்போ கிடைப்பீர்கள்?
யாரைக் கேட்கிறது எங்கே ஆறுவோம்?

அம்மாவின் பிரிவுத்துயர் தாழாமல்
அவரோடு நீங்களும் சென்றது ஏன் தொடர்ந்து?
உங்கள் திருமண தினத்தன்று
அக்கினியில் நீங்கள் செய்துகொண்ட
சத்தியம் தான் காரணமோ?

வேதனைகள் வேர் வரை சென்றாலும்
விழுதுகளாய் எம்மைத் தாங்கினீர்கள்!
உங்கள் இருவரின் குரல் கேட்காமல்
பரிதவிக்கும் எங்கள் குமுறல்கள்
உங்கள் காதுகளில் கேட்கிறதா?

ஊர் விட்டு வந்து நம் சொந்த ஊருக்கு
திரும்ப முடியாமல் தவித்த தவிப்பும்
இப்போ ஊருக்கு போகு நிலை வந்தும்
போவதற்கு நீங்கள் இல்லையே அப்பா....

உயரங்கள் நாம் காண எம்
வாழ்க்கைப் பயணத்தில் துணையாய் இருந்த
ஈரிரண்டு கண்களையும் கண்கெட்ட
எமனுக்கோ பொறுக்கவில்லை

நாள்கள் வாரமாகி வாரங்கள் மாதமாகி
மாதங்கள் ஆண்டாகி போனாலும்
ஆறவில்லை எங்கள் துயர்
உங்கள் வார்த்தைகள் எம்மை வாழவைக்கும்
உங்கள் நினைவுகள் எம்மை வாழ்த்திடும்.
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

திதி: பூர்பக்க அட்டமி (20.07.2018)

அம்மா நீ சென்ற கணமும்
அம்மா நீ சொன்ன வார்த்தைகளும்
அம்மா நீ செய்த உன்னதங்களும்
அம்மா நீ தந்த நெறிகளும்
எம் நெஞ்சினில் என்றும் அழியாதம்மா
எழுகின்ற கேள்விகளுக்கெல்லாம்

நாளும் விடை தேடுகின்றோம் அம்மா!
எங்கள் வலிகளைத் தாங்க
யாருமே இல்லையம்மா
அப்பா அம்மா இல்லாத
அநாதைகளானோம் அம்மா
அந்த இறைவனே கண்ணீரைப் பரிசாகத் தந்து
மௌனம் காத்துகின்றார் அம்மா

அன்பு அம்மாவே!
கொடிய நோய் வடிவில் காலன்
கொன்றுவிட்டானே உங்களை
அன்று மாலைவரை நீங்கள் புரிந்த அன்பு மழை
இன்னும் எம் கண்முன்னே வந்து செல்லுதம்மா.....

நாடு கடந்து வந்து நாம் உங்களைக் கண்டு
நாளும் பொழுதும் மகிழ்ந்து இருந்த கணங்களும்
மருமகளையும், பேரப்பிள்ளைகளையும்
நீ கொஞ்சிக் குலாவிய தருணங்களும்
என்றும் உங்களை நினைவூட்டுகின்றது அம்மா.....
நீங்கள் எனக்காக கட்டிய வீடு
இன்று பாலைவனமாய் கிடக்கின்றது
நீங்கள் இன்று இருந்திருந்தால்
நீங்களாவது அந்த வீட்டில் இருந்திருப்பீர்களே அம்மா.....
உயிரைத் தந்து உடலில் சுமந்து
உலகில் வாழ உருவம் தந்த
தெய்வம் நீயம்மா!
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

மாதகல் மேற்கு, மாதகல்.

என்றும் உங்கள் நினைவுகளுடன்
குடும்பத்தினர்.
077 774 3185 (மகள்)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 20.07.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.